janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 ஜூலை 24 - 30 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 16






**எங்கெங்கு காணினும்!**

நமது மாநில மாநாடும், பேரணி, பொதுச் கூட்டமும் வெகு தூரத்தில் இல்லை; ஓரிரு வாரங்களே உள்ளன. மாவட்ட மாநாடுகள் >>>

ப 02



**அமித்ஷா பொய்களும்...**

உலகின் தலை சிறந்த கவிஞர்களில் ஒருவர் ஷெல்லி. அந்த மக்கள் கவிஞன், "அராஜகத்தின் முகமூடி" எனும் மாபெரும் >>>

ப 15



**படுகொலையா? தற்கொலைக்குத் தள்ளப்பட்ட கொலையா?**

முதலில் இந்த நோட்டீசை பாருங்கள்! படியுங்கள்!! பகிருங்கள்!!! விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி, சின்னசேலம் அருகில் கன்னியாமூரில் அமைந்துள்ள >>>

ப 03

## மின்கட்டண உயர்வை நிறுத்தி வைத்து

# மறுபரிசீலனை செய்க!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாடு அரசின் மின்துறை அமைச்சர், வீட்டு உபயோக மின்கட்டணம் உள்ளிட்ட அனைத்துவகை மின் கட்டணங்களையும் உயர்த்தி அறிவித்துள்ளார். உயர்த்தப்படும் மின் கட்டணத்திற்கு ஒப்புதல் கேட்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அறிவிப்பை வெளியிடும் போது "ஒன்றிய அரசின் நிர்பந்தத்தை" காரணம் காட்டியுள்ளார். தமிழ்நாட்டில் மின் கட்டணத்தை உயர்த்துமாறு ஒன்றிய அரசு 28 முறைக்கும் மேலாக கடிதம் எழுதியுள்ள தகவலை அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு போன்ற எரிபொருள் விலைகளை தொடர்ந்து உயர்த்தி வரும் ஒன்றிய அரசு, அண்மையில் மருந்து விலைகளை உயர்த்தியதுடன் தற்போது அரிசி, கோதுமை உள்ளிட்ட உணவு தானியங்களுக்கு ஜி.எஸ்.டி. வரி விதித்து வசூலிக்கத் தொடங்கியுள்ளது. ஒன்றிய அரசின் இந்தத் தொடர் விலை ஏற்ற நடவடிக்கைகளின் விளைவாக அனைத்து அத்தியாவசிய உணவு பொருள்களின் விலைகளும் கடுமையாக உயர்ந்துள்ளன. அடித்தட்டு மக்களின் கைகளுக்கு சில உணவுப் பொருட்களும், மருந்துகளும் எட்டாத உயரத்துக்கு சென்றுவிட்டன. இந்த நிலையில் தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசைக் காரணம் காட்டி மின்கட்டணத்தை உயர்த்துவது மக்கள் உணர்வில் எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். கொரோனா பெருந்தொற்றுப் பரவல் காலத்தில், தமிழ்நாடு அரசு கடன் வாங்கும் அளவை உயர்த்த வேண்டும் என்று ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்த போது, ஒன்றிய அரசின் மின் கட்டணக் கொள்கையை ஏற்க வேண்டும் என நிபந்தனை விதித்ததை மக்கள் மறந்து விடவில்லை. இந்தச் சூழலில் மின் கட்டணங்கள் உயர்த்தும் திட்டத்தை நிறுத்தி வைத்து, மறுபரிசீலனை செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## சக்தி மெட்ரிக்குலேசன்

# பள்ளியை அரசு ஏற்க வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்ன சேலம் அருகில் உள்ள கனியாமூர், சக்தி மெட்ரிக்குலேசன் தனியார் பள்ளியில், விடுதியில் தங்கி, பிளஸ் 2 பயின்று வந்த கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி ஸ்ரீமதி கடந்த 13.02.2022ஆம் தேதி மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பள்ளியில் இதேபோன்று மாணவிகள் 'தற்கொலை' செய்யும் சம்பவம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதை கருத்தில் கொண்டு காவல்துறை உறுதியான நடவடிக்கை மேற்கொண்டிருக்க வேண்டும். மாணவிகளுக்கு பாதுகாப்பாற்ற பள்ளியின் அங்கீகாரத்தை ரத்து செய்யுமாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பத்தாண்டுகளாக வலியுறுத்தி வருகிறது. அவ்வப்போது பள்ளியின் நடவடிக்கை கண்காணிக்கப்பட்டிருந்தால் இந்தச் சம்பவம் நடந்திருக்காது. உயிரிழந்த மாணவியின் பெற்றோர்கள், உறவினர்கள், பொதுமக்கள் 'மாணவி சாவில்' ஆழ்ந்த சந்தேகங்கள் ஏற்பட்டு, பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளனர். இது தொடர்பாக பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண அரசு தரப்பினர் முயன்ற நிலையில் பொதுமக்களை ஆத்திரமூட்டியது எது என்பது குறித்தும் அரசு விசாரித்து வெளிப்படுத்த வேண்டும். தொடர்ந்து சந்தேக மரணங்கள் ஏற்படும் பள்ளியை அரசு இன்னும் கூடுதல் எச்சரிக்கையோடு அணுகியிருக்க வேண்டும். இப்போது ஆத்திரமூட்டப்பட்ட மக்களால் ஏற்பட்ட நிகழ்வை, "வன்முறை மற்றும் "கலகமாக" சித்தரிப்பதும், பொது மக்கள் மீது கடுமையான சட்டப்பிரிவுகளில் வழக்குகளை பதிவுசெய்து, எல்லையற்று கைது செய்து வருவதும் சட்டம் ஒழுங்கு அமைதிக்கு வலுச்சேர்க்காது. மாணவியின் 'சாவு' குறித்த சம்பவம் குற்றப்புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. இருப்பினும் அந்த தனியார் பள்ளியை அரசு ஏற்பது மாணவர்கள் பாதுகாப்புக்கும், கல்வி மேம்பாட்டிற்கும் அவசியமாகும். இது தொடர்பாக தனியார் பள்ளி அமைப்புகளின் மிரட்டலுக்கு அரசு இடம் தரக்கூடாது. குற்றச் சம்பவம் குறித்து விரிவான விசாரணை மேற்கொண்டு எதிர்காலத்தில் குற்றச் சம்பவம் நிகழாமல் தடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

---



**தியாக வேள்வியில் புடம் போட்டு பெற்ற இந்திய சுதந்திரத்திற்கு இன்று ஆபத்து!**

**பெற்ற சுதந்திரத்தை பேணிப் பாதுகாப்போம்! திருப்பூரில் கூடுவோம்!**

**திருப்பூரில் ஆகஸ்ட் 6, 7, 8, 9 தேதிகளில் சங்கமிப்போம்!**

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு!**






# எங்கெங்கு காணினும்!

**பேரன்புமிக்க தோழர்களே!**

**நமது மாநில மாநாடும், பேரணி, பொதுச் கூட்டமும் வெகு தூரத்தில் இல்லை; ஓரிரு வாரங்களே உள்ளன.**

மாவட்ட மாநாடுகள் நிறைவு பெறவுள்ளன. நடந்திட்ட மாவட்ட மாநாடுகள் அனைத்தும் மிக வெற்றிகரமாக நடைபெற்றுள்ளன.

தொடக்க நாளில் அல்லது நிறைவு நாளில் பேரணி – பொதுக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

பேரணி – பொதுக் கூட்டங்கள் அனைத்தும் மிகுந்த எழுச்சியோடும், உற்சாகப் பெருக்கோடும் நடைபெற்றன.

மாநாட்டையொட்டி மாவட்டம் முழுவதும் சுவர், தட்டி, டிஜிட்டல் பேனர் என விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன.

மாநாட்டை பற்றி குறிப்பிடாமல், அந்தந்த மாவட்ட மக்களின் நீண்ட நெடுநாள் கோரிக்கைகளை முன்வைத்து விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன.

மாநாட்டையொட்டி மாநாடு நடைபெறும் நகரங்களில், நகர் முழுவதும் செங்கொடிகளாலும், செந்தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. நகர் முழுவதும் செங்கொடிகள் பட்டொளி வீசிப் பறந்ததை கண் குளிரக் கண்டு மகிழ்ந்தோம்.

ஒவ்வொரு மாநாட்டு பேரணியிலும் ஆயிரக்கணக்கானவர்கள் ஆண்களும், பெண்களும், இளைஞர்களும், உற்சாகப் பெருக்கோடு கலந்து கொண்டதும், குறிப்பாக இளைஞர்களும், மாணவர்களும் பங்கெடுத்தது, எதிர்காலத்தில் தலைமை தாங்கி வழி நடத்திட, ஆயிரமாயிரம் இளைஞர்கள் இருக்கின்றோம்! கவலை வேண்டாம் என்று எடுத்து இயம்புவதாக, நம்பிக்கை ஊட்டுவதாக இருந்தது.

நம்பிக்கை நட்சத்திரங்களே வாருங்கள், தலைமையேற்க வாருங்கள்!

ஒவ்வொரு மாநாட்டு பேரணியும், நதியைப் போன்ற நீண்டு செல்கின்றன.

**“காவிரி தென்பெண்ணை பாலாறு – தமிழ்**
**கண்டதோர் வையை பொருனை நதி – என**
**மேவிய யாறு பலவோடத் – திரு**
**மேனி செழித்த தமிழ்நாடு” (செந்தமிழ்)**

என பாரதி பாடியது போல காவிரி, தென்பெண்ணை, பாலாறு, பொருனை என நதிகளும், அதன் கிளை ஆறுகளும், வெள்ளப் பெருக்கெடுத்து கரை புரண்டு ஓடி கடல்களில் சங்கமிப்பது போன்று, ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெறும் பேரணிகளும் – நிறைவாக திருப்பூர் செங்கடலில் சங்கமிக்க இருக்கின்றன.

கொடி காத்த திருப்பூர் குமரன் நகரில் செஞ்சட்டை அணிந்த பட்டாளம், பெரும் பட்டாளம் கரங்களில் செங்கொடி ஏந்தி, முஷ்டியை உயர்த்தி போர்க்குரல் எழுப்பிட உள்ளது.

போர், போர், போர் யாருக்கான போர்? – யாருடன் போர்!

நாட்டு மக்களுக்காக நடக்கின்ற மகத்தான போர், ஏழை மக்களுக்கு, எளிய மக்களுக்கு, உழைப்பாளி மக்களுக்கு, தொழிலாளர் மக்களுக்கு, விவசாய மக்களுக்கு, இளம் தலைமுறைக்கு, மாணவச் செல்வங்களுக்கு, நம்மை ஈன்ற தாய்மார்களுக்கு, அவர்களின் ஒற்றுமைக்கு, அவர்களின் உயர்வுக்கு நடத்தப்படும் போர்!

வகுப்புவாதத்திற்கு, முதலாளித்துவத்திற்கு எதிராக நடைபெறும் போர்!

இப்போர் இனி தொடங்கப் போவது இல்லை, தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போராகும்!

போர் நாளுக்கு நாள் கூர்மையடைந்து வருகின்றது.

பாசிசம் மெல்ல மெல்ல ஒவ்வொன்றாய் கபளீகரம் செய்து வருகின்றது.

செல்லரித்துப் போன முதலாளித்துவம், தன்னை தற்காத்துக் கொள்ள படாதபாடு படுகின்றது.

தனது தோல்விகளை, தனது தொடர் தோல்விகளை ஒப்புக்கொள்ள மறுக்கிறது.

முதலாளித்துவ கொள்கைகளைப் பின்பற்றும் ஒவ்வொரு நாட்டிலும், வேலையின்மையும் – விலைவாசி உயர்வும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன.

விலைவாசியைக் குறைத்திட, கட்டுப்படுத்திட எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இவை ஏதோ அறியாமல் நடப்பவை அல்ல.

வேண்டுமென்றே, திட்டமிட்டே நடக்கின்றன. காரணம் முதலாளித்துவம் மேலும் மேலும் கொள்ளை இலாபம் பெற வேண்டும், முதலாளிகளின் சொத்துக்கள் பன்மடங்கு பெருகி கொண்டே இருக்க வேண்டும் – ஏழை, எளிய மக்கள் செத்து மடிய வேண்டும்!

முதலாளித்துவ பெருங்கொடுமையை, மக்கள் எப்போதும் பொறுமையுடன் ஏற்றுக்கொள்வார்கள் – தங்களின் தலையெழுத்து என தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வார்கள், நாம் அதிகார பீடத்தில் அட்டனக்கால் போட்டு அமர்ந்து கொள்ளலாம் என்ற இறுமாப்போடு அமர்ந்திருக்கிறார்கள்.

மக்களின் பொறுமைக்கும் எல்லை உண்டு, எல்லை மீறிப் போனால் நிலைமை எதிர்கொள்ள முடியாத எதிர்வினையாற்றும்.

ஆம் இலங்கை நாட்டு மக்களுக்கு, அந்நாட்டு அரசு இழைத்தது பெரும் கொடுமை.

இனக் கலவர தீ மூட்டி குளிர்காய்ந்திட்ட ராஜபக்சே வகையறாக்களின் கதி என்னவாயிற்று.

முழுக்க, முழுக்க அமெரிக்க ஏகாதிபத்தியத்தை நம்பி நாட்டை ஆண்டவர்களின் கதி என்னவாயிற்று?

அரசு பொறுப்பில், ஆட்சி அதிகாரத்தில் கொடிகட்டிப் பறந்தவர்கள் – இன்று ஓடுகின்றார்கள், தலைதெறிக்க ஓடுகின்றார்கள், ஓடிக் கொண்டே இருக்கின்றார்கள்; ஒதுங்க இடமின்றி ஓடிக் கொண்டே இருக்கின்றார்கள்.

மக்களையெல்லாம் அலற வைத்து, அவர்களின் அலறலைக் கேட்டு அகமகிழ்ந்தவர்கள், இன்று அலறித் துடித்து செய்வதறியாது அடைக்கலம் தேடி ஓடிக்கொண்டிருக்கிறார்கள்!

இலங்கை நாட்டு அதிபர் மாளிகையில் இன்று அதிபர் இல்லை – மாறாக அதிபர் மாளிகை உருவாக காரணமான மக்களின் கையில் இருக்கின்றது.

ஆயிரக்கணக்கான மக்கள் அதிபர் மாளிகையை சூழ்ந்து, தங்கள் கைவசப்படுத்திக் கொண்டார்கள்.

இன்று அதிகாரம் மக்களின் கைக்கு மாறிப் போய்விட்டது.

ஆணை பிறப்பித்தவர்கள் மக்களின் ஆணைக்காக காத்துக் கிடக்கின்றார்கள்.

இலங்கையில் நடைபெற்ற மக்களின் எழுச்சி இந்தியாவில் நடைபெறாது என்பதற்கு எவரும் உத்தரவாதம் அளித்திட இயலாது.

இலங்கை போன்று விலைவாசி உயர்வு ஒவ்வொரு நாளும் உயர்ந்து கொண்டே இருக்கின்றது. விலைவாசி உயர்வு விண்ணை முட்டுகிறது.

மக்களின் வாழ்க்கை சீரழிந்து சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றது.

இங்கே ஆளும் மோடி அரசு ஆணவத்தின் உச்சத்தில் உயர்ந்து நிற்கின்றது.

என்னை யாராலும், எவராலும் அசைக்க முடியாது என்ற ஆணவ பெருக்கோடு ஆட்சி புரிகின்றது.

இப்படித்தான் ராஜபக்சே வகையறாக்கள் ஆணவத்தோடு ஆட்சி புரிந்தார்கள் என்பதனை மோடியை உணரவைக்க நாள் குறித்தாகிவிட்டது.

அந் நன்னாள் தான் ஆகஸ்ட் திங்கள் ஒன்பதாம் நாள் – தோழர்களே அந் நன்னாளில்

**“ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா**
**உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா**
**களி படைத்த மொழியினாய் வா வா வா**
**கடுமை கொண்ட தோளினாய் வா வா வா**
**தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா**
**சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா**
**எளிமை கண்டிரங்குவாய் வா வா வா**
**ஏறுபோல் நடையினாய் வா வா வா”**

என நமது மீசைக்கார பாரதி முழங்கினானே! அவ்வாறு வா வா வா...!

உன்னை வரவேற்க திருப்பூர் மாநகரம் இருகரம் நீட்டி காத்து நிற்கின்றது.

வகுப்புவாத சக்திகளோடு தொடரும் போரின் ஒத்திகைதான் திருப்பூரில் நடைபெறும் மாபெரும் பேரணி–

மாவட்டம்தோறும் எங்கெங்கு காணினும் சிவப்புதான், சிவப்பு கொடிதான், சிவப்பு சட்டைதான்!

இவையனைத்தும் ஒருசேர சங்கமிப்பதுதான் திருப்பூர் பேரணி–

**மக்கள் விரோத,**
**ஜனநாயக விரோத,**
**சர்வாதிகார மோடி அரசே,**
**வெளியேறு, வெளியேறு!**

என்ற முழக்கம் –

நீ புறப்படும் இடம் தொடங்கி – வழியெங்கும் முழக்கமிட்டு, திருப்பூரில் ஓங்கி ஒலித்திடுவாய்!

எங்கெங்கு காணினும் சிவப்பு, திருப்பூர் நகரமே சிவப்பு–

**மீண்டும் சந்திப்போம். வணக்கம்.**

**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**



**அன்னிய ஆங்கில ஏகாதிபத்தியம் 60 ஆண்டுகளில் அழிக்க முயற்சி செய்ததை!**
**பாஜக அரசு ஆறு ஆண்டுகளில் செய்யத் துடிக்கிறது!**

**ஆகஸ்ட் 6, 7, 8, 9 இல் திருப்பூரில்**
**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்**
**மாநில மாநாடு**



- இளசை கணேசன்

# படுகொலையா? தற்கொலைக்குத் தள்ளப்பட்ட கொலையா?





**முதலில் இந்த நோட்டீசை பாருங்கள்! படியுங்கள்!! பகிருங்கள்!!!**

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி, சின்னசேலம் அருகில் கன்னியாமூரில் அமைந்துள்ள சக்தி மெட்ரிகுலேஷன் பள்ளியில்...

- கடந்த சில வருடங்களாக கொடுமைகள், ஒழுக்கக் கேடுகள் நடந்து வருகின்றன.
- ஏழை, எளிய பிள்ளைகள் எதிர்காலக் கனவு குழிதோண்டி புதைக்கப்படுகிறது.
- பள்ளி நிர்வாகத்தின் அலட்சியம், அநியாயங்கள் தலைவிரித்து ஆடுவதை அளவிட முடியாது.
- நெஞ்சைப் பிளக்கும் வகையில் பிஞ்சு உள்ளங்களில் நஞ்சை விதைக்கிறார்கள்.
- மாணவர்கள் நாள்தோறும் சொல்லொணா துயரங்களுக்கு ஆளாகும் அளவுக்கு பள்ளியின் நிலைமை மோசமாகி வருகிறது.
- வியாபார நோக்கில் செயல்படும் இந்தப் பள்ளி மாணவர்கள் கல்விக் கட்டணத்தை தாமதமாக செலுத்தினால் தண்டிக்கப்படுகிறார்கள்.
- கடுமையான வெயிலில் முட்டி போட வைக்கப்படுகிறார்கள். கைதிகளை தண்டிப்பது போல் அறையில் பூட்டி வைக்கப்படுகிறார்கள்.
- மாணவர்கள் விடுதியில் தங்க வைக்க கட்டாயப்படுத்தப் படுகிறார்கள்.
- பாதுகாப்பற்ற முறையில் மண் தரையில் உணவு கொடுத்து உட்கார வைக்கப்படுகிறார்கள்.
- அரசு நிர்ணயித்துள்ள கல்விக் கட்டணத்தை விட பல மடங்கு அதிகம் வசூலிக்கப்படுகிறது.
- படிப்புக்கு சம்பந்தமில்லாத பல்வேறு கட்டணங்கள் மிரட்டி வசூலிக்கப்படுகின்றன.
- பள்ளியின் கொடுமைகளை எதிர்த்துக் கேட்டால் மாணவர்கள் மிரட்டப்படுகிறார்கள். தண்டனைக்கு உள்ளாக்கப் படுகிறார்கள்.
- மாணவர்களின் டி.சி. கேட்டு வரும் பெற்றோர்கள் அலைக் கழிக்கப்படுகிறார்கள். அவமதிக்கப்படுவதும், அபராதம் விதிக்கப்படுவதும் நடக்கிறது.
- பள்ளியின் நிர்வாக சீர்கேடுகள், ஒழுக்கக் குறைவான நடவடிக்கைகள் குறித்து புகார் தெரிவித்தால் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பதில்லை.
- அதிகாரிகளின் அலட்சியத்தால் விலை மதிக்கமுடியாத மாணவர்களின் உயிர்கள் பலியாவது அதிகரித்து வருகிறது.
- 2003 ஜனவரியில் அம்மகளத்து கிராம மாணவர்களை ஏற்றிச்சென்ற இப்பள்ளியின் வாகனம் மோதியதால் பல மாணவர்கள் படுகாயம் அடைந்தனர்.
- 2004 ஜூன் மாதம் இப்பள்ளியில் 7 ம் வகுப்பு மாணவன் ஆர்.ராஜா ஆசிரியை பயமுறுத்தல் காரணமாக மனமுடைந்து பூச்சி மருந்து குடித்தான்.
- லட்சக்கணக்கில் செலவு செய்யப் பட்டும் வாய் பேச முடியாமல் மனநிலை பாதிக்கப்பட்டான்.
- 2005 டிசம்பர் 8 ல் நெஞ்சை உருக்கும் வகையில் 4வயது எல்.கே.ஜி. மாணவி பிரதிக்ஷா மீது வாகனம் ஏற்றி கொல்லப்பட்டாள்.
- மாநிலத்தில் முதலிடத்தை இப்பள்ளி பெற வேண்டும் என்பதற்காக யாக பூஜைக்கு மாணவர்கள் நரபலி கொடுக்கப் படுகிறார்கள் என்று ஊர் மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

நேற்று ராஜா
இன்று பிரதிக்ஷா
நாளை யாரோ!

இப்படி கொலைவெறி சிந்தனையும், மூடநம்பிக்கையும், உயிர்களை காவு வாங்கும் விதமாக செயல்படும் இப்பள்ளியின் அங்கீகாரத்தை உடனே ரத்து செய்ய வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், 29.12.2005 ல், சின்ன சேலம் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தின் பிரச்சார நோட்டீஸ் தான் இது.

சக்தி மெட்ரிகுலேஷன் பள்ளியின் கொடுமைகளை எதிர்த்து 2005 அன்றே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி குரல் எழுப்பி போராடியது.

அரசாங்கம் அன்றே இதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் அன்று முதல் இன்று வரை இது போன்ற பிரச்சனைகள் நடந்திருக்காது.

இதே பள்ளியில் கடந்த 13.7.2022 புதன்கிழமை பிளஸ்டு படிக்கும் மாணவி ஸ்ரீமதி சந்தேகத்திற்கிடமான முறையில் மரணமடைந்துள்ளார்.


மரணமடைந்த மாணவியின் தாயார் நீதிகேட்டு கதறிய கதறல் சமூக ஊடகங்களில் வைரலாகப் பரவி அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது.

இது தற்கொலையா? அல்லது கொலையா?

பொதுவாக தற்கொலைகள் தானாக நடக்காது. தற்கொலைக்கு தள்ளப்படுவதால் நடக்கிறது.

எனவே இது கொலையா? அல்லது தற்கொலைக்குத் தள்ளப்பட்ட கொலையா? என்பதே சரியானது.

மாணவியின் மரணத்திற்காக, பெற்றோருக்கு ஆதரவாக



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

சின்னசேலம். கனியாமூர், சக்தி மெட்ரிக்குலேசன் பள்ளியின் அங்கீகாரத்தை ரத்து செய்யக்கோரி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

29.12.2005 ... 2.30 ...

K.ஜான்பாஷா. ... பொன்.முருகேசன். ஒன்றிய து. செயலாளர்

கண்டன உரை:

தோழர். A.V.ஸ்டாலின்மணி மாவட்ட செயலாளர் · தோழர். சுரேஷ் மோகன் மாநில குழு உறுப்பினர் · தோழர். K.ராமசாமி நகரச்செயலாளர் · தோழர். A.P.பெரியசாமி

தோழர். சி.தண்டபாணி மாவட்டக்குழு உறுப்பினர் · தோழர். S.ராஜசேகரன் த.வி.சங்க பொருளாளர் · தோழர். த.மணி கண்ணு B.A.B.L. வழக்குரைஞர்

மற்றும் தோழர்கள்

பன்னீர்செல்வம் ஒ.து.செயலாளர் · K.கலைகதிர் கி.செய.நயினார்பாளையம் · R.செல்வராஜ் கி.செய. எலியத்தூர் · R.கோவிந்தன் கி.செய.ஈசாந்தை · K.முத்துசாமி

A.முருகேசன் தலைவர் · S.நடேசன் செயலாளர் · R.மாரிமுத்து கி.செய.மரவானத்தம் · A.நாராயணன் கீழ்குப்பம் · சி.சின்னசாமி து.சி.செயலாளர்

A.லெனின் கி.பொருளாளர் · R.ராஜீ சின்னசேலம் நகரம்.

நேற்று ராஜா! இன்று பிரதிக்ஷா! நாளை யாரோ?

நன்றியுரை K.சக்கரவர்த்தி ஒன்றியக் குழு உறுப்பினர்.

இவண் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI) சின்னசேலம் ஒன்றிய குழு.விழுப்புரம் மாவட்டம்

உறவினர்கள், உள்ளூர்க்காரர்கள், வேப்பூர், பெரிய நாசலூர் மக்கள், ஊரை சுற்றியுள்ள அமைப்புகள், அரசியல் கட்சிகள் என்று குரல் எழுப்பப்பட்டன.

இதன்பின்பே மாணவியின் மரணம் 'சந்தேக மரணம்' என்று வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்தப் போராட்டம் இல்லையென்றால் சந்தேக மரணமாக பதிவு செய்யப்பட்டு இருக்காது.

ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்கள் அமைதியான முறையில் நடந்த போராட்டம் அதற்குப் பிறகு வன்முறை வடிவம் எடுத்திருக்கிறது.

காவல்துறை டி.ஐ.ஜி., ஒரு எஸ்.பி. உள்ளிட்ட 52 காவலர்கள் காயமடைந்துள்ளனர்.

வாகனங்கள் எரிக்கப்பட்டன. பள்ளியின் பல பாகங்கள் அடித்து நொறுக்கப்பட்டன.

- சம்பவ இடத்திற்கு டி.ஜி.பி. விரைந்தார்.
- 70 பேர் கைது.
- மாணவி மரணம் மாநில குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை (சிபிசிஐடி) விசாரணைக்கு மாற்றம்.
- மீண்டும் பிரேத பரிசோதனை!
- மாவட்ட ஆட்சித் தலைவர் ஸ்ரீதர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வகுமார் ஆகியோர் மாற்றம்.
- சிபிசிஐடி துப்புத் துலக்கியதில் சில தடயங்கள்.

என்றவாறு நடந்தேறியுள்ளது.

"வன்முறை திட்டமிட்டதா? எதார்த்தமானதா? இதன் பின்னணியில் யார்?"

என்று நீதிபதி கேள்வி எழுப்புகிறார். ஊடகங்களும் இந்தக் கேள்வியை எழுப்புகிறது.

பள்ளி நிர்வாகம்,
மாவட்ட ஆட்சி நிர்வாகம்,
மாவட்ட காவல்துறை.

இவைகள் நடந்துகொண்ட முறை தான் அமைதிப் போராட்டம் வன்முறையாக மாறக் காரணம்.

பள்ளி நிர்வாகம் வெளிப்படையாக நடந்து கொள்வதற்கு பதிலாக மாணவியின் தாயார் மீது குற்றம் சுமத்த துணிகிறது.

உயிரைப் பறிகொடுத்த தாய்க்கு ஒப்பாரி வைக்கக் கூட உரிமை இல்லையா?

மாவட்ட ஆட்சி நிர்வாகமும் மாவட்ட காவல்துறையும்...

வன்முறைக்கு பின்பு எடுத்த துரித செயல்பாடுகள் அதற்கு முன்பே...

செய்திருந்தால் வன்முறையை தவிர்த்திருக்க முடியும்.

மரணத்திற்கு மனமிரங்குதல், காலதாமதமின்றி, பொறுப்பை உணர்ந்து செயல்படுதல்,

வெளிப்படைத்தன்மை, கைது, குற்றப் பதிவு, விசாரணை, நிவாரணம்...

என்று துரிதகதியில் செயல்பட்டிருந்தால் வன்முறை நிகழ்ந்து இருக்குமா?

ஏன் இப்படி செயல்படவில்லை? இதன் பின்னணியில் யார்? என்பதே கேள்வி!

தனியார் கல்வி நிறுவனங்களில் அரசியல்வாதிகள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் ஆளும் கட்சியினர் அல்லது ஆண்ட கட்சியினர்.

அரசியல்வாதிகள் அல்லாத தனியார் கல்வி நிறுவனங்களை நடத்துபவர்கள் ஆளும் அல்லது ஆண்ட கட்சிகளுக்கு ஆதரவு தருகிறார்கள்.

இதுதான் ஆணவப்போக்கு, அதிகாரத் திமிர் போன்றவற்றிற்கு காரணமாக அமைகிறது.

சக்தி மெட்ரிகுலேஷன் பள்ளி 1998 ல் துவங்கப்பட்டது. பள்ளியின் தாளாளர் ரவிக்குமார் ஆர்எஸ்எஸ் அமைப்பின் முக்கிய பிரமுகர்.

2001 – 2006 மற்றும் 2011 – 2021 அதிமுக ஆட்சியிலும் 2014 முதல் இன்றுவரை ஒன்றிய பாஜக ஆட்சியிலும் இந்த சக்தி மெட்ரிகுலேஷன் பள்ளி ஆழமாக காலூன்றியது.

இந்த பள்ளியில் அவ்வப்போது ஆர்எஸ்எஸ் பயிற்சி முகாம்கள் நடைபெற்றுள்ளன.

2003 முதல் இன்றுவரை இப் பள்ளியில் நடைபெற்ற பல்வேறு சம்பவங்கள் மர்மங்கள் நிறைந்தவையாக உள்ளன.

இத்தகைய சம்பவங்களும் பள்ளியின் ஆதிக்கத் திமிரும் அந்தப் பகுதி மக்களிடையே அவ்வப்போது கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் கோபாவேசங்கள் ஒன்று திரண்டு இப்போது மாணவி மரணத்தில் எதிர் வினையாற்றி உள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம், கேளம்பாக்கத்தில் சிவசங்கர் பாபாவுக்கு சொந்தமான சுஷில்ஹரி பள்ளி மாணவிகளுக்கு, சிவசங்கர் பாபா பாலியல் தொல்லை கொடுத்த போதும்...

சென்னை அசோக் நகரில் உள்ள பத்மா சேஷாத்ரி பள்ளி ஆசிரியர் ராஜகோபாலன் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த போதும்...

**வாய்மூடி ஊமையாக இருந்த தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை இப்போதும் வாய் மூடி ஊமையாக இருக்கிறார்.**

மரணம் அடைந்த மாணவி ஸ்ரீமதி இந்துவாக இருந்தாலும் பள்ளியின் தாளாளர் ரவிக்குமார் ஆர்.எஸ்.எஸ். முக்கிய புள்ளியாக இருப்பதே இதற்குக் காரணம்.

அண்ணாமலை அடிக்கடி தூவும் விஷமம் இன்று அவரை நோக்கித் திரும்புகிறது.

"தன் வினை தன்னைச் சுடும்"

மாணவியின் மரணம் மத ரீதியிலும், சாதி ரீதியிலும் விமர்சிக்கப்படுவது தேவை இல்லாத ஒன்று.

இது அவரவர் அடையாள அரசியலுக்கு பயன்படலாம். பிரச்சினையின் அடிப்படையை தீர்க்க உதவாது.

- மாணவி ஸ்ரீ மதியின் மரணத்தில் உண்மையை சிபிசிஐடி வெளிக் கொண்டுவர வேண்டும்.
- மரணம் குறித்து எழுப்பப்படும் கேள்விகளுக்கு விடை கிடைக்க வேண்டும்.
- மரணம் நிகழ்ந்தது 13ஆம் தேதி 5:30 மணியா? அல்லது 12 ஆம் தேதியே நடந்ததா?

பிரேதம் பொய் சொல்லாது! இரண்டாவது பிரேதப் பரிசோதனை உண்மையை உணர்த்துமா?

இதே பள்ளியில் இதற்கு முன் 7 பேர் இறந்துள்ளார்கள் என்ற குற்றச்சாட்டு குறித்த உண்மை வெளிவர வேண்டும்!

தொடர்புக்கு: 82204 68816

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 16

# கல்விக் கூட மரணங்கள்

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரும், காவல்துறை மாவட்ட கண்காணிப்பாளரும் ஒரு வழியாக 19/7/2022 அன்று பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். கள்ளக்குறிச்சி, கன்னியாமூர் சக்தி சக்தி மெட்ரிக் பள்ளி தாளாளர், செயலாளர், முதல்வர், இரண்டு ஆசிரியர்கள் ஆகியோர் 18/7/2022ல் கைது செய்யப்பட்டனர்.

பள்ளி விடுதியில் தங்கி, பிளஸ் 2 வகுப்பில் படித்து வந்த ஸ்ரீமதி என்ற மாணவி 13/7/2022 அன்று காலை, விடுதியில் மூன்றாவது மாடியில் இருந்து விழுந்து தரையில் கிடந்ததை, விளக்கு அணைக்க வந்த காவல் ஊழியர் பார்த்ததாகவும், அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றதாகவும், அங்கு வரும்போதே இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்ததாகவும் சொல்லப்படுகிறது.

இது குறித்த தகவல் மாணவியின் பெற்றோருக்கு முன்னுக்கு பின் முரணாக சொல்லப்பட்டிருக்கிறது. மாணவியின் தாய் 13 ஆம் தேதியே மாவட்ட ஆட்சியரிடம் இதுகுறித்து புகார் தெரிவித்திருக்கிறார். ஐயத்துக்கிடமான வகையில் இந்த மரணம் நிகழ்ந்து இருக்கிறது. விசாரணை நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

வந்த உடல் கூறு அறிக்கையின்படி, 13ஆம் தேதி அதிகாலையில் அல்ல, பன்னிரண்டாம் தேதி இரவே மரணம் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

12ம் தேதி இரவு, பள்ளி விடுதியின் 2வது மாடியில் நடந்த சிறப்பு வகுப்பில் அந்த மாணவி கலந்து கொண்டு, பின்பு மூன்றாவது மாடிக்கு படி ஏறி செல்வதை சிசிடிவி கேமரா காட்டுவதாக கூறுகிறார்கள். ஒருவேளை அப்போதே விழுந்திருந்தால், மறுநாள் காலை வரை அது பள்ளி நிர்வாகத்திற்கு தெரியாமலேயே போனது என்று பேசுவது அர்த்தமற்றது.

இதன் தொடர்ச்சியாக, பல்வேறு தகவல்கள் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டுள்ளன. சுவரொட்டிகள் ஊரெங்கும் ஒட்டப்பட்டு இருக்கின்றன. 17/7/2022 அன்று பள்ளிக்கு முன்பாக ஒரு ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கான அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. ஊர் பொதுமக்கள் ஏராளமானவர்கள் திரண்டு இருக்கிறார்கள். அமைதியாக தொடங்கிய ஆர்ப்பாட்டம், நேரம் செல்ல செல்ல வன்முறை திசையில் திரும்பி இருக்கிறது. போதிய முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் இல்லாததால், காவல் தடையரண்களை உடைத்துக் கொண்டு கூட்டம் உள் நுழைந்து இருக்கிறது. பேருந்துகள், அறைகலன்கள் நாசப்படுத்தப்பட்டுள்ளன. தடுக்க முடியாத சூழலில் காவல்துறை செயலிழந்துவிட்டது. காவலர்களும் தாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

உயர் நீதிமன்றம் தலையிட்டு, மறுமுறை உடற்கூராய்வு செய்ய உத்தரவிட்டிருக்கிறது. விசாரணையை சிபிசிஐடி மேற்கொள்வது போதாதென, தனியாக காவல் துறை அதிகாரிகளின் குழு ஒன்றை நீதிமன்றமே அமைத்தும் இருக்கிறது.

ஒரு போலீஸ்காரர் தாக்கப்பட்டாலே ஊரைச் சுற்றி வளைத்து, வாழ்நாளில் மறக்க முடியாத வகையில் பெரும் அச்சுறுத்தலை உருவாக்கி விடும் பிரிட்டிஷ் மாடல் காவல்துறை, டி.ஐ.ஜி. உட்பட இத்தனை காவலர்கள் தாக்கப்பட்டு இருப்பதை பார்த்த பிறகு தன்போக்கில் நடவடிக்கைகளைத் தொடர்வார்கள். இதுவரையில் 200க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

இது போன்ற பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் இத்தகைய சந்தேக சாவுகள் நிகழ்வது தொடர்ந்து கொண்டே இருக்கிறது. பல வழக்குகள் நடந்து இருந்தாலும் எதிலும் தீர்ப்பு வருவதில்லை. இந்தப் பள்ளியிலும், இது போன்ற நிகழ்வு ஏற்படாமல் போயிருந்தால், இந்த விஷயமும் கமுக்கமாக முடிந்திருக்கும்.

தவறுக்கு எதிராக இன்னொரு தவறு செய்வது தீர்வல்ல. வெஞ்சினமும் பாரபட்சமும் கொண்ட வன்முறை அழிக்குமே தவிர எதையும் உருவாக்காது.

ஆயினும் இது போன்ற நிகழ்வுகளை பொதுவெளியில் கொண்டு வருவதற்கு பெரும் போராட்டம் தேவைப்படுகிறது. மாவட்ட நிர்வாகத்திடம் மனு கொடுப்பது, காவல்துறையிடம் அனுமதி பெற்று ஓரமாக நின்று ஆர்ப்பாட்டம் செய்வது, உண்ணாவிரதம் இருப்பது போன்ற செயல்பாடுகள் அதிகார வர்க்கத்தால் பெரிதாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. அதன் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்ற உணர்ச்சிபூர்வ உந்துதல் ஏற்படுவதும் இல்லை. இவற்றையெல்லாம் செய்வதற்கான உரிமையை அரசியலமைப்புச் சட்டம் உங்களுக்கு வழங்கித் தொலைத்து இருக்கிறது. ஆகவே மிகுந்த பெருந்தன்மையோடு அதை அனுமதித்து விட்டோம் என்று மட்டுமே கருதுகிறார்கள்.

வன்முறையில் ஈடுபட்டவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நிகழ்வின் போதும் அது பற்றி பேசுவதும், பின்னர் கடந்து செல்வதுமாக இருக்கும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதே நேரத்தில் தனியார் கல்விக்கூடங்களில், இதுவரை நடந்துள்ள ஐயத்துக்கிடமான மரணங்கள் அனைத்தையும் ஆய்வு செய்வது அவசியமானது. காரணங்களை கண்டறிந்து, அந்தக் கல்விக் கூடங்களுக்கு, கூடுதல் விதிமுறைகளை அரசு உருவாக்கி செயல்படுத்த வேண்டும்.

-ஆனந்த் பாசு

# முகமது ஜுபைருக்கு ஜாமீன்



**2018 ஆம் ஆண்டில் இடப்பட்ட ஒரு ட்வீட் தொடர்பான வழக்கில் ஆல்ட் நியூஸ் (Alt News) இணை நிறுவனர் முகமது ஜுபைருக்கு தில்லி நீதிமன்றம் ஜூலை 15 அன்று ஜாமீன் வழங்கியது.**

"ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு விமர்சன எதிர்ப்புக் குரல் அவசியம். எனவே, எந்தவொரு அரசியல் கட்சியையும் வெறுமனே விமர்சித்ததற்காக இந்திய தண்டனைச் சட்டம் 153A(பகைமையை ஊக்குவிப்பது) மற்றும் 295A (மத உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் வேண்டுமென்றே தீங்கிழைக்கும் செயல்கள்) பிரிவுகளைப் பயன்படுத்துவது நியாயமானதல்ல" என்று நீதிமன்றம் கூறி உள்ளது.

நீதிமன்றம் ஜுபைருக்கு ரூ.50,000 பத்திரம் மற்றும் அதற்கு இணையான ஒரு உத்தரவாதத்தின் மீது ஜாமீன் வழங்கி உள்ளது. மேலும் நீதிமன்றத்தின் அனுமதியின்றி அவர் நாட்டை விட்டு வெளியேறக்கூடாது என்றும், அவரது கடவுச்சீட்டை (Passport) மூன்று நாட்களுக்குள் காவல்துறையிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

அவருடைய ட்வீட், ஹிந்துக்களின் மத உணர்வுகளைப் புண்படுத்தியதாக செய்யப்பட்ட சமூக ஊடகப் புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட ஒரு முதல் தகவல் அறிக்கையின்படி, கடந்த ஜூன் 27 அன்று தில்லி காவல்துறையினரால் ஜுபைர் கைது செய்யப்பட்டார்.

இந்த சர்ச்சைக்குரிய ட்வீட்டில், 'ஹனிமூன் ஹோட்டல்' என்பதிலிருந்து 'ஹனுமான் ஹோட்டல்' என்று மாற்றியிருந்தார். 1983 ஆம் ஆண்டு மத்திய திரைப்படச் சான்றிதழ் வாரியம் (Central Board of Film Cerification) அனுமதி வழங்கிய 'கிஸ்ஸி சே நா கெஹ்னா' எனும் திரைப்படத்தில் இருந்து, ஒரு படம் உபயோகப்படுத்தப்பட்டது. இந்தப் படத்தைப் பதிவு செய்து, அதனுடன், சுபைர் "2014 க்கு முன்: ஹனிமூன் ஹோட்டல்/ 2014க்குப் பின்: ஹனுமான் ஹோட்டல்" என்று பதிவு செய்திருந்தார்.

இந்த வழக்கில் ஜுபைருக்கு ஜாமீன் வழங்கிய கூடுதல் அமர்வு நீதிபதி தேவேந்தர் குமார் ஜங்காலா, விண்ணப்பதாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட ஜுபைர், "2014க்கு முன் மற்றும் 2014க்கு பின்" என்ற வார்த்தைகளை ஒரு அரசியல் கட்சியைச் சுட்டிக்காட்டவே பயன்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. இந்திய ஜனநாயகத்தில் அரசியல் கட்சிகள் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் இல்லை. ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு விமர்சன எதிர்ப்புக் குரல் அவசியம், என்று பதிவு செய்துள்ளார்.

டெல்லிபோலீஸ் வழக்கில் அந்தப் பத்திரிகையாளருக்கு ஜாமீன் கிடைத்துள்ள போதும், உத்தரபிரதேச மாநிலத்தில் அவருக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்டுள்ள 6 முதல் தகவல் அறிக்கைகளிலும், ஜாமீன் கிடைக்கும் வரை அவர் தற்போதுள்ள சிறையில்தான் இருக்க வேண்டும். இந்த ஆறு வழக்குகளில், மூன்றில் (அதாவது ஹத்ராஸ், லக்கிம்பூர் கெரி மற்றும் சீதாபூர் வழக்குகளில்) ஜுபைர் கைது செய்யப்பட்டுள்ளார். சீதாபூர் வழக்கில், அவருக்கு உச்சநீதிமன்றம் இடைக்கால ஜாமீன் வழங்கினாலும், ஹத்ராஸ் மற்றும் லக்கிம்பூர் கெரி வழக்குகளால், அவர் தற்போது நீதிமன்றக் காவலில் உள்ளார்.

ஜுபைரின் வழக்கறிஞர்கள் ஏற்கனவே உத்தரபிரதேசத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கைகளை ரத்து செய்யக் கோரி அல்லது அவற்றை ஒன்றாக இணைத்து டெல்லி நீதிமன்றத்திற்கு மாற்றுவது குறித்து, உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

இந்த ட்வீட் மீதான வழக்கைப் பொறுத்தவரை, தீங்கிழைக்கும் நோக்கமின்றி, ஒரு ஹோட்டல் அல்லது நிறுவனத்திற்கு ஹிந்துக் கடவுளின் பெயரைக் குறிப்பிடுவதில் எந்தக் குற்றமும் இல்லை என்றும், ஹிந்து மதம் பழமையான, மிகவும் சகிப்புத்தன்மை வாய்ந்த மதம் என்றும் நீதிபதி கூறியுள்ளது குறிப்பிடத் தக்கது.

மேலும், "குற்றம் சாட்டப்பட்டவரின் ட்வீட் 2018 ஆம் ஆண்டில் செய்யப்பட்டது என்பதைக் குறிப்பிடுவதுடன், 2022 ஆம் ஆண்டு வரையிலும், தற்போதைய முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும் தேதி வரை, குற்றம் சாட்டப்பட்டவரின் ட்வீட் மீது ஹிந்து சமூகத்தை புண்படுத்துகிறது அல்லது அனுமனுக்கு அவமரியாதை காட்டுவதாக உள்ளது என்று வேறு எந்த புகாரும் வரவில்லை." என்றும் கூறியுள்ளார்.

சர்ச்சைக்குரிய ட்விட், படித்தவரின் மனதைப் புண்படுத்தியதன் அடிப்படையில் டெல்லி காவல்துறை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருந்தாலும்,

**"இன்று வரை விசாரணையின் போது அந்த ட்விட்டால் புண்படுத்தப்பட்டதாகச் சொல்கின்ற அந்த நபரின் அடையாளத்தை நிறுவக் காவல்துறை தவறிவிட்டது. மேலும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 161 இன் கீழ் அவர் வாக்குமூலத்தைப் பதிவு செய்யவும் தவறிவிட்டது." என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.**

அயல்நாட்டு நன்கொடைகள் சட்டத்தின் பிரிவு 35 இன் கீழ், பின்னர் சேர்க்கப்பட்ட குற்றச்சாட்டைப் பொறுத்தவரை, ஜுபைரும் அவரது நிறுவனமான ஆல்ட் நியூஸ்ம், அயல்நாட்டு நன்கொடைகள் சட்டத்தின் கீழ், எந்தவொரு வெளிநாட்டு பங்களிப்பையும் பெறுதலைத் தவிர்ப்பதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டவரின் வழக்கறிஞர் களுடைய வாதத்தினை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

"தாங்கள் வெளிநாட்டுநிதி பெறுவதில்லை" எனத்தமது இணையதளத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதாகவும், வெளிநாட்டு நிதி பெறுவதற்குத் தமது பணப் பட்டுவாடா நுழைவாயில் (payments gateway) செயலூக்கப்படவில்லை என்றும் ஊடகவியலாளர் ஜுபைர் சமர்ப்பித்துள்ளார். மேலும், ஒருவர் தான் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்ற தகவல், நிரந்தர கணக்கு எண் (Permanent Account Number) மற்றும் இதர விவரங்களை வெளியிடாதவரை, தன்னுடைய இணையதளம் நன்கொடை அளிக்க அனுமதிக்காது என்றும் அவர் தகவல் சமர்ப்பித்திருந்தார்.

ஜுபைரை ஐந்து நாட்கள் காவலில் வைத்து ஏற்கனவே போலீசார் விசாரித்துள்ளனர் என்று குறிப்பிட்ட நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் விசாரணைக்கு, முன்னிலையில் இருக்க வேண்டும் என்று நிரூபிக்கப்பட்டாலன்றி, அவரது சுதந்திரத்தைப் பறிப்பது தண்டனையாகக் கருதப்பட வேண்டும் என்கிற உச்ச நீதிமன்றத் தீர்ப்பைக் கோடிட்டுக் காட்டி, ஜாமீன் மறுப்பதன் நோக்கம் தண்டிப்பதாக இருக்கக் கூடாது என்று கூறி உள்ளது.

ஊடகவியலாளர் ஜுபைரின் கைது நடவடிக்கை உலகெங்கும் பேசுபொருளாக மாறியுள்ள நிலையில், தில்லி நீதிமன்றம் ஜாமீன் வழங்கியும், உத்திரப் பிரதேச வழக்குகளால் அவர் நீதிமன்றக் காவலில் நீடிக்கும் நிலையே உள்ளது, இவர் மீதான வழக்குகள் ஊடக உலகின் மீது கூடுதல் வெளிச்சம் பாய்ச்சி உள்ளது.

தொடர்புக்கு – **9444183310**

# ஆளுநர் ரவியை கண்டித்து மதுரையில் ஆர்ப்பாட்டம்



மதுரை காமராஜர் பல்கலைக்கழக 54வது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக மு.வ.அரங்கில் நடைபெற்றது. இந்த விழாவில் மாநில ஆளுநர் அரசியலை புகுத்துவதாலும் தமிழக அரசுக்கே தெரியாமல் தன்னிச்சையாக விழாவை நடத்துவதாலும் பட்டமளிப்பு விழாவை தமிழக அரசு புறக்கணித்தது. பொதுவாக பல்கலைக்கழகங்களில் பட்டமளிப்பு விழாவை, அந்த பல்கலைக் கழகத்தின் நிர்வாகம் நடத்துவது தான் வழக்கம், அதாவது துணைவேந்தர் உள்ளிட்டவர்கள்தான் நடத்துவது என்பது அனைத்து பல்கலைக் கழகங்களிலும் இருக்கின்ற நடைமுறை. அதன் அடிப்படையில் தான் பட்டமளிப்பு விழா 53 ஆண்டுகளாக நடைபெற்று வந்தது. இந்தாண்டு கௌரவ விருந்தினரை அழைக்கிறோம் எனக் கூறி ஒன்றிய அமைச்சர் எல்.முருகனை அழைத்து ஆளுநர் ஆர்.என்.ரவி பேசவைத்தார். இதனால் மதுரையில் ஆங்காங்கே போராட்டம் நடைபெற்றது.

இதனைக் கண்டித்து மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அருகே திருவள்ளூர் சிலை முன்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சந்தனம், மார்க்சிஸ்ட் விஜயராஜன், புரட்சிகர இளைஞர் முன்னணி குமரன், தமிழ் புலிகள்கள் கட்சி ச.பேரறிவாளன், அண்ணா திராவிட முன்னேற்ற கழக நிறுவனர் பசும்பொன்பாண்டியன், எஸ்.டி.பி.ஐ கட்சியை சேர்ந்த சிக்கந்தர், மக்கள் அதிகாரம் நடராஜன் உள்ளிட்ட பல்வேறு இயக்கத்தினர் கலந்து கொண்டு மதுரைக்கு வருகை தரும் ஆளுனர் ரவியை கண்டித்து முழக்கங்கள் எழுப்பினர். இதனைத்தொடர்ந்து ஆர்ப்பாட்டம் செய்த 30 க்கும் மேற்பட்டோரை காவல்துறையினர் கைது செய்தனர்.




- த.அறம்


# நோக்க, நோக்க களியாட்டம்!

**‘இயற்கை’ பொருள்களால் ஆனது என்பதை மையமாகக் கொண்ட பொருள் முதல்வாத தத்துவத்திற்கு வலு சேர்க்கும் வகையில் ஒரு விஞ்ஞான கண்டுபிடிப்பு நடந்துள்ளது. 14 நாடுகள் சேர்ந்து, பல்லாயிரக்கணக்கான விஞ் ஞானிகளும், தொழில்நுட்ப வல்லுநர்களும் இணைந்து உருவாக்கி, 2021 டிசம்பர் 25ஆம் தேதி விண்ணிற்கு அனுப்பி வைக்கப்பட்ட “ஜேம்ஸ் வெப்” என்னும் தொலைநோக்கி விண்வெளியை பற்றிய பல அரிய புகைப்படங்களை படம்பிடித்து அனுப்பி உள்ளது.**







இந்த பிரபஞ்சம் 1380 கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஒரு அடர்த்தி மிகுந்த முதன்மையான நுண்ணிய அணு வெடித்து சிதறி உருவானதாக விஞ்ஞான ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அந்த வெடிப்பு நடந்த போது ஒரு சக்தி வாய்ந்த மின்னல் தோன்றியது; அதனுடைய வெப்பம் 10,000 கோடி டிகிரி செல்சியஸ் ஆக இருந்தது; அந்த வெடிப்பினால் ஏற்பட்ட சிதறல்கள் இந்த பிரபஞ்சம் முழுவதும் எல்லா திசைகளிலும் வினாடிக்கு பல்லாயிரக்கணக்கான கிலோமீட்டர் வேகத்தில் விரிந்தது; ஒரு நிமிடத்தில் இந்த பிரபஞ்சம் ஒரு லட்சம் கிலோமீட்டர் சுற்றளவுக்கு விரிந்தது; இன்றளவும் அந்தத் துகள்கள் விரிவடைந்து கொண்டே செல்கிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்த பெருவெடிப்பினால் ஏற்பட்ட வெப்பம், துகள்கள் விரிவடைய, விரிவடைய படிப்படியாக குறைய ஆரம்பித்தது. இது 1000 கோடி டிகிரி செல்சியஸ் ஆக இருக்கும் போது புரோட்டான், நியூட்ரான், எலக்ட்ரான் என்னும் அணுத் துகள்கள் தோன்றின. 3 நிமிடங்களில் பெருவெடிப்பின் வெப்பம் 100 கோடி டிகிரி செல்சியஸ் ஆக குறைந்தது. அந்த நிலையில் தான் புரோட்டான்களும் நியூட்ரான்களும் இணைந்து அணுக்கருக்கள் உருவாகின.

விரிவடைந்து கொண்டே சென்ற பிரபஞ்சம் 3 லட்சம் ஆண்டுகளை கடந்த போது தான் அதனுடைய வெப்பநிலை 3000 டிகிரி செல்சியஸ் ஆக குறைந்தது. இந்த நிலையில் தான் எலக்ட்ரான்கள் அணுக்கருக்கவுடன் இணைந்து அணு உருவாகியது. மூன்று லட்சம் ஆண்டுகள் முதல் 10 லட்சம் ஆண்டுகளுக்கு உள்ளாக பெரும்பாலான அணுக்கள் உருவாகின.

பெருவெடிப்பு நடந்து சுமார் 30 லட்சம் ஆண்டுகள் முதல் 30 கோடி ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் அணுக்கள் ஒன்று சேர்ந்து ஏராளமான வாயு மேக மண்டலங்கள் தோன்றின. இதை “நெபுலா” என்று அழைப்பர். “நெபுலா” என்பது மேகத்தைக் குறிக்கும் இலத்தீன் மொழிச் சொல். ஒவ்வொரு மேக மண்டலத்தின் மையத்திலும் வாயு கூட்டங்கள் ஈர்ப்பு விசையால் ஒன்றிணைந்து நட்சத்திரங்கள் உருவாகின.

இது பெருவெடிப்பு நடந்து 400 முதல் 500 கோடி ஆண்டுகளில் நிகழ்ந்தது. நமது சூரியனும் அவ்வாறு உருவாகிய ஒரு நட்சத்திரம்தான். சூரியன் 500 கோடி ஆண்டுகளுக்கு முன்பாக தோன்றியது. இந்த பூமி கிரகத்தில் 370 கோடி ஆண்டுகளுக்கு முன்பாக உயிரினங்கள் தோன்ற ஆரம்பித்தன. அந்த உயிரின தோற்றத்தின் உயர்ந்த பரிணாம வடிவம்தான் மனிதர்களாகிய நாம்.

**பெருவெடிப்பு நடந்த போது விரிவடைந்த துகள்கள் இன்றும் விரிவடைந்து சென்று கொண்டே இருக்கிறது என்று ஐரோப்பிய விஞ்ஞானி ஜார்ஜ் லெமிரேட் கூறினார். அவர் ஒரு கத்தோலிக்க பாதிரியார். அவ்வாறு விரிவடைந்து கொண்டிருக்கும் பிரபஞ்சத்தின் முதல் துகள்களை நம்மால் இன்று காண முடியுமா? என்பதே அறிவியல் உலகத்திற்கு முன் வைக்கப்பட்ட கேள்வியாக இருந்தது. காண முடியும், படங்களை பாருங்கள் என்று “ஜேம்ஸ் வெப்” தொலைநோக்கி ஒளி படங்களை எடுத்து அனுப்பி உள்ளது.**

நம் கண்களுக்கு புலப்படாத அலை நீளம் கொண்ட ஒளிகள், புறஊதா மற்றும் அகச்சிவப்பு கதிர்கள் இருப்பதாக 1800 ஆம் ஆண்டு வாக்கில் கண்டறியப்பட்டது. இதை பயன்படுத்தி பொருள்களை துல்லியமாக கண்டறியும் தொழில்நுட்பம் 1950 ஆம் ஆண்டுகளுக்கு மேல் வளர்ச்சி பெற்றது. இன்று நாம் பயன்படுத்தும் கண்காணிப்பு கேமராக்களில் இந்த அகச்சிவப்பு கதிர்வீச்சை கண்டறியும் தொழில்நுட்பம்தான், இருட்டில் ஆள் நடமாட்டத்தை துல்லியமாக படம் பிடித்து காட்டுகிறது.

அமெரிக்காவும், சோவியத்யூனியனும் புற ஊதாக் கதிர்களை கண்டறியும் டெலஸ்கோப்புகளை விண்ணிற்கு அனுப்பி வைத்தன. அது அனுப்பிய படங்களில் அதிக தொலைவில் உள்ள கிரகங்கள், தூசிகள் மற்றும் வாயு கூட்டங்களால் சரியாக தெரியவில்லை. அதன் பின் 1990களில் “ஹபிள்” என்னும் தொலைநோக்கி பூமியின் சுற்றுவட்ட பாதையில் நிலைநிறுத்தப்பட்டது. இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட அளவு தூரத்தில் உள்ள விண்மீன் கூட்டங்களைத்தான் அறிய முடிந்தது.

இதனுடைய அடுத்த கட்டமாக “ஜேம்ஸ் வெப்” தொலை நோக்கியை அனுப்பும் திட்டம் தயாரிக்கப்பட்டது. 20 ஆண்டுகளாக இந்த தயாரிப்பு பணிகள் நடந்தன. 6.5 மீட்டர் விட்டம் கொண்ட ஒரு பெரிய தொலைநோக்கி கண்ணாடி தயாரிக்கப்பட்டது. இந்த கண்ணாடியை அருங்கோணம் வடிவிலான 18 பகுதிகளாக ஒட்ட வைத்தனர். ராக்கெட்டில் செலுத்தும் போது மடித்து வைத்துக் கொள்ளுமாறு தயாரித்தனர். இதை சூரியனிலிருந்து வரும் வெப்பத்திலிருந்து பாதுகாக்க ஐந்து அடுக்குகளால் ஆன சூரிய வெப்ப தடுப்பு தகடுகளை அமைத்திருந்தனர். அதன் பரப்பளவு ஒரு டென்னிஸ் மைதானம் அளவிற்கு இருந்தது. அதனுடைய தடிமன் ஒரு ரோமத்தின் தடிமன் அளவிற்கு இருந்தது.

பொருளிலிருந்து வெளிவரும் கதிர்வீச்சை பிரித்தறியும் ஸ்பெக்ட்ராஸ்கோபி என்னும் கருவியும் இணைக்கப்பட்டது. இந்த தொலைநோக்கி மிகக் குறைந்த அளவு வெப்ப நிலையில், அதாவது 270 டிகிரி செல்சியஸில் செயல்படும் போது, துல்லியமான படங்களை அனுப்ப முடியும் என்பதால் குளிரூட்டும் கருவிகள் இணைக்கப்பட்டிருந்தன.

இதையெல்லாம் எடுத்துச் செல்ல விண்வெளி ஓடம் ஒரு பள்ளி பேருந்தின் எடை அளவிற்கு உருவாக்கப்பட்டிருந்தது. இந்த பொருள்கள் அனைத்தும் காகிதங்களை மடித்து உருவங்களை செய்யும் ஜப்பானிய தொழில்நுட்பமான “ஆரிகாமி” உதவியுடன் மடித்து ராக்கெட்டுக்குள் வைக்கப்பட்டது. பின்னர் ஏரியான்5 என்ற ராக்கெட் மூலம் தென் அமெரிக்காவில் உள்ள பிரெஞ்ச் கயானாவில் இருந்து விண்ணிற்கு செலுத்தப்பட்டது. பூமியிலிருந்து 10 லட்சம் மைல்கள் பயணித்து சூரிய வட்டப்பாதை எல்.2 ல் நிலை நிறுத்தப்பட்டது. இந்த இடத்தில்தான் குறைந்த அளவு ஆற்றலைக் கொண்டு இயக்க முடியும். அந்த தேவைப்படும் ஆற்றலையும் சூரிய ஒளியிலிருந்து தயாரிக்குமாறு தகடுகள் வடிவமைக்கப்பட்டிருந்தன. சுருக்கி மடக்கப்பட்ட விஞ்ஞானக் கருவிகளை எல்லாம் விரித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர ஆறு மாதங்கள் ஆனது.

இந்த “ஜேம்ஸ் வெப்” தற்போது படங்களை அனுப்பி வருகிறது. ஒரு படத்தில் பெருவெடிப்பில் முதன் முதலில் வெளியானத் துகள் விரிந்து பறக்கும் காட்சியை படம் பிடித்து காட்டியுள்ளது. இதுவரை கருத்து முதல்வாதிகளான, மதவாதிகள் தங்களுடைய கடவுள்தான் இந்த உலகத்தை படைத்தார் என்னும் கட்டுக்கதைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

மற்றொரு படத்தில் தென்புலத்தில் உள்ள மேகக் கூட்டங்களுக்குள் இரண்டு நட்சத்திரங்களும் அதில் ஒன்று ஆயுள் முடிந்து வெண்குள்ளனாக மாறிவிட்ட நிலையையும் காட்டுகிறது. மற்றொரு படத்தில் கரீனா மேக கூட்டத்தினுள், புதிதாக உருவாகும் நட்சத்திர கூட்டங்கள் மிக துல்லியமாக தெரிகின்றன. மற்றொன்றில் ஸ்டீபனின் ஐந்து விண்மீன் கூட்டங்கள் துல்லியமாக தெரிகிறது? இது மேலும் நீராவி மூலக்கூறுகள் உள்ள கோள்கள் இந்த பிரபஞ்சத்தில் வேறு எதுவும் உள்ளதா என்பதையும் எதிர்காலத்தில் நமக்குத் தெரிவிக்கும்.

2027இல் “ரோமன்” என்ற தொலைநோக்கி விண்ணில் நிலை நிறுத்தப்பட உள்ளது. அது “ஜேம்ஸ் வெப்”ஐ விட நூறு மடங்கு பெரியது. இந்த தொலைநோக்களின் மூலம் நாம் இதுவரை அறியாத விண்வெளி ரகசியங்களை எல்லாம் எதிர்காலத்தில் அறிய இருக்கிறோம் என்ற நம்பிக்கை உருவாகி உள்ளது.

“காக்கை குருவி எங்கள் ஜாதி, நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்,
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை,
நோக்க, நோக்க களியாட்டம்!”


என்ற பாரதியின் கூற்றுப்படி மனிதர்களும், மற்ற உயிரினங்களும், இந்த பூமியில் உள்ள ஜடப் பொருள்களும், விண்வெளியில் உள்ள கிரகங்கள், நட்சத்திரங்கள், மேகக் கூட்டங்கள், பொருட்கள், அணுக்கள், அணுத் துகள்கள், ஒளி, கதிர்கள், வெப்பம் யாவும் ஒரு பெருவெடிப்பில் இருந்து பிறந்தவைகளே. அந்தப் பெரு வெடிப்பின் துகள்களை காணும் போது பாரதியின் களியாட்டம் நம்மையும் தொற்றிக் கொள்கிறது.

தொடர்புக்கு: 94432 44633

# இடதுசாரி மாணவர், இளைஞர் கூட்டமைப்பு சார்பில் ஆர்ப்பாட்டம்!

தேனி மாவட்டம் வீரபாண்டியில் அமைந்துள்ள சௌராஷ்ட்ரா கல்லூரியில் ஆர்.எஸ்.எஸ்.சின் கிளை அமைப்பான பாரதீய பண்பாட்டு கழகம் சார்பில் இளைஞர்களின் வாழ்வை சீரழிக்கும் அக்னிபாத் திட்டத்திற்கு ஆதரவாக மூன்று நாள் பயிற்சி முகாம் நடைபெற்றதைக் கண்டித்து தேனி மாவட்ட இடதுசாரி மாணவர் இளைஞர் கூட்டமைப்பு சார்பில் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் இரா.தமிழ் பெருமாள் தலைமையில் நடைபெற்றது. கல்லூரி நிர்வாகத்திற்கு ஆதரவாக தேனி மாவட்ட காவல்துறை மாணவ, இளைஞர் தோழர்களை வலுக்கட்டாயமான முறையில் இழுத்துச் சென்று கைது செய்து வீரபாண்டி முருகன் மண்டபத்தில் அடைத்தனர்.

இப்போராட்டத்தில் வாலிபர் சங்க மாவட்ட செயலாளர் செ.முனீஸ்வரன், மாவட்ட தலைவர் கே.ஆர்.லெனின், ஆர்.ஒய்.ஏ. மாவட்ட செயலாளர் எஸ்.எஸ்.எம்.உதுமான்அலி, மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் செ.ஆனந்த், மாணவர் சங்க மாவட்ட செயலாளர்



எம்.வேல்பிரகாஷ், மாவட்ட தலைவர் டி.நாகராஜ், இளைஞர் பெருமன்ற மாவட்ட துணைச் செயலாளர் சு.சரவணபுதியவன், மாணவர் பெருமன்ற மாவட்ட துணைச் செயலாளர் மு.ஹரிகரன் உள்ளிட்ட அமைப்புகளை சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர்.

## கல்வித்துறையில் எதிர்நோக்கும்

# மாற்றங்கள்

- மணி கணேசன்



**தமிழ்நாடு அரசு தொடர்ந்து கல்வித்துறைக்கு, மாணவர்களுக்கு 14 வகையான நலத்திட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகிறது. அவற்றுள் பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள், கணித உபகரணப்பெட்டி, வண்ண எழுதுகோல்கள், உலக வரைபடப் புத்தகம் போன்றவை மிகவும் தரமானவையாக இருக்கிறது.**

தரமற்ற, எளிதில் கிழிந்து விடக்கூடிய, அளவு சரியில்லாத இலவச சீருடைகளுக்கு மாற்றாக நல்ல தரமான, இரண்டு இணைச் சீருடைகள் முன்கூட்டியே வழங்குவதை உறுதிப்படுத்துதல் அவசியமாகும்.

கற்றல் கற்பித்தலில் புதிய தொழில்நுட்பங்களையும், மெய்நிகர் வகுப்பறைகளையும் மெல்ல மெல்ல விரிவுபடுத்தி வருகிறது. ஆசிரியர்கள் தம் பாடத்திட்டம் சார்ந்த பாடக் குறிப்புகளைக் குறிப்பேட்டில் மட்டுமே எழுதி வருவது இருந்து வருகிறது. கணினி வழியிலான ஆசிரியரின் சொந்த பாடக் குறிப்புகளை ஏற்கவும் எழுத ஊக்குவிக்கவும் ஆய்வு மேற்கொள்ளும் அலுவலர்கள் கடைப்பிடிப்பது நல்லது.

குறிப்பாக, நெறிபிறழ் மாணவர்களுடன் ஏனைய மாணவர்களையும் நல்ல வழிகளில் நெறிப்படுத்திடவும் தலைசிறந்த குடிமகனாக உருவாக்கும் வகையில் பள்ளிக்கல்வித்துறை வரலாற்றில் இடையில் காணாமல் போன நன்னெறி வகுப்பு மற்றும் நூலக வகுப்புகளுக்கு நடப்புக் கல்வியாண்டில் பாட கால அட்டவணையில் இடம் தந்தால் மட்டும் போதுமா? மேற்குறிப்பிட்ட வகுப்புகள் கட்டாயம் ஒவ்வொரு பள்ளியிலும் தக்க ஆசிரியர்களைக் கொண்டு நடத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

அதேபோல், விளையாட்டுத் திறன்கள், கலை, இலக்கியப் படைப்பாற்றல் திறன்கள் வளரவும் பிற்பகல் கடைசிப் பாடவேளைகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கல்வி இணைசார் மற்றும் இணைசாரா வகுப்புகள் தொய்வின்றித் தொடர்ந்து நடைபெற்று வருவதையும் தொடர் கண்காணிப்பு மேற்கொள்வது இன்றியமையாதது.

வறுமை, ஏழ்மை, அறியாமை போன்ற காரணங்களால் மாணவ, மாணவிகள் பள்ளி இடைநிற்றல் மற்றும் பள்ளிச் செல்லாத நிலை ஆகியவற்றிற்கு பல்வேறு முயற்சிகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுத் தீர்வு காணப்பட்டு வருகிறது. தொடர்ந்து பல நாட்களாக, மாதங்களாக, ஆண்டுகளாகப் பள்ளிக்கு வாராத ஆசிரியர்களால் அரசுக்கும் சமூகத்திற்கும் நிதிச்சுமையையும் கற்றல் இழப்புகளையும் ஏற்படுத்தி வருவது ஏற்க கூடியது அல்ல.

கல்வி உரிமைச்சட்டம் காரணமாக அரசுப் பள்ளிகளில் படிக்க வைக்க விரும்பாத தனியார் மெட்ரிக் பள்ளிகளை மோகிக்கும் 25% பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு ஆண்டுதோறும் அவர்களின் கல்விக் கட்டணத்தை அரசு ஏற்பதும் வழங்குவதும் நல்ல செயலாகாது. ஏழை, எளிய, அடித்தட்டு மக்களின் வரிப்பணம் இதுபோன்ற காரணங்களுக்காக வீணாகச் செலவிடுவது ஏற்புடையதல்ல. ஆண்டுதோறும் கோடிக்கணக்கில் கொட்டி அழிக்கப்படும் பொதுமக்கள் வரிப்பணத்தை அரசுப் பள்ளிகளின் அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் ஆசிரியர்கள் நியமனத்திற்கு பயன்தரத்தக்க வகையில் செலவிடுவதே சாலச்சிறந்தது.

கடந்த காலங்களில் அரசுப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்ட மழலையர் வகுப்புகளால் மாணவர் சேர்க்கை அதிகரித்தது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக அரசு மற்றும் உதவி பெறும் பள்ளிகளில் அடையாளம் கண்டறியப்பட்ட உபரி இடைநிலை ஆசிரியர்கள் தற்காலிகமாக இவ்வகுப்புகளுக்குப் பணிநியமனம் செய்யப்பட்டனர். அதுபோல், அனைத்துக் குழந்தைகளுக்கும் பாடப்புத்தகங்கள், சீருடைகள், புத்தகப் பைகள், எழுதுபொருள்கள், காலணிகள் முதலானவை வழங்கப்பட்டன.

ஒரு வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாக இருந்துவிடக் கூடாது. அரசுப் பள்ளிகளில் தொடங்கப்பட்ட மழலையர் வகுப்புகள் தொடர்ந்து செவ்வனே இயங்க தக்க தகுதி மிக்க ஆசிரியர்களையும் குழந்தைகளுக்குத் தேவையான கல்வி உபகரணங்களையும் தரமான சீருடைகள் உள்ளிட்ட பொருட்களையும் உரிய காலத்தில் வழங்குவது இன்றியமையாதது.

ஆசிரியர் பணிப்பதிவேடுகளில் எண்ணற்ற விடுபாடுகள் காணப்படுகின்றன. இதற்கு முழுமுதற் பொறுப்பு பணிபுரிந்த கல்வி அலுவலர்களின் மெத்தனம் மற்றும் அசட்டைப் போக்குகளே காரணங்களாகும். அதற்கு சம்மந்தப்பட்ட ஆசிரியர் பெருமக்களைப் பலிகடா ஆக்குவது தொழிலாளர் சட்டத்திற்கு புறம்பானது. மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்டாய இட மாறுதல் மற்றும் பணி ஓய்வு காரணங்களால் அலுவலகத்தை விட்டு நீங்கிய அலுவலர்கள்தாம் விடுபட்ட பதிவுகளுக்குப் பொறுப்பு என்பதை வலியுறுத்திக் கற்பித்தல் பணிக்கு ஊறு விளைவிக்கும் வகையில் ஆசிரியர்களை வீணாக அலைய விடும் அவலத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

ஆசிரியர் பணி நியமனத்தில் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகப் பணி என்பது ஆசிரியர் விரோத நடவடிக்கையாகும். தினக்கூலி அடிப்படையில் சொற்ப மாத ஊதியத்தில் பணிபுரிய பல்லாண்டுகளாக வேலைவாய்ப்பைத் தேடி வாழ்க்கையைத் தொலைத்த ஆசிரியர் பணிக்கான +2 தேர்ச்சிக்குப் பின்னர் ஈராண்டு பட்டய, ஐந்தாண்டு பட்டத் தேர்வுகள், அதன் பின்னர் ஆசிரியர் தகுதித் தேர்வு, அதன்பின் பணி நியமனத் தேர்வு என்ற பலகட்ட தடைகளைக் கடந்து வந்தோருக்கு உடனடியாகப் பணிநியமனம் தராமல் இழுத்தடித்து, இறுதியாக இடைநிலை ஆசிரியருக்கு ரூ 7500, பட்டதாரி ஆசிரியருக்கு ரூ 10,000, முதுகலைப் பட்டதாரி ஆசிரியருக்கு ரூ 12000 என்று ஏலம் விடுவதென்பது ஆசிரியர் நலனை அவமதிப்பதும் இழிவுசெய்வதும் ஆகும்.

**அன்பும் அமைதியும் ஒழுக்கமும் நேர்மையும் திறமையும் அனுபவமும் நிறைந்த கல்விக் கூடங்களில் சண்டையும் சச்சரவும் ஒழுக்கக்கேடும் சாதி, மத, இன, பணச் செல்வாக்கும், மேலோங்கி பள்ளியைப் பாழ்படுத்தி விடும் அபாயம் நிறைய உண்டு. இதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.**

தேவையற்ற செலவினங்களைக் குறைத்துக் கொண்டு காலமுறை ஊதியத்தில் மட்டுமே நிரந்தர ஆசிரியர்களைப் பணிநியமனம் செய்திடும் வழக்கத்தை ஒருபோதும் புறந்தள்ளுதல் கூடாது. ஆசிரியர்கள் விதைநெல்லைப் போன்றவர்கள் என்பது ஆன்றோர் வாக்கு.

தவிர, கடந்த இரண்டு கல்வியாண்டுகளை கொரோனா நோய்ப் பெருந்தொற்று காலம் முழுதாக விழுங்கிக் கொண்டு விட்டது. இக்காலகட்டத்தில் மாணவர்களின் கற்றல் அடைவுகளில் பெரும் இடைவெளி ஏற்பட்டுள்ளது.

உயர்மட்ட ஆய்வுகளும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் மீளாய்வுக் கூட்டங்களும் ஒரு கல்வியாண்டின் இறுதியில் மேற்கொள்வதே நல்ல எதிர்பார்க்கப்படும் விளைவை வெளிப்படுத்தும்.

இதுபோன்ற ஆய்வுகள் ஆசிரியர் பெருமக்கள் அனைவருக்கும் நல்வழி காட்டும் இன்பியல் நிகழ்வாக அமைய வேண்டுமேயன்றி பயமும் பதட்டமும் ஒருங்கே நிறைந்த துன்பியல் நிகழ்வாக ஆகிவிடக் கூடாது.

மேலும், தம் திடீர் ஆய்வுகளின் போது ஏதோ பெரிய குற்றவாளிகளைக் கையும் களவுமாக பிடித்து விடுவது போல் ஆக்கிக் கொள்வதை முடிந்தவரை தவிர்க்க வேண்டும்.

20–கே கிட்ஸ் என்றழைக்கப்படும் இருபத்தோராம் நூற்றாண்டின் இணையற்ற மாணவர் சமூகம் மனிதத்தன்மையால் அளவிடப்படுவதை விடுத்து மதிப்பெண்களால் மதிப்பிடப்படுவது கொடுமையானது. இதன் விளைவாக மாணவர் மத்தியில் போதைப் பொருள்கள் நுகர்வுத்தன்மை, பாலியல் தொடர்பான குற்றச் செயல்கள், தொடுபேசியுடனான உறவு அதிகரிப்பு, மனித உறவுகள் மீதான மாண்புகளில் பற்றற்ற நிலை, தனியான தீவு வாழ்க்கை வாழ முயற்சித்தல், யார் மீதும் மரியாதை இல்லாமை முதலான மானுடம் அறம் சாரா படுகுழிக்குள் தாமாக வீழும் போக்கு அதிகரித்துள்ளது.

80–90 களில் மதிப்பெண்கள் அவ்வளவு முக்கியமானதாக கல்வியில் இருந்ததாக எண்ண முடியவில்லை. ஒரு பாடத்தில் 100% மதிப்பெண்கள் பெறுவதென்பது இயலாத செயல். பொதுத் தேர்விலும் இதே நடைமுறை தான். தனியார் மெட்ரிக் பள்ளிகள் பெருகியதன் விளைவாக அரசுப் பள்ளிகளை விஞ்சிக் காட்டிக் கொள்ள விழையும் முகமாக மதிப்பெண்கள் மீதான மதிப்பு வெகுவாகக் குறைந்து போனது. மதிப்பீட்டு முறைகளிலும் தாராளமயம் பெருகியது.

கொள்ளுப்பையின் பின்னே குதிரை ஓடுவது போல் பிள்ளைகள் மதிப்பெண்களை நோக்கி விரைந்தோட அடித்து விரட்டப்பட்டனர். இதன் காரணமாக, மாணவர்கள் கற்றுக் கொள்வதை மனத்தில் இருத்தி வைத்துக் கொள்வதைத் தவிர்த்து தேர்வுகளில் வாந்தி எடுத்து வைத்தனர். பொதுத்தேர்வு எழுதும் மாணாக்கர்கள் இளம் துறவிகள் போல் மரக்கட்டைகளாக உணர்ச்சியற்று வாழப் பழக்கப்படுத்தப்பட்டனர் என்பது மிகையாகாது.

இதன் விளைவாக, அன்பு, பாசம், கருணை, இரக்கம், பணிவு, துணிவு, தவறுக்கு அஞ்சுதல் முதலான நற்பண்புகளை மெல்ல மெல்ல இழக்கத் தொடங்கினர். எந்திர வாழ்வியல் சூழலுக்கு ஏற்ப தம்மைத் தகவமைத்துக் கொண்டதுதான் பெரும் சோகம். நன்னடத்தை போதிக்கும் பள்ளிகள் அனைத்தும் நல்ல மதிப்பெண் நகல்களை கூவிக்கூவி உருவாக்கவே விழைந்தன. பல்வேறு தனியார் பள்ளிகள் அதைவைத்து நிறைய பணமும் ஈட்டின. நீதிபோதனை வகுப்புகளுக்கும் தனித்திறன் வெளிப்பாட்டு வகுப்புகளுக்கும் சமாதி கட்டப்பட்டது காலத்தின் கொடுமையாகும்.

இயல்பாகவே பதின்ம வயதில் எழும் உளவியல் சார்ந்த மனவெழுச்சிகளுக்கு எப்போதும் வடிகால்களாக இருப்பவை கலையும் இலக்கியமும் ஆகும். படைப்பாற்றல் திறன்கள் இத்தகையோரிடம் எப்போதும் மேலோங்கிக் காணப்படும். பள்ளி நூலக வாசிப்பும் பேச்சு, எழுத்து, ஓவியம், நடிப்பு சார்ந்த தனித்திறன் வெளிப்பாடும் மானுடத்தை அறிய வைக்கும். கைத்தொழில் வகுப்பில் வாழ்க்கையின் மீதான தன்னம்பிக்கை மிளிரும். இவற்றுக்கெல்லாம் ஒவ்வொரு பள்ளியும் ஒவ்வொரு மாணவருக்கும் தக்க களம் அமைத்துத் தரவேண்டியது இன்றியமையாதது. இதுபோன்ற நற்செயல்களில் மாணவரை ஈடுபடுத்தும் போது நற்பண்புகள் வளர்வதுடன் நெறிபிறழ்ந்து தவறான பழக்கவழக்கங்களில் தம்மை வேறு வழியின்றி ஆட்படுத்திக் கொள்வது பெருமளவு குறையும்.

கல்வித்துறையில் காணப்படும் இவைபோன்ற எண்ணற்ற களைகள் களையப்படுவதும் புதிய மாற்றங்களைச் திறந்த மனத்துடன் செயற்படுத்துவதும் அவற்றை ஏற்றுக் கொள்வதும் அனைவரின் கடமையாகும்.

தொடர்புக்கு: **70103 03298**



## என்.எஸ்.பிரதாப்சந்திரன் தந்தை எம்.சாம்பசிவம் மறைவு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவள்ளூர் மாவட்டக்குழு உறுப்பினரும், விவசாய தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளருமான என்.எஸ்.பிரதாப் சந்திரனின் தந்தை எம்.சாம்பசிவம் அவர்கள் ஜூலை 16 அன்று உடல்நலம் குன்றிய நிலையில் மரணம் அடைந்தார்.

அவரது உடலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில செயலாளர் வழக்கறிஞர் கீ.சு.குமார், எஸ்.கே.சிவா, பொன்னேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர், காங்கிரஸ் கட்சியின் தலைவர் துரை. சந்திரசேகர், பொன்னேரி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எஸ். கண்ணன், பொன்னேரி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பொன்.ராஜா, திராவிட முன்னேற்றக் கழக சோழவரம் ஒன்றிய செயலாளர் நா.செல்வசேகரன், திமுக மூத்த தலைவர் முன்னாள் அமைச்சர் க. சுந்தரம் அவர்களின் மகன் தமிழ் உதயன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் கே. கஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் வி.சரவணன், ஜெ.அருள், மாவட்ட பொருளாளர் எஸ். மயில்வாகனன், மத்திய சென்னை மாவட்ட துணை செயலாளர் பி.மாரியப்பன், ஜனசக்தி சார்பில் வெங்கடேசன், சிபிஎம் சோழவரம் செயலாளர் ஞாயிறு ஊராட்சி மன்ற தலைவர் ஜி.வி. எல்லையன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் ஏ.ஜி.சந்தானம், சித்ரா, அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநில செயலாளரும், திருவள்ளூர் மாவட்ட செயலாளருமான அ.து. கோதண்டம் உள்ளிட்ட தோழர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

ஜனசக்தி பொது மேலாளர் இளசை கணேசன் ஜூலை 18 அன்று நேரில் சென்று துக்கம் விசாரித்தார்.



# சங்கே முழங்கு!

## பெரியார் பல்கலைக்கழக தேர்வு வினாத்தாளில் சாதி தொடர்பான வினா!

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசியக் குழு கடும் கண்டனம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு கூட்டம் புதுடெல்லியில் உள்ள கட்சியின் தலைமையகமான அஜாய் பவனில் ஜூலை 15 முதல் 17 வரை நடைபெற்றது.

தமிழ்நாட்டில் சேலத்தில் உள்ள பெரியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முதுகலை பட்டப்படிப்பு வரலாறு பாடத் தேர்வில் சாதி தொடர்பான கேள்வி கேட்கப்பட்டதற்கு கட்சியின் தேசியக் குழு கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. இது குறித்து தேசியக் குழு நிறைவேற்றிய தீர்மானம் பின்வருமாறு:

சாதிய முறையை பலப்படுத்துவது, சாதிய வன்மத்தைப் பரப்புவது ஆகிய நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பிற்போக்கான செயலை கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழ்நாட்டில் பல்கலைக்கழங்களின் வேந்தராகப் பொறுப்பு வகிக்கும் ஆளுநர் ஆர் என் ரவி இந்தப் பிரச்சனையில் உடனடியாகத் தலையிட்டு, உரிய விசாரணை மேற்கொண்டு, இந்தச் செயலுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு தண்டனை வழங்கிட வேண்டும் என்று கட்சியின் தேசியக் குழு வலியுறுத்துகிறது.

சாதி தொடர்பான அந்தக் கேள்வி சமூக நீதியைக் கேலிக்குரியதாக்கி உள்ளது. கல்வி என்பது அறிவியல் மனப்பான்மையை வளர்த்து, பலப்படுத்துவதாக இருக்க வேண்டும். மனிதர்கள் உருவாக்கிய சமூகப் படிநிலைகளைத் தகர்த்தெறிவதற்கு அறிவியல் மனப்பான்மை முன்தேவையாக உள்ளது. அரசியலமைப்பு ரீதியிலான இந்த உறுதிப்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற வண்ணம் பாடத்திட்டம் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த உறுதிப்பாட்டிற்கு எதிரான எந்த ஓர் அத்துமீறலும் சாதிய வன்மத்தைப் பரப்பும் உள்நோக்கம் கொண்டதேயாகும்.

சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு தடைகளைக் கடந்து சமுதாயத்தின் அனைத்து பிரிவு மக்களும் கற்பதற்காக ஒன்று கூடும் அறிவுப் புலமாக கல்வி நிலையங்கள் அமைந்திட வேண்டும். சாதி தொடர்பான வினா கேட்கப்பட்டு இருப்பது, மதச்சார்பற்ற செயற்களத்தைச் சேதப்படுத்துவதற்கான மறைமுக மற்றும் வெளிப்படையான முயற்சி ஆகும். சர்ச்சைக்குரிய அந்தக் கேள்வி நச்சியல்பு நிறைந்ததாகவும், ஊறு விளைவிக்கக்கூடிய உள்ளடக்கம் கொண்டதாகவும் இருக்கிறது.

இந்தப் பிரச்சனை தொடர்பாக பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் அளித்துள்ள விளக்கம் ஏற்கத்தக்கதாக இல்லை. இந்தப் பெருங்குற்றச் செயலுக்கு, தமிழ்நாட்டில் பல்கலைக்கழங்களின் வேந்தரான ஆளுநர் ஆர் என் ரவி தான் பொறுப்பேற்க வேண்டும் என்று தேசியக் குழு குறிப்பிடுகிறது. தமிழ்நாட்டில் தொடர்ந்து சாதிய மற்றும் வகுப்புவாத பிளவுகளைத் தூண்டிவிடும் ஆளுநரின் நடவடிக்கைகளைத் தவிர்த்துவிட்டு, இந்தப் பிரச்னையைப் பிரத்யேகமான ஒரு சம்பவமாகக் கருதிவிட முடியாது. திட்டமிட்டு, உள்நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட இந்தச் செயலுக்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு மீண்டும் வலியுறுத்துகிறது.

இவ்வாறு தேசியக் குழு நிறைவேற்றிய தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.



# இவரன்றோ ஜனாதிபதி!

- வீ.தர்மதாஸ்

**நாட்டின் மிக உயர்ந்த பதவி, முதல் குடிமகன், அதிகாரங்கள் இவர் கையில் குவிந்து கிடந்தாலும் மத்திய அமைச்சரவையை மீறி செயல்பட முடியாது. 1950 முதல் 2022 வரை இந்தியா 14 ஜனாதிபதிகளை பார்த்துவிட்டது.**

எல்லா ஜனாதிபதிகளும் ரப்பர் ஸ்டாம்பாகத்தான் பதவி வகித்தார்களா? இல்லை, தனது சொந்த அறிவால் தனக்கு நல்லது என்று மனதில் பட்டதோ அதை மனசாட்சியோடு அமல்படுத்திய மாமனிதன் கே.ஆர்.நாராயணன் ஒருவர்தான். 10 வது ஜனாதிபதியாக, தசாவதாரமாக பதிவியேற்ற கொச்சேரில் ராமன் நாராயணன், கேரள மாநிலம் கோட்டயத்தில் 27.10.1920 பிறந்தார்.

விடுதலை ! விடுதலை ! விடுதலை !
பறைய ருக்கும் இங்கு தீயர்
புலைய ருக்கும் விடுதலை

என்று கேட்டானே பாரதி அந்த அடிமை புலையர்; ஜாதியில் அவதரித்தவர்தான் நாராயணன். பள்ளிக்கூட கட்டணம் கட்ட வழியின்றி பாடங்களை வகுப்புக்கு வெளியே நின்று கேட்ட நாட்கள் எராளம். தலித்தாக பிறந்ததால் படிப்பு உதவித்தொகை கிடைத்தது.

திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று இலண்டனில் மேற்பட்டபடிப்பை முடித்தார். 1984 முதல் 1992 வரை மக்களைவை உறுப்பினராக இருந்தார். 1944ல் இந்து, டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகைகளில் பணியாற்ற வாய்ப்பு கிடைத்தவுடன் டில்லி சென்று பத்திரிக்கையாளராக பணியாற்றினார். பத்திரிகையாளராக பணியாற்றியபோதுதான் மகாத்மா காந்தியை ''இந்து'' பத்திரிக்கைக்காக நேர்காணல் கண்டார்.

தீண்டாமை மற்றும் சாதி ஒழிப்பு பற்றிய நாராயணன் கேள்விகளுக்கு சளைக்காமல் பதில் அளித்த காந்தி ''உங்களது விசால அறிவு உங்களை உச்சத்தில் வைக்கும்'' என்று கே.ஆர். நாராயணனை அன்றே மகாத்மா காந்தி பாராட்டினார். பர்மாவில் வெளியுறவுத்துறை அதிகாரியாக பனியாற்றினார். இங்கிலாந்து துருக்கி, சீனா, வியட்நாம் ஆகியநாடுகளில் தூதராக பணியாற்றினார். நேருவால் மிகச் சிறந்த ராஜதந்திரி என்று போற்றப்பட்டார்.

அவரது வாழ்க்கையை, சிந்தனையை இடது பக்கம் திருப்பிய நிகழ்வு அவர் டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக 1975ல் பணிபுகுந்தபோதுதான் டெல்லி துணை வேந்தர் அனுபவம் அவரை முழுநேர அரசியல் சிந்தனையாளராக மாற்றியது. 1992ல் அவரை குடியரசு துணை தலைவராக வி.பி.சிங் முன் மொழிந்தார்.

ஒரு பழங்குடி பெண்ணை ஜனாதிபதிக்கு தேர்ந்து எடுத்துள்ளோம் என்று வீண் ஜம்பம் அடிக்கும் பி.ஜே.பி கட்சி தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், ஒரு தலித்தை ஜனாதிபதி மாளிகைக்கு அனுப்ப வேண்டும் என்று முனைப்போடு அதை முதன் முதலில் சாதித்து வெற்றியாக்கிவயர்கள் இடதுசாரிகள் என்ற உண்மை தெரிந்துகொள்ள வேண்டும்.

1997ல் துணை ஜனாதிபாதி பொறுப்பில் இருந்து குடியரசுத் தலைவராக போட்டியிட்டு இதுவரை நடந்த ஜனாதிபதி தேர்தலிலே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர் என்ற சாதனையை கே.ஆர்.நாராயணன் தான் படைத்தார். இவர் வாங்கிய வாக்குகள் 9,56,290 எதிர்த்து போட்டியிட்ட டி.என்.சேசன் பெற்ற வாக்குகள் 50,631 ஜனாதிபதி பொறுப்பை 25.07.1997ல் ஏற்றவுடன் அவர் அற்றிய உரை ஓர் அறிவாளிக்கு அதிகாரம் கிடைத்தால் எப்படி இருக்கும் என்பதை கண்ணாடிபோல் காட்டியது.

'ஜனநாயகத்தின் 4 துண்களில் ஒன்று கூட பழுதாக விடாமல் நான் பணியாற்றுவேன், என்னுடைய மனசாட்சிக்கு விரோதமாக என்னால் செயல்பட முடியாது. எனது மனசாட்சி நியாயத் தராசை ஒரு போதும் சாய்க்காது என்று பேசினார். பேசுவது எளிது, ஆனால் நடைமுறைப்படுத்த முடியமா? அதுவும் ஜனாதிபதியாக இருந்து கொண்டு என்பது முக்கிய கேள்வி.

20.06.91 சந்திரசேகர் ஆட்சி முடிவுற்று 21.06.91 முதல் நரசிம்மராவ் பிரதமரானார், அப்போது கேரளாவில் இருந்து பாராளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட நாராயணனுக்கு மத்திய மந்திரி பதவி கிடைக்கவில்லை. காரணம் கேரள காங்கிரஸ்காரர்கள் நரசிம்மராவிடம் சொன்ன வாக்குமூலம் கே.ஆர்.நாராயணன் உடல் அளவில் காங்கிரஸ்காரர் அனால் அவர் உள்ளத்தால் கம்யூனிஸ்ட். அவர் ஒரு தலித் அறிஞர் என்பதால் எங்களால் அவரை புறக்கணிக்க முடியவில்லை என்று கருணாகரான், அந்தோணி போன்றோர் சொல்லியுள்ளனர்.

அவர்கள் சொன்னது நாராயணனுக்கு சாதகமாய் போய் விட்டது. அவரை துணை ஜனாதிபதியாக மாற்ற முடிவு செய்து 1992ல் துணை ஜனாதிபதியாக்கினார்கள். 1997ல் சங்கர் தயாள் சர்மா பதவி காலம் முடிந்தவுடன் ஜனாதிபதி பொறுப்பேற்றார். 98ல் ஐ.கே.குஜ்ரால் ஆட்சி கவிழ்ந்தவுடன் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் ஓர் அதிசயம் நடந்தது என்ன அதிசயம்?

ராஷ்டிரபதிபவன் வாக்குச் சாவடியில் வரிசையில் கே.ஆர். நாராயணன் நின்று கொண்டு இருக்கிறார். இந்தியாவில் எல்லா ஊடகங்களிலும் தலைப்புச் செய்தியாக வருகிறது. ஜனாதிபதி ஓட்டுபோட வந்துள்ளார் என்பதே. அதுவும் வரிசையில் நின்று ஓட்டுப்போடப்போகிறார் என்ற செய்தி உண்மையான பரபரப்பான செய்தியாக ஊடகங்களில் வந்துகொண்டிருந்தது. இந்தியாவின் முதல் குடிமகன் ஒட்டுப்போட வந்தார்? இதில் என்ன அதிசயம்?

அதிசயத்திற்கு காரணம் இதற்கு முன்னால் ஜனாதிபதி பதவி வகுத்த 9 பேர் ஒட்டுப்போட வில்லை. இந்திய அரசியல் சட்டம், தேர்தல் சட்டம், ஜனாதிபதிக்கு ஒட்டுபோட தடை விதித்துள்ளதா? இல்லையே? டாக்டர் ராஜேந்திர பிரசாத், டாக்டர் ராதகிருஷ்ணன், டாக்டர் ஜாகிர் உசேன, வி.வி. கிரி, பக்ருதின் அலி அகமது, ஆர்.வெங்கட்ராமன், சங்கர் தயாள் சர்மா இப்படி 9 பேரும் ஒட்டே போடவில்லையே, இந்த மரபை உடைந்தெறிய ஒரு தைரியம் வேண்டுமல்லவா? ஒட்டுப்போடுவது ஜனநாயகத்தை கட்டமைக்கும் அடிப்படை ஆயுதம் என்பதால் ஜனாதிபதியாக அதை கையில் எடுத்தேன், எனது ஜனநாயக கடமையை நான் ஆற்றுகிறேன். எனது கடமையை நான் செய்தபின்புதான் மக்களிடம் அதை சொல்ல எனக்கு தகுதி இருக்கிறது என்று சொல்லி மைதடவிய விரலை உயர்த்திக் காட்டியபோது இந்தியாவே வியந்தது; இமயமே உயர்ந்தது. அடுத்து வந்த தேர்தல்களிலும் அதைத் தொடர்ந்தார்.

அவர் உருவாக்கிய முன்னுதாரணங்கள் 1998ல் மத்தியில் பாஜ.க. கூட்டணி ஆட்சியில் இருந்தபோது அப்போதைய பிஹார் மாநில ஆட்சியைக் கலைப்பதற்கு முடிவு செய்து மத்திய அமைச்சரவை அனுப்பிய பரிந்துரையை நிராகரித்து திருப்பி அனுப்பினார். 1992ல் நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது பாபர்மசூதி இடிக்கப்பட்ட போது கே.ஆர்.நாராயணன் அதைப் பற்றி கருத்தினை சொல்வாரா? என்று பல அரசியல் கட்சியினரும் சந்தேகப்பட்டார்கள். இந்தியாவின் முதல் குடிமகன் என்ற முறையில் அவர் சொன்ன வார்த்தைகளை இன்றைக்கு எழுப்பப்படும் அயோத்தி ராமர் கோயில் வாசலில் பெரிய எழுத்துக்களில் எல்லோரும் படித்துவிட்டுத்தான் கோயிலில் நுழையும்படி வைக்க வேண்டும் அந்த வாசகம் என்ன?

''மகாத்மாகாந்தி கொல்லப்பட்டதற்குப் பின்னர் இந்தியாவில் நிகழ்ந்த மிகப்பெரிய சோகம் பாபர் மசூதி இடிக்கப்பட்டது தான்.'' ஜனாதிபதி மாளிகையில் வெடித்த எரிமலைக் குழம்பை யாரேனும் அடக்க முடிந்ததா? ஆம்! காந்தியை சுட்டதும் ஆர்.எஸ்.எஸ். இயக்கம்தான் அது முதல் சோகம். பாபர் மசூதியை இடித்ததும் ஆர்.எஸ்.எஸ். கூட்டம் தான். இது இரண்டாவது சோகம்.

27.02.2022 கோத்ரா கலவரத்தில் தீவைப்பு, சிறுபான்மை மக்கள் நூற்றுக்கணக்கில் படுகொலை. குஜராத்தை நர வேட்டைக்காடாக மோடி மாற்றியபோது அன்றைய இந்தியாவின் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய் வாய்மூடி மௌனியாக இருந்தார். ஆனால் மனசாட்சி உள்ள ஜனாதிபதி கே.ஆர்.நாராயணனால் அப்படி இருக்க முடியவில்லை. மோடியை எச்சரித்து உடனடியாக குஜராத்தில் அமைதியை கொண்டுவரவேண்டும் என உத்தரவிட்டார்.

கே.ஆர்.நாராயணனை போன்று முதுகெலும்பை நிமிர்த்தி கையை உயர்த்தி ஆளும் திறன் படைத்தவர்களே ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைய வேண்டும். திரௌபதி முர்மு அவ்வாறு இருப்பாரா?

தொடர்புக்கு: **9385625307**

### மாவட்ட மாநாட்டு தீர்மானங்களை நிறைவேற்றிடுக

## நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்ட 24வது மாநாடு வள்ளியூரில் நடைபெற்றது. இம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றக் கோரி நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஜூலை 18 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் செ.லெட்சுமணன் தலைமை தாங்கினார்.

நெல்லை மாவட்ட ஏஐடியூசி பொதுச் செயலாளர் ஆர்.சடையப்பன், நெல்லை மண்டலச் செயலாளர் எம்.எஸ். பாலகிருஷ்ணன், பாளை.மேலப்பாளையம் மண்டலச் செயலாளர் எஸ்.எம்.ஷேக்மதார், பாளையங்கோட்டை ஒன்றியச் செயலாளர் கே.முத்துகிருஷ்ணன், களக்காடு ஒன்றியச் செயலாளர் கே.முருகன், ஏஐடியூசி துணைத் தலைவர் ஆர்.ரெங்கன், விவசாயச் சங்கச் செயலாளர் பி.பெரும்படையார், எஸ்.வி.கிருஷ்ணன் எக்ஸ்.எம்.எல்.ஏ., சாலையோர வியாபாரிகள் சங்கத் தலைவர்




பொ.கிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்ட முடிவில் மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து, கட்சியின் மாவட்டச் செயலாளர் செ.லெட்சுமணன் கோரிக்கை மனுவை கொடுத்தார்.



# அமெரிக்கா, பெண்கள் உரி

- டாக்டர் யுகல் ராயலு

**தற்கால உலகின் பலம்பொருந்திய முதலாளித்துவ வல்லரசான அமெரிக்கா அதனது சொந்த மண்ணில் மிகவும் பலவீனமாக உள்ளது. தனிமனிதச் சுதந்திரத்தின் தாயகம் என மார்தட்டி, அதுவே தங்களின் வலிமையான அடித்தளம் என்றது. தற்போது, தனிமனிதத் தேர்வு உட்பட அனைத்து நவீன மதிப்புறு விழுமியங்களையும் குப்பைக் கூடையில் வீசுகின்றனர்.**

தவறான பாதை தவறான விளைவுகளுக்கே இட்டுச் செல்லும்! ஆறு மூன்று என்ற விகிதத்தில் அதிரடியான ஒரே தீர்ப்பால் அமெரிக்கப் பெண்களின் இனப்பெருக்க உரிமையை 50 ஆண்டுகள் பின்னோக்கித் தள்ளிவிட்டது; 1973ல் புகழ்பெற்ற ரோ எதிர் வேடு வழக்கில் டெக்ஸ்டாஸ் மாநிலப் பெண்களுக்கு வழங்கப்பட்ட 'கருகலைப்பு' உரிமையை அமெரிக்க உச்ச நீதிமன்ற உத்தரவு தலைகீழாகப் புரட்டிவிட்டது.

அமெரிக்கப் பெண்கள் தங்கள் உடல்களின் மீது தங்களுக்கு இருந்த உரிமையை இழந்து விட்டனர்! முற்போக்கு எண்ணம் கொண்ட பெரும்பான்மையான அமெரிக்கக் குடிமக்கள் இந்தத் தீர்ப்பால் அதிர்ந்து போயினர்.

ஜேன் ரோ என்கிற மணமாகாத கர்ப்பிணிப் பெண் தனக்காகவும் தன்னைப் போன்ற பிற பெண்களுக்காகவும் டெக்டாஸ் மாநிலக் 'கருக்கலைப்புத் தடை' சட்டம் அரசியல் சட்டப்படிச் செல்லத் தக்கதல்ல என அமெரிக்க உச்சநீதிமன்றத்தில் மாவட்ட அட்டார்னி ஜெனரல் வேடுக்கு எதிரான வழக்கு தொடர்ந்தார். அன்றைய டெக்டாஸ் சட்டம் தாயின் உயிருக்கு ஆபத்து என்பதைத் தவிர, ஏனைய பிற கருக்கலைப்புகளைச் சட்டவிரோதம் என்றது. இவ்வழக்கில் வழங்கப்பட்ட சரித்திரப் புகழ்மிக்க தீர்ப்பு ஒரு நபரின் 'அந்தரங்க தனி உரிமை'யை அடிப்படை உரிமையாக அங்கீகரித்து, கருக்கலைப்பு மேற்கொள்வதா இல்லையா என்பது ஒருவரின் அடிப்படை தனி உரிமை என்றாக்கியது. அதுவே இவ்வழக்கு.

அதன் பிறகு பல்லாண்டுகளாக, பெண்கள் உள்ளிட்ட சமூகத்தின் எளிய பிரிவினர்களாக அழைக்கப்படுபவர்கள், தங்களுடன் முரண்பட்டு மோதிப் போராடத் தயாராக இருப்பதாகப் 'புதிய வலதுசாரி'யினர் உணர்ந்தனர். பெண்களின் விடுதலை மற்றும் சமூகக் குடிமை உரிமை இயக்கம் அடைந்த பலன்களால் புதிய வலதுசாரியினர் கவலையும் அதிர்ச்சியும் அடைந்தனர்.

அமெரிக்காவின் இந்நிகழ்வு, உண்மையில், உலகின் பல பகுதிகளில் நடந்த போராட்டங்களை உற்சாகப்படுத்தியது. முன்னோக்கி அணிவகுத்துச் சென்ற சமூகத்தில் பின்னே விடப்பட்ட வலதுசாரியினர், இந்த வளர்ச்சி மேம்பாடுகளை எல்லாம் 'கம்யூனிச அபாயம்' என முத்திரை குத்தி, அனைத்து தாராளவாதிகள், சில குடியரசுக் கட்சியினர் மற்றும் ஜனநாயகக் கட்சியினரை இலக்காகக் கொண்டு தாக்கினர்.

கேத்தரின் ஸ்டிவார்ட் எழுதிய "அதிகாரத்தை வழிபடுபவர்கள் : மதத் தேசியவாத்தின் அபாயகரமான எழுச்சியின் உள்ளே" என்ற அற்புதமான நூலில் 70களின் பிற்பகுதியில் 'புதிய வலதுசாரி' எழுச்சி குறித்தும், அவர்கள் எப்படிக் கருக்கலைப்புப் பிரச்சனையை முக்கிய ஆயுதமாகப் பயன்படுத்துகின்றனர் என்பது குறித்தும் ஒரு படப்பிடிப்பை அளித்துள்ளார்.


**முற்போக்குப் பிரிவினரைத் தாக்க மிக வசதியான கருவியை 'புதிய வலது' பயன்படுத்தியது. பெண்கள் விடுதலை மற்றும் குடிமை உரிமை இயக்கங்களை ஆதரிக்கும் அனைவரையும் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் என முத்திரை குத்தினர்; மேலும் சமூக நீதி மற்றும் சமூக வாழ்வில் அரசின் தலையீடு எதையும் ஆதரித்துப் பிரச்சாரம் செய்பவர்கள் அனைவரையும் தாக்க, பொதுவெளியில் அவர்கள் மதத்தைக் கொண்டு வந்து நிறுத்தினர். தொடர்ந்து சுதந்திரத்தின் முன்வாசல் முகப்பு மிகத் திறமையாகப் பயன்படுத்தப்பட்டது.**

ரோ தீர்ப்பால் கலக்கமடைந்த மதத் தலைவர்கள் இடதுசாரிகளுக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்க விரும்பினர். இந்தத் தலைவர்கள் 1979ம் ஆண்டில், 'கருக்கலைப்பு' பிரச்சனையை மதத்துடன் முடிச்சுப் போட்டு பொது வெளிக்குக் கொண்டு வந்தனர்.

பல்வேறு மதக் குழுக்களின் செயற்பாட்டாளர்கள் குடியரசுக் கட்சி அலுவலகத்தில் நுழைந்து, போட்டியிடும் வேட்பாளர்கள், வெற்றிகரமான உறுப்பினர்கள் அனைவரையும் இலக்காக்கி, கருக்கலைப்புக் குறித்து அவர்கள் நிலைபாடு என்ன என வினவி வற்புறுத்தினர். மிக விரைவில் குடியரசுக் கட்சியின் அனைத்து மட்டங்களின் பிரச்சாரத்திலும் 'கருக்கலைப்பு எதிர்ப்பு' சுருதி அதிகரித்து 2016ல் உச்சம் தொட்டது. இதில் ஆச்சரியம் ஏதுமில்லை.




உச்சநீதிமன்ற மூன்று நீதிபதிகள் இன்று பெண்களின் உரிமை சமநிலையைப் புரட்டிப் போட்டு, அமெரிக்கப் பெண்களின் இனப்பெருக்க உரிமை மீது திரைச்சீலையைக் கீழிறக்கி மூடுவிழா நடத்தி விட்டனர்.



- ஆர்.கிருஷ்ணமூர்த்தி

# மண்ணுக்கு மதச் சாயம் பூசாதே!

**இந்திய நாடு 130 கோடி மக்களின் நாடு. இந்த மண் நமது மண். நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற மண். நம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கும் மண். இது எவருடைய, எந்த மதத்தினருடைய தனிச் சொத்தும் அல்ல. இந்த நாட்டில் தான் இந்துமதம், இஸ்லாமிய மதம், கிறிஸ்துவ மதம், சீக்கிய மதம், சமண மதம், பௌத்த மதம் என பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு.**

உண்மை இதுவாக இருக்க இந்தியா இந்துக்களின் நாடு; இந்த மண் இந்துக்களின் மண் என்று சொல்லி மண்ணுக்கும் மதச் சாயம் பூசும் வேலையை சங்பரிவார கூட்டம் கச்சிதமாக செய்து வருகிறது. இந்துக்களுக்குச் சொந்தமான இந்த மண்ணில் இஸ்லாமியர்களா? என்ற மதவெறிப் பேச்சு பொதுவெளியில் பேசப்படுகிறது. மதவெறி சங்பரிவார் இந்துத்வா கூட்டத்திற்கு வரலாறு தெரிய வேண்டும்.

இந்த நாட்டை முன்னூறு ஆண்டுகளுக்கு மேலாக அடிமைப் படுத்தி ஆட்சி செய்த வெள்ளையன் எந்த மதம்? அன்று இந்தியா இந்துக்களின் நாடு; இந்த மண் இந்துக்களின் மண். நீ வேறு மதம்; ஆகவே வெளியேறு என்று ஆர்.எஸ்.எஸ். சங்பரிவார கூட்டம் அன்று போராடினார்களா? இந்து மதத்தைச் சொல்லி வெள்ளையனை வெளியேற்ற புரட்சி ஏதும் நடத்தினார்களா? அடங்கி ஒடுங்கி வெள்ளையனுக்கு வெண்சாமரம் வீசி கை கட்டி சேவகம் அல்லவா செய்தார்கள்!



அன்று இந்து, முஸ்லிம், கிறிஸ்து என எல்லோரும் கை கோர்த்து வெள்ளையனை எதிர்த்துப் போராடினார்கள். வங்கத்தை ஆண்ட சிராஜ் உத்தொவ்லா என்ற முஸ்லிம் மன்னர்தான் முதலில் வெள்ளை ஆட்சி எதிர்த்தார். ஆதம் ஜவேரி சகோதரர்கள் காந்தியுடன் இணைந்து போராடினர். ஏ.ஆர். பக்கீர் முகமது ராவுத்தர் சுதேசிக்கப்பல் வாங்க வ.உ.சி.க்கு உதவினார்.

வீடு வீடாகச் சென்று தேசிய கீதம் பாடி இந்திய விடுதலைக்கு எழுச்சி ஊட்டிய பக்கீர்கள் ஏராளம். இந்திய தேசியக் கொடியை வடிவமைத்தவர் சுரையா தியாப்ஜி என்ற முஸ்லிம் பெண். சங்பரிவாரங்கள் அன்று எங்கே போயிருந்தார்கள்?

காந்தி கள்ளுக்கடை எதிர்த்துப் போராட்டம். கைதான 19 பேர் களில் 10 பேர் முஸ்லிம்கள். காந்தி சொல் கேட்டு பதவி புறக்கணித்து பட்டம் துறந்தார்கள் கான் சாகிப், காயிதே மில்லத் இருவரும். காந்தியுடன் அஹிம்சைப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் கம்தின் முஹைதீன் மரக்காயர், முகமது அப்துல் காதர் சாஹிப், அப்துல் ஹமீதுகான் (சென்னை மேயர்), முகமது அலி, பி.என். அப்துல் கபீர் ( தாராபுரம் வில்லுப்பாட்டு), பண்டிட் அப்துல் மஜீத், கலிபுல்லாஹ், அப்துல் ஹமீது, மௌலானா அப்துல் காதர் என ஏராளமானோர். நேதாஜியின் இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்து போரிட்டோர்களில் 25 சதம் பேர் முஸ்லிம்கள்.

இந்திய விடுதலை இயக்கத்தில் பங்கேற்றதிலும், சுதந்திர இந்தியாவைக் கட்டமைப்பதிலும், இந்து முஸ்லிம் ஒற்றுமையைக் கட்டுவதிலும் மௌலானா அப்துல் கலாம் ஆசாத், ரஃபி அகமத் கித்வாய், காயிதே மில்லத் போன்றவர்களின் பங்களிப்பு அளப்பரியது. 17 ம் நூற்றாண்டில் கர்நாடகத்தில் " முதலாம் கர்நாடகப் போர் " எனப்படும் விடுதலைப் போரை துவங்கியவர் ஹைதர் அலி. வெள் ளையனை எதிர்த்துப் போரிட்டு பலமுறை வென்று ஆங்கிலேயர் களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய ஹைதர் அலி மகன் திப்பு சுல்தான் போர்க் களத்தில் உயிர் துறந்தார்.



1857 லேயே கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராகப் போரிட்ட வீரப்பெண்மணி பேகம் அசரத் மஹால் ஆவார்.

**அமீர் ஹைதர்கான் :** இவர் இந்திய விடுதலைக்காகப் போராடிய இஸ்லாமிய தலைவர்களில் மிக முக்கியமானவர். காங்கிரஸ் கட்சியில், பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து விடுதலைக்காக பாடுபட்ட விடுதலைப் போராட்ட வீரர். சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாக கொடுஞ் சிறை வாழ்க்கை. நேதாஜி சுபாஷ் சந்திர போஸுடன் சிறையில் இருந்திருக்கிறார். ராவல்பிண்டி சதிவழக்கு, மீரத் சதிவழக்கு என ஏராளமான வழக்குகள் இவர் மீது.

தொழிலாளியாக, போராளியாக வாழ்ந்த எளிய மனிதர். பல ஆண்டுகள் தலைமறைவு வாழ்க்கை. விடுதலைக்குப் பின்னரும் பாகிஸ்தான் அரசால் கைது செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் இவர். இவர் அன்று சந்தித்த இரு இளைஞர்கள் தான் புதுவை வ.சுப்பையா மற்றும் சுந்தரையா. இவர்கள் இருவரும் பிற்காலத்தில் விடுதலைப் போராட்ட வீரர்களாகவும், கம்யூனிஸ்ட் தலைவர்களாகவும் ஆனார்கள். பகத்சிங் விடுதலைக்காக சட்டப் போராட்டம் நடத்திய முகமது ஆசிப் அலி, படிப்பு முடிந்து விடுதலைப் போராட்டத்தில் இணைந்த டாக்டர் சாதிக் அலி என இன்னும் ஏராளமான முஸ்லிம் விடுதலைப் போராட்ட தியாகிகளைப் பட்டியலிடலாம்.

இப்போது ஆர்.எஸ்.எஸ். சனாதன அமைப்பு ஒரு புதிய நரித்தன வேலையைத் துவங்கி இருக்கிறது. தேச பக்தி சான்றிதழ் வழங்கப்

## இந்திய விடுதலைப் போராட்டத்தில் துரோகிகளும் எதி

## இந்திய விடுதலைக்குப் பின்பு பாசிச மத வெறி தான்

# மைகளை மறுக்கிறது




**உடையும் மாயை பிம்பங்கள்:**

அமெரிக்கா சமமான வாய்ப்புகளுக்கான பூமியாக ஒருநாளும் இருந்ததில்லை. விடுதலைப் பிரகடனத்திற்குப் பிறகு சுமார் இரண்டு நூற்றாண்டுகளாக அரசியல் உரையாடல் நிகழ்வுப் போக்கு, சமூகத்தின் அனைத்துத் துறைகளையும் கட்டுப்படுத்தும், வெள்ளை மனிதர்களால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது.

கறுப்பின மக்களைப் பொருத்தவரை, அமெரிக்க அரசியல் அமைப்புச் சட்டம் அடிமை மக்களுக்கு நியாயம் வழங்கவில்லை.

பல நவீன நாடுகளைப்போல அல்லாமல் அமெரிக்கா பெண்களுக்கு வாக்குரிமையைத் தொடக்கத்திலிருந்து அளித்து விடவில்லை. ஜூலை 4, 1776ல் விடுதலைப் பிரகடனம் செய்தாலும் அதன் பின்னர் ஒன்னரை நூற்றாண்டுகள் கடந்துதான் அமெரிக்கப் பெண்கள் வாக்குரிமை பெற்றார்கள். அமெரிக்காவின் புறக்கணிக்கப்பட்ட செம்பாதி மக்களுக்கு 19வது திருத்தத்தின் மூலம் 1920 ஆகஸ்ட் 18ல்தான் வாக்குரிமை கிடைத்தது.

**20ம் நூற்றாண்டில் நான்கில் மூன்று பங்கு அமெரிக்க மாநிலங்கள் கருக்கலைப்பு மேற்கொள்ளும் உரிமையைப் பெண்களுக்கு வழங்கவில்லை: அது பாலியல் அத்துமீறல் குற்றத்தின் விளைவாகக் கருவுற்றிருந்தாலும், அதனைக் கலைக்கவும் உரிமை இல்லை. கருவைத் தொடர்ந்து சுமந்தால் தாயாக வேண்டிய பெண்ணின் உயிருக்கு ஆபத்து என்றாலும் கருக்கலைக்க உரிமையில்லை.**

கர்ப்ப காலத்தின் மூன்று பருவங்களில் முதல் பருவத்தில் கருக் கலைப்பு செய்ய 550 டாலர் செலவு! புதிய சட்டத்திற்குப் பிறகு கருக்கலைப்புக்கான செலவு சாதாரண அமெரிக்க மக்களின் பட்ஜெட்டிற்குக் கட்டுப்படி ஆகாததாக உயரும். இதில் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்கள் ஒன்றைத் தாய்மார்கள். அத்தகையவர்கள் தன் குடும்பத்தில் மற்றொரு உயிரைப் புதிதாகச் சேர்த்துக் கொள்ள விரும்ப மாட்டார்கள்.

இப்போது அவர்கள் தேவையற்ற குழந்தையைப் பெற்றுக் கொள்ளவும், ஏழ்மையில் மேலும் கீழே தள்ளப்படும் கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுவர். தேவையற்ற கருவாக உள்ள குழந்தைக்கு உண்மையில் பொறுப்பான ஏதோ ஒரு ஆண், எங்கேயோ வெறும் மனமகிழ்ச்சிக்காகக் காற்றில் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு மகிழ்ந்திருக்கலாம். அமெரிக்க நாடாயிற்றே!

**கவலைதரும் உண்மைகள்**

அமெரிக்கா பின்னோக்கிப் போகிறது. உலகம் முழுதும் அதிதீவிர வலதுசாரிகள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற ஜனநாயகக் கோட்பாடுகளை ஒருபோதும் விரும்புவதில்லை. அவர்களும் அவர்தம் தலைமுறையினரும் அபரிமிதமான வசதி வாய்ப்புகள் உடன் வாழ்வதற்குத் தற்போதைய நிலை அப்படியே தொடர்ந்து இருக்க வேண்டும் என விரும்புகிறார்கள். முதலாளித்துவம் தற்போதைய நிலை நீடித்திருப்பதைப் பாதுகாக்கிறது; எனவே அமெரிக்காவை வழிநடத்தும் வர்க்கம் முதலாளித்துவத்தை அவ்வளவு நேசிக்கிறது.

இந்த அமெரிக்காதான் பிறக்காத கருவைப் பற்றி வானத்திற்கும் பூமிக்குமாகப் பெரும் கூச்சலிடுகின்றது, அப்பாவி மக்கள் படுகொலைக்காகக் கண்ணீர் சிந்தவும் மறுத்து அசையாது இருக்கிறது!

**இன்னும் நம்பிக்கை மிச்சம் இருக்கிறது**

இந்தியாவின் முன்னணி நாளிதழ் 'தி இந்து' ஜூன் 30 இதழில் கருக்கலைப்புக் குறித்த ஆய்வு மையச் சர்வே முடிவுகளை வெளியிட்டுள்ளது. சர்வேயில் பங்கேற்றவர்களில் 61 சதவீதத்தினர் கருக்கலைப்பு உரிமை மற்றும் அதற்குச் சட்ட ஆதரவை வழங்க பலமான ஆதரவளித்துள்ளது வியப்பிற்குரியது. 31 சதவீதத்தினர் மட்டுமே கருக்கலைப்பைச் சட்டவிரோதமாக்க விரும்புகின்றனர். கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்க எதிரானவர்கள்கூட பலாத்காரம் காரணமாக உண்டாகும் கருவைக் கலைக்கவும் அல்லது கர்ப்பம் தாயின் உயிருக்கு ஆபத்து எனில் கருக்கலைப்பை அனுமதிக்க வேண்டும் எனக் கருத்து தெரிவித்தனர்.

ஆய்வில் வெளிப்பட்ட ஆர்வமூட்டும் உண்மை, படித்த மக்களின் உற்சாகமான ஆதரவு. பட்டதாரி மற்றும் கூடுதல் கல்வி பெற்ற மக்களிடையே அதிகபட்சமாக 75 சதவீத ஆதரவு இருந்தது. பள்ளிப் படிப்பை முடிக்காத மக்கள் பிரிவுகளிலிருந்தே ஆட்சேபம் வந்தது. அனைவருக்கும் ஆறுதல் அளிக்கும் ஓர் உண்மை, 58சதவீத ஆண்கள், 63 சதவீதப் பெண்களும் கருக் கலைப்பிற்குச் சட்டபூர்வ அனுமதியை, ஒவ்வொரு பெண்ணின் உரிமையாக, வழங்க வேண்டும் என்று விரும்பியதே.

செய்தி தெளிவானது சமூக விஷயங்களில் அளவுக்கு அதிக மாக நீதித் துறையைச் சார்ந்திருப்பது, எதிர்மறை விளைவையே தரும். கருக்கலைப்புப் போன்ற விஷயங்களில் முடிவு அமெரிக்க மக்களாலேயே எடுக்கப்பட வேண்டும். மற்ற இடங்களிலும் இதுவே பொருந்தும். நாடும் உலகமும் மக்களுக்குச் சொந்தமானது. மக்கள் தங்களுக்கான முடிவுகளைத் தாங்களே மேற்கொள்ள வேண்டும்.

உலக மக்களே ஒன்று சேருங்கள்! உங்கள் எதிர்காலம் இடர்பாட்டில் உள்ளது! சவாலை ஒன்றுகூடி சந்திப்போம், வாருங்கள்!

நியூஏஜ்: தமிழில் : **நீலகண்டன்**

---

போகிறதாம். தாடி வைத்திருக்கும், குல்லா போட்டிருக்கும், தொழுகை நடத்தும் முஸ்லிம்கள் தேச பக்தி சான்றிதழ் பெற தகுதியற்றவர்களாம். இது அவர்களின் கண்டுபிடிப்பு. இந்த செயல் ஏதோ சாதாரண விஷயமல்ல. விஷமான, விஷமமான சங்பரிவார்களின் திட்டமிட்ட சதி. முஸ்லீம்களை தேசவிரோதிகள் எனப் பெயரிட்டு மக்களிடையே அவப்பெயர் ஏற்படுத்தி ஓரம் கட்டுவதற்கான ஏற்பாடே இது என்பதை பாசிச இந்துத்துவா சனாதனத்திற்கு எதிரான சக்திகள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த இடத்தில் மக்கள் வேறொன்றையும் யோசிக்க வேண்டும். விடுதலைப் போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்கு ஒருபுறம் இருக்கட்டும். வெள்ளையனுக்கெதிரான இந்திய விடுதலைப் போராட்டத்தில் இந்த ஆர்.எஸ்.எஸ். சனாதன கூட்டத்தின் பங்கு என்ன? எள் அளவாவது உண்டா? யாரேனும் ஒரேயொரு சங்கியை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர், உயிர்த் தியாகம் செய்தவர் என்றோ, அதெல்லாம் கூட வேண்டாம் குறைந்த பட்சம் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டவர் என்றோ அடையாளம் காட்டமுடியுமா? இப்படிப்பட்ட இந்த தேச விரோத கும்பலுக்கு தேசபக்தி பற்றி பேசவோ, இந்திய மண்ணின் புனிதம் பற்றி பேசவோ என்ன அருகதை இருக்கிறது.

விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்காவிட்டாலும் சும்மாவாவது இருந்ததா இந்தக் கூட்டம். இல்லை. காட்டிக் கொடுத்து துரோகம் செய்திட்ட கூட்டம் இது. விடாது தொடர்ந்து மன்னிப்பு கடிதங்கள் அனுப்பி, சரணாகதி அடைந்து, வாழ்நாள் முழுதும் வெள்ளை ஆட்சிக்கு எதிராக ஒருபோதும் செயல் பட மாட்டோம் என்பதுடன், சரணாகதி அடைவோம்! சேவகம் செய்வோம்! என எழுதிக் கொடுத்த வெட்கங்கெட்ட வீர் சாவர்க்கர் கூட்டமே இந்த சங்பரிவார கூட்டம். இந்த சங்பரிவார கூட்டத்திற்கு இந்தியாவில் முஸ்லிம்கள் வாழ நினைத்தால் இப்படித்தான் வாழ வேண்டும் , உணவு உடை விஷயத்தில் தாங்கள் கூறும் அநாகரீக முடிவுகளை ஏற்கவேண்டும் என்று சொல்ல, முஸ்லிம்களுக்கு அழுத்தம் ஏற்படுத்த என்ன யோக்கியதை இருக்கிறது.

**மகாத்மா காந்தி :** தேச பக்திக்கும், மனிதர்களின் மீதான அன்புக்கும் இடையே நான் எந்த வித்தியாசத்தையும் பார்க்கவில்லை. மனித நேயம் உள்ளவர்களால் மட்டுமே தேசபக்தி உடையவனாக இருக்க முடியும் . தேசபக்தி என்பது மதத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல என்றார் காந்தி. அத்துடன் இந்துக்கள் தங்களது மத சமூக கலாச்சார வாழ்வில் முஸ்லிம்கள் அல்லது கிருஸ்தவர்களை விமர்சனம் செய்தால் அதனை எந்த மனிதநேயம் உள்ள இந்தியரும் விரும்பமாட்டார்கள். இதுவேதான் அவர்களுக்குமானது என்றார் மகாத்மா. "ஈஸ்வர அல்லா தேரே நாம்...சப்கோ சன்மதி தே பகவான்" இதுதான் காந்தி கண்ட மதம், மனிதம்.

**மசூதிகள் இடிப்பு :** சமீபகாலமாக பாசிச கும்பலின் வகுப்புவாத மதவெறி அட்டூழியம் வீரியம் கொண்டுள்ளது. முஸ்லீம்களுக்கு எதிரான வன்மம் நிறைந்த மதவெறி ஊட்டும் பேச்சுக்களை அமைச்சர்கள் உள்ளிட்ட பா.ஜ.க. தலைவர்கள் பொதுவெளியில் பேசுகிறார்கள். கடந்த ஆண்டு டெல்லி கலவரத்தில் இந்துக்கள் வசிக்கும் பகுதி என 18 முஸ்லிம் தளங்கள் இந்துத்துவா வெறியர்களால் குறிவைத்து தாக்கி அளிக்கப்பட்டன. அங்கு எந்த இந்து கோவிலும் இல்லை. ஆனால் 11 மசூதிகள், 5 மதரஸாக்கள், ஒரு கல்லறை மதவெறிக் கும்பலால் இடித்து அழிக்கப்பட்டது என்று சிறுபான்மையினர் ஆணையம் அளித்த அறிக்கை கூறுகிறது.

உத்தரப்பிரதேசத்தில் 100 ஆண்டுகள் பழமையான கரிப்நவாஸ் மசூதி போக்குவரத்துக்கு இடைஞ்சல் எனக்கூறி இடித்து நொறுக்கப்பட்டுள்ளது. குஜராத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தில் 500 க்கும் மேற்பட்ட மசூதிகள், தர்காக்கள் அழிக்கப்பட்டதாக மனித உரிமை அமைப்பு கூறியுள்ளது.

பாரதிய ஜனதா கட்சி ஆட்சி செய்யும் உத்திரப் பிரதேசம், குஜராத், மத்தியப்பிரதேசம், ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் ராமநவமி ஊர்வலம் நடத்தப்பட்டு வன்முறையைத் தூண்டி இந்துத்துவா வெறியர்களால் முஸ்லிம்கள் தாக்கப்பட்டனர். அவர்களின் உடமைகள் சேதப்படுத்தப்பட்டு வாழ்வாதாரம் நிர்மூலமாக்கப்பட்டது. ஹலால் ஜிகாத், பொருளாதார ஜிகாத், பிரியாணி ஜிகாத், மாட்டிறைச்சிக்கு தடை, இந்து கோவில்கள் இருந்த இடத்தில் மசூதிகள் என அபாண்டம் சொல்லி மசூதி இடிப்பு போன்ற மத வன்முறைகள் தொடர்ந்து நடக்கிறது. முஸ்லீம்களை தீவிர வாதிகள், தேச விரோதிகள் என்ற பொய்யான பழிச்செயல்களுக்கு ஆளாக்கி அதையே மக்கள் மனதில் பதியச்செய்யும் பொய்ப் பிரச்சாரத்தை ஆளும் அரசின் துணையுடன் பாசிச சங்கிகள் கூட்டம் தவறாமல் செய்து வருகிறது.

" வன்முறையை உருவாக்குபவர்களை அவர்களின் ஆடை மூலம் அடையாளம் காண முடியும்" என மதச்சார்பற்ற நாட்டின் பிரதம மந்திரியான மோடியே பேசுகிறார். முஸ்லீம்களுக்கு எதிராக காஷ்மீர் பைல்ஸ் திரைப்படம் புனையப்பட்டு , பிரதமர் மோடியே அப்படத்தின் விளம்பரதாரராக செயல்பட்ட அவலம் கேடினும் கேடு. இதற்கெல்லாம் வேராக இருப்பது இந்துத்வம்.

இந்துத்தவம் தனது வர்ணாசிரம கோட்பாட்டை அமல் படுத்த இந்தியாவை இந்து நாடாக மாற்ற முயல்கிறது. இந்த முயற்சிக்கு தடையாக இருப்பது பன்முகத்தன்மையும், மதச்சார்பின்மையும் தான் என்று அது நினைக்கிறது. அதனை மாற்றிட துடியாய்த் துடிக் கிறது. எனவே சிறுபான்மை மக்களின் உணவு, உடை, வாழ்விடம், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் என எல்லாவற்றையும் அழித்தொழிக்கும் வேலையைத் துவங்கி விட்டது சங்பரிவார அமைப்புக்கள். இந்தியா இந்துக்களின் மண்; இங்கு வாழ விரும்பினால் ஜெய்ஸ்ரீராம் சொல்லவேண்டும் என்கிறது இந்துத்துவா கூட்டம். பாஜக கட்சி நிகழ்ச்சிகளில் இஸ்லாமியர்களை அழித்து விரட்ட வேண்டும் என்ற பிரதான கோஷம் வெளிப்படையாக எழுப்பப்படுகிறது. இந்தியா இந்துக்களின் தேசம்; இது இந்துக்களின் மண். எனவே இஸ்லாமியர்களே நீங்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறி உங்கள் நாட்டிற்கு ஓடுங்கள் என்ற முழக்கம் இந்துத்வா சங் பரிவாரங்களால் மக்கள் கூடங்களில் ஓங்கி ஒலிக்கப்படுகிறது.

சங்பரிவார்களின் இந்த பிரச்சாரம் இந்திய மண்ணின் பன்முகத் தன்மைக்கும், மக்களின் ஒற்றுமைக்கும், மதச்சார்பின்மைக்கும் எதிராக விடப்படும் பகிரங்க சவால். இந்த ஆணவத்தின் பின்புல துணையோடு தான் நுபுர்சர்மா சமீபத்தில் இஸ்லாம் மதத்தின் இறை தூதர் பற்றி, நபிகளைப் பற்றி மிகவும் இழிவாகப் பேசினார்.

இவர் யாரோ தனிநபர் அல்ல. பேசியதும் தற்செயலானது அல்ல. நுபுர் சர்மா பாரதிய ஜனதா கட்சியின் முக்கியப் பிரமுகர். அக் கட்சியின் செய்தித் தொடர்பாளரும் கூட. ஆகவே ஆர்.எஸ்.எஸ். சங்பரிவார கூட்டத்தின் முஸ்லீம்களுக்கு எதிரான பேச்சுக்களும், மதவெறிச் செயல்பாடுகளும் நாட்டின் பிளவுக்கான துவக்கமே. இந்த இந்துத்துவா மதவெறிக்கொள்கை எதிர்க்கப்பட வேண்டும். போராடி புதைக்கப்பட வேண்டும்.

ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தம் தலைதூக்கிட அனுமதிக்கவே கூடாது. சனாதனக்கூட்டம் இன்று மதத்தின் பெயரால் செய்திடும் பிரிவினைப் போக்குகளை நாளை இந்து மதத்திற்குள்ளேயே சாதியின் பெயரால் செய்து மக்களைப் பிரிக்கும். சாதிய இழிவுகள் நிச்சயம் தலைதூக்கும்.

இந்த அபாயகரமானப் போக்கு தொடர அனுமதிக்கவே கூடாது. சிதைக்கப்படவேண்டும். அதற்கான ஒரே வழி பாசிசத்திற்கெதிரான அத்துனை மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளும் பாசிச ஒழிப்போம் என்ற ஒரே முழக்கத்துடன் ஒருங்கிணைந்து போராட வேண்டும். வெள்ளையனை விரட்டி விடுதலை பெற்றது போல் ஒருங்கிணைந்து போராடி பாசிசத்தைப் படுகுழியில் தள்ளியாக வேண்டும்! இதன் மூலமே பாரதம் காத்திட முடியும்! நாசாகார தேச விரோத இந்துத்துவா இனியும் தொடர விடக் கூடாது. மதவெறிகளை மாளச்செய்வோம்! நாடு காப்போம்! நாட்டு மக்களை காப்போம்!

தொடர்புக்கு: **94449 56694**



ரிகள்தான்!
முதல் எதிரி!
திருப்பூரில் ஆகஸ்ட் 6, 7, 8, 9 தேதிகளில் சங்கமிப்போம்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
மாநில மாநாடு

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
# மாவட்ட மாநாடுகள்



**தருமபுரி:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்ட 24வது மாநாடு தருமபுரியில் உள்ள வன்னியர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எஸ்.கலைச்செல்வன், அல்லிமுத்து தலைமை வகித்தனர். மாநாட்டில் மாநில செயற்குழு உறுப்பினர் ந.நஞ்சப்பன் எக்ஸ்.எம்.எல்.ஏ. கட்சி கொடி ஏற்றி வைத்தார்.

மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ்.சின்னசாமி அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட துணைச் செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன் வரவேற்றார். மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார். மாநில துணைச் செயலாளர் கே.சுப்பராயன் வாழ்த்தி பேசினார். மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன் வேலை அறிக்கை வைத்து பேசினார். மாநில செயற்குழு உறுப்பினர் ஜி.பழனிசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. மாநாட்டை நிறைவு செய்து பேசினார்.

மாநாட்டில நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

காவிரி உபரி நீரை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளுக்கும் கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். தருமபுரியில் சிப்காட் துவக்கப்படுவதாக அறிவித்து 10 ஆண்டுகளாகியும் நிதி ஒதுக்கி, துவக்கப்படாமல் உள்ளது. உடனடியாக சிப்காட்டை துவக்கி வேலைவாய்பை உருவாக்கிடவும், பொருளாதாரத்தை மேம்படுத்தயும் வழிவகை செய்ய வேண்டும்.

தென்பெண்ணை ஆற்று நீரை எண்ணேகால் புதூர் வழியாக அரூர், காரிமங்கம், மொரப்பூர், கம்பைநல்லூர் ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்.அரூரில் மாலிப்டிணம் தொழிற்சாவையை உடனடியாக துவக்கிட வேண்டும்.

கெயில் நிறுவனம், விவசாயிகள் நிலத்தின் வழியாக எரிவாயு குழாய் பதிப்பு திட்டத்தை கைவிட்டு, தேசிய நெடுஞ்சாலை வழியாக குழாய் பதிப்பு செய்ய வேண்டும்

பூர்வீகமாக வனத்தில் வாழும் பழங்குடி மக்களை, வனத்தை விட்டு வெளியேற்ற தொடர்ந்து வனத்துறை முயற்சிக்கிறது. இது ஏற்றுக்கொள்ள தக்கதல்ல, மத்திய அரசு கொண்டு வந்த 2006 வன உரிமை சட்டத்தை தமிழக அரசு நடைமுறை படுத்தவில்லை. 2003 ல் தமிழக அரசு பழங்குடி மக்களுக்கு காடுபடு பொருட்களை அனுபவிக்க கூடிய வன உரிமையை வனத்துறை மீறி வருகிறது. தமிழக அரசு இந்த இரண்டு சட்டத்தையும்' உறுதியாக நிறைவேற்ற வேண்டும். வாராக் குத்தகை சாகுபடியாளர்களை, வாரகுத்தகை சாகுபடி சட்டத்தின் கீழ் அடங்கலில் பதிவு செய்வதில்லை. முறையாக வாரக்குத்தகை சாகுபடியாளர்களை பதிவேட்டில் பதிவு செய்யவேண்டும்.

ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி அருகில் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பு கருதி கம்பி வேலி அமைத்திட வேண்டும். வெளி மாநிலங்களுக்கு வேலை தேடி செல்லும் மக்களுக்கு வட்டார வாரியாக தொழிற்சாலை அமைத்து வேலை வாய்ப்பு அறிவித்திட வேண்டும்.

தருமபுரியில் சூப்பர் பெசாலிட்டி மருத்துவமனை துவங்கிட வேண்டும். தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உடனடியாக ஓமியோபதி மருத்துவ பிரிவு துவங்கிட வேண்டும். விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண்மை குளிர்பதன கிடங்கு வட்டாரம் வாரியாக அமைத்திட வேண்டும்.

நல்லம்பள்ளி, இலளிகம், மிட்டாரெட்டிஅள்ளி, வழியாக பொம்மிடி இணைப்பு சாலை அமைத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. 71 பேர் கொண்ட மாவட்டக்குழு தேர்வு செய்யப்பட்டது. எஸ்.கலைச்செல்வன் மாவட்டச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.

இறுதியில் மாவட்ட துணைச் செயலாளர் எம்.கோபால் நன்றி கூறினார்.

**திருச்சி புறநகர்:** மணப்பாறை விராலிமலை சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திருச்சி புறநகர் மாவட்ட 23வது மாநாடு நடைபெற்றது.

தங்கராசு, ராஜ்குமார், பிரேமாவதி ஆகியோர் தலைமை வகித்தனர். மாநாட்டு கொடியை மூத்த தோழர் ராகமத்துனிஷா ஏற்றிவைத்தார். மாநாட்டையொட்டி முதல் நாள் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு ஒன்றியச் செயலாளர் தங்கராசு தலைமை வகித்தார். நகர்மன்ற உறுப்பினர்கள் தங்கமணி, மனோன்மணி, முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் சௌக்கத்அலி, மருங்காபுரி ஒன்றிய செயலாளர் வெள்ளைகண்ணு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தனம் சிறப்புரை யாற்றினார்.

மாநாட்டை தொடங்கி வைத்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம் உரை நிகழ்த்தினார். மாநகர் மாவட்ட செயலாளர் சிவா வாழ்த்துரை நிகழ்த்தினார். அரசியல் அறிக்கையை இந்திரஜித் வாசித்தார்.

37 பேர் கொண்ட மாவட்டக் குழுவும், அழைப்பாளர்களாக 7 பேரும் தேர்வு செய்யப்பட்டனர்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

மேட்டூர் அணையில் நீர்மட்டம் 120 அடிக்கு மேல் வந்த பின்னர் உபரிநீரை 182 கிலோ மீட்டர் நீளம் கால்வாய் வெட்டி அதன் மூலம் மேட்டூர் அணைக்கும் கீழ் உள்ள சேலம், நாமக்கல் மற்றும் திருச்சி மாவட்டத்தில் பாயும் ஆறுகள் மற்றும் அணைக்கட்டுகளை இணைப்பதன் மூலம் சங்ககிரி, திருச்செங்கோடு, நாமக்கல், பரமத்திவேலூர், ராசிபுரம் வட்டங்களை சேர்ந்த 16,900 ஏக்கர் நிலங்களும், திருச்சி மாவட்டத்தில் வடபகுதி கரைபட்டான் ஆறு, கோம்பை ஆறு, அய்யாறு இணைத்து இறுதியில் துறையூர் அருகே உள்ள மாவடியான் ஆறு மூலம் கீரம்பூர் ஏரியில் சங்கமிக்கும் திட்டத்தின் மூலம் தொட்டியம், தா.பேட்டை, 15,523 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறும்.

உப்பிலியபுரம், துறையூர், முசிறி ஒன்றியங்களை சேர்ந்த இந்த திட்டத்தில் தேவையான மதிப்பீடுகளையும், செயற்குறிப்பினையும் சேலம் திட்டம் மற்றும் செயற்பொறியாளர் அவர்களால் ரூ.390 கோடிக்கு தயாரிக்கப்பட்டு சென்னை பொதுப்பணித்துறை பாசன தலைமை பொறியாளர் அவர்களுக்கு 11.08.1994ல் அரசின் ஒப்புதல் பெறும் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

2013ல் ரூ.1174 கோடிக்கு தயாரிக்கப்பட்டு திட்ட மதிப்பீடு செய்ய 50 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் 2020 ல் மேட்டூர் சரபங்கா நீர்ஏற்றுத்திட்டம் என்று 565 கோடியில் தொடங்கப்பட்டுள்ளது. மற்ற ஆறுகள் இணைப்பதை கிடப்பில் போட்டுள்ளன.

ஆகவே காவிரி, சரபங்கா, திருமணிமுத்தாறு, அய்யாறு, மாவடியான் ஆறு இணைப்புக் கால்வாய் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற தமிழக அரசை இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது.

காவிரியில் மாயனூரில் இருந்து பொன்னி ஆற்றை இணைப்பதன் மூலம் வறண்ட பகுதியாக உள்ள வையம்பட்டி மணப்பாறை ஒன்றியங்கள் பாசனவசதி பெறும். ஆகவே இந்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

சி.ஆர்.பாளையம் அருகே மகாநதியில் ஆவாரவள்ளியில் நீர் தேக்கத்தை ஏற்படுத்தி கல்பாளையம், மகிழம்பாடி, ரெட்டிமாங்குடி, தச்சன் குறிச்சி, குமுழூர், கண்ணாக்குடி, வந்தலை, கூடலூர் ஏரிகளை கால்வாய் மூலம் இணைப்பதன் மூலம் புள்ளம்பாடி ஒன்றியம் பாசன வசதி பெறும்.

முசிறி பரிசல் துறையில் இருந்து வரும் காட்டுவாய்க்கால் சித்தாம்பூருக்கு மேற்கே அய்யாற்றில் கலக்கிறது. அந்த வாய்க்காலை அய்யாற்றில் பாலம் அமைத்து குருவம்பட்டி, மூவராயம்பாளையம், கவுண்டம்பட்டி, சோழங்கநல்லூர், வால்பால் பாளையம் பகுதிகள் பாசனவசதி பெறும் வகையில் திருப்பைஞ்சலி ஏரியை இணைக்கும் வகையில் புதிய கால்வாய் அமைக்க வேண்டும்.

உப்பிலியபுரம் ஒன்றியம் எரகுடிக்கு வடக்கே ஆர்.புதுப்பட்டி கருப்பு கோவில் அருகே தளுகை ஆறு இணையும் இடத்தில் அய்யாற்றில் புதிய நீர் தேக்கமும், தளுகை ஊராட்சி த.மங்கப்பட்டி தாழம்புதை அருகே தளுகை ஆற்றில் புதிய நீர் தேக்கமும், ருத்தராட்சை கோம்பனக்கும் வடக்கே மந்தைபுறம்போக்கில் கோம்பை ஆற்றில் புதிய நீர் தேக்கத்தை உருவாக்க வேண்டும்.

மணப்பாறை நகரத்தில் உள்ள 110 ஏக்கர் பரப்பு கொண்ட குளத்தினை தூர்வாரி கரைகளை உயர்த்த வேண்டும்.

மணப்பாறை ஒன்றியம் மொண்டிப்பட்டியில் தொடங்கப்பட்டுள்ள தமிழ்நாடு காகித ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீரால் நிலத்தடி நீர் மாசுபடுவதை கட்டுப்படுத்த கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து வெளியேற்ற வேண்டும்.

துறையூர் சின்ன ஏரியில் சாக்கடை நீர் கலப்பதால் நிலத்தடி நீரை குடித்தால் ரெப்பரசி நோய் வரும் என்று ஆய்வு கூறுகிறது. ஆகவே துறையூர் சாக்கடை நீரை சுத்திகரிப்பு செய்து வெளியேற்ற வேண்டும்.

மண்ணச்சநல்லூர் தாலுகாவில் உள்ள தனியார் சிமெண்ட் ஆலைகள், தார் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், அரிசி ஆலைகள் இவற்றில் இருந்து வெளியேறும் மாசை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வையம்பட்டி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை பாலப்பட்டியில் திறந்த வெளியில் உள்ள சமையல் எரிவாயு நிரப்பும் ஆலையில் இருந்து வெளியேறும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்ய வேண்டும்.

மணப்பாறையில் இயங்கிவரும் திருச்சி மாவட்ட தலைமை மருத்துவமனையில் இணை இயக்குநர் அலுவலகம் அமைத்து தர கேட்டுக்கொள்கிறது.

உப்பிலியபுரம் ஒன்றியம் வைரிசெட்டிப்பாளையம் மற்றும் பி.மேட்டூரில் நிரந்தர நேரடி நெல்கொள்முதல் நிலையம் அமைத்து தர வேண்டும்.

திருச்சியிலிருந்து புலிவலம், துறையூர், தம்மம்பட்டி வழியாக ஆத்தூருக்கு புதிய ரயில்பாதை ரயில்பாதை இணைப்பு வழங்க வேண்டும்.

மணப்பாறையில் ரயில் ஜங்சன் ஏற்படுத்தி, மணப்பாறை துவரங்குறிச்சி, மேலூர் சிவகங்கை வழியாக ராமேஸ்வரத்திற்கும், மணப்பாறை விராலிமலை வழியாக புதுக்கோட்டைக்கும், மணப்பாறை குளித்தலைக்கும் புதிய ரயில்பாதை இணைப்பு வழங்க வேண்டும்.

அரசு அறிவித்த அரியலூரில் இருந்து பெரம்பலூர் துறையூர் வழியாக நாமக்கல் ரயில் பாதை திட்டத்தை விரைந்து நிறைவேற்ற வேண்டும்.

மருங்காபுரி, துறையூர் தாலூகாவில் இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்பு வழங்குகின்ற வகையில் புதிய தொழிற்பேட்டை அமைத்து தர வேண்டும்.

உப்பிலியபுரம் சுற்றுப்பகுதியில் அதிக அளவில் மரவள்ளி கிழங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இவை அனைத்தும் சேலம் மாவட்ட தொழிற்சாலைக்கு கொண்டு செல்லப்படும் அவலநிலை உள்ளது. ஆகவே அரசு கொப்பம்பட்டியில் (ஜவ்வரிசி, சேமியா, மைதா, குளுக்கோஷ், அப்பளம்) தயாரிக்க தொழிற்சாலை ஏற்படுத்தி தர வேண்டும்.

துறையூர் பகுதியில் அரசு கலை, அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டும்.

வையம்பட்டி ஒன்றியத்தில் உள்ள பொன்னனி ஆறு அனையும் பாசன பகுதியும் திருச்சி மாவட்டத்தில் உள்ளது. ஆனால் நீர்பிடிப்பு பகுதி கரூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இதனால் தூர்வாரும் பணிகள் நடைபெறுவதில்லை. ஆகையால், கரூர் மாவட்டத்தில் உள்ள நீர் பிடிப்பு பகுதியான கடவூர் ஊராட்சியினை திருச்சி மாவட்டத்துடன் இணைத்து அணையினை தூர்வாரியும், சுற்றுலா தளத்தை மேம்படுத்த வேண்டும்.

மணப்பாறை, மருங்காபுரி தாலுகாக்கள், கரூர் மாவட்டத்தில் உள்ள கடவூர் தாலுகா மற்றும் தோகைமலை ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விராலிமலை தாலுகா ஆகிய பகுதிகளை இணைத்து மணப்பாறையை தலைமை யிடமாக கொண்டு புதிய மாவட்டம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


கோவை: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட 24 வது மாநாடு மசக்காளி பாளையத்தில் உள்ள ஹர்ஷா




மகாலில் நடைபெற்றது. முன்னதாக மாநாட்டு கொடியை மசக்காளிபாளையம் மைதானத்தில் கட்சியின் மூத்த தோழர் ராமகிருஷ்ணன் ஏற்றி வைத்தார். அங்கிருந்து கட்சி தோழர்கள் ஊர்வலமாக மாநாட்டு அரங்கம் அமைக்கப்பட்டுள்ள ஹர்ஷா மகாலுக்கு சென்றனர். ஹர்சா மஹாலில் மாநாட்டை துவக்கி வைத்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளர் கே.சுப்பராயன் எம்.பி. பேசினார். மாநாட்டு அரங்கத்தில் மறைந்த தோழர்களின் படங்களுக்கு கட்சி தோழர்கள் அஞ்சலி செலுத்தினர்.

மாநாட்டு தலைமைக்குழுவாக பி.மௌனசாமி, எம்.நிர்மலா, என்.கிருஷ்ணன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம், கோவை மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்தரம், மாவட்ட துணை செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட பொருளாளர் யூ.கே.சுப்பிரமணியன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் பி.மௌனசாமி, ஜே.ஜேம்ஸ், ஜி.நாராயணசாமி, பி.முருகன், சி.தங்கவேல், மு.வ.கல்யாணசுந்தரம், எம். குணசேகர் மற்றும் கே.எம்.செல்வராஜ், என்.செல்வராஜ், சு. பழனிசாமி, கிழக்கு மண்டல செயலாளர் எஸ்.சண்முகம் மாமன்ற உறுப்பினர் எம்.டி. மோகன், மாமன்ற உறுப்பினர்கள் மல்லிகா புருஷோத்தமன், பிரபா ரவீந்திரன், சாந்தி சந்திரன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.



- பீட்டர் துரைராஜ்

# ஒரே பாலினத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்துகொள்ளச் சட்டம்?



**கடந்த மாதம் கேரளா உயர்நீதிமன்றம், ஒரே பாலினத்தைச் சார்ந்த இருவர் சேர்ந்து வாழ தடையில்லை என்று தீர்ப்பு அளித்துள்ளது.**

எர்ணாகுளத்தைச் சார்ந்த அதிலா நசுரீன் என்ற 22 வயது பெண்ணும், நூரா என்ற 23 வயது பெண்ணும் சேர்ந்து வாழ்ந்து வந்தனர். இதனை விரும்பாத நூராவின் பெற்றோர், அவரை வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்று விட்டனர். இதனை எதிர்த்து அதிலா நசுரீன் உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தார். இதனை விசாரித்த, கேரள உயர்நீதி மன்றம் இருவரும் சேர்ந்து வாழ தடையில்லை என்று சொல்லி விட்டது. ஒரே பாலினத்தைச் சேர்ந்த அதாவது, ஆணும் ஆணும், அல்லது பெண்ணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்வது பற்றி சட்டம் என்ன சொல்கிறது.

தன்பாலின உறவை குற்றம் என்று இந்திய தண்டனைச் சட்டத்தின் 377 வது பிரிவு கூறியது. கிறிஸ்தவர்களின் வேத நூலான விவிலியத்தின் எண்ணவோட்டப்படி, ஆங்கிலேயர்களால் 1860 ல் இயற்றப்பட்ட, இந்திய தண்டனைச் சட்டம், தன் பாலின உறவு குற்றம் என்று கூறியது. ஆனால் 2018 ஆண்டு, உச்சநீதிமன்றம் தன் பாலின உறவு குற்றம் இல்லை (decriminalise) என்று ஒரு தீர்ப்பில் கூறிவிட்டது. எனவே தற்போது தன்பாலின உறவு என்பது ஒரு குற்றமாகாது. அவர்கள் திருமணம் செய்து கொண்டால், அது சட்டப்படி செல்லுமா ! ஒரே பாலினத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்து கொள்ளலாமா !

இது குறித்து மருத்துவர் அமலோற்பநாதன் அவர்களிடம் கேட்டபோது " ஒருவருடைய பாலியல் விருப்பத்தில் தலையிட யாருக்கும் உரிமை இல்லை. ஆணும் பெண்ணும்தான் உடலுறவு கொள்ள வேண்டும் என்று யாரும் சொல்ல முடியாது. இதில் மாறுபாடு இருக்கலாம். இது மருத்துவ ரீதியிலும், உயிரியல் ரீதியிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றுதான். எனவே தன் பாலின உறவு குற்றமில்லை என்ற உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு சரியானதுதான். அவர்கள் திருமணம் செய்துகொள்ள தனியான சட்டம் கேட்டால் இயற்றுங்கள். அதனால் சமுதாயத்திற்கு என்ன தீங்கு நேரப்போகிறது. அவர்கள் குழந்தையை தத்து எடுத்து வளர்க்க இந்தச் சட்டம் பயன்படும். சொத்துரிமைக்கும் இந்தச் சட்டம் பயன்படும் " என்றார்.

"தன் பாலின உறவு பழக்கம் கொண்டவர்களோடு, நான் பழகி யிருக்கிறேன். சாதாரணமாக நமக்கு எப்படி எதிர்பாலினத்தவரோடு பாலியல் ஈர்ப்பு இருக்கிறதோ அப்படித்தான் அவர்களுக்கு தன் பாலினத்தைச் சேர்ந்தவர்களோடு ஈர்ப்பு இருக்கும். இது அவர்களின் பாலியல் தேர்வு; உரிமை. எனவே சமுதாயம் அவர் களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும்" என்றார் ஆய்வாளரான கீதா நாராயணன்.

"தன் பாலின ஈர்ப்பு கொண்டவர்களை இந்த சமுதாயம் அவமானமாக கருதுகிறது. வீட்டை விட்டு துரத்துகிறார்கள். தற்கொலை செய்துகொள்வேன் என பெற்றோர்கள் மிரட்டி அவர்கள் விருப்பத்திற்கு விரோதமாக, திருமணம் செய்து வைக்கிறார்கள். இது அவர்களுக்கு, கூடுதலாக மன அழுத்தங்களைத் தருகிறது. பொதுக்கருத்தை உருவாக்கும் வெகு மக்கள் ஊடகங்கள், தன் பாலின உறவு கொண்டவர்களை மோசமாக காட்சிப்படுத்துகின்றன. உதாரணமாக, 'வேட்டையாடு விளையாடு' படத்தில் வரும் வில்லனை தன் பாலின உறவு கொண்டவனாக காட்டியிருப்பார்கள். பத்திரிகைகளில் எழுதும் போது 'கூடா நட்பு' என்று எழுதுவார்கள். இது போன்ற சொல்லாடல்களாலும், காட்சி அமைப்புகளாலும் இவர்களுக்கு எதிரான மனநிலை கட்டப்படுகிறது. இவர்கள் நல்லவிதமாக காட்சிப்படுத்தி ஒரு பாடல் வைக்கலாம். படம் எடுக்கலாம். அவர்களும் நம்மைப் போல உணர்வு கொண்டவர்கள் என்பதை எழுதலாம். இப்போதுதான் ஆண், பெண் என்பதைத் தாண்டி, திருநங்கை, திருநம்பி என்ற சொல்லாடல்களைப் பயன்படுத்த தொடங்கியிருக்கிறார்கள். இன்னும் வர வேண்டிய வார்த்தைகள் நிறைய உள்ளன. தன்பாலின திருமணத்திற்கு சட்டம் கொண்டு வருவது தவறில்லை. 2018 ல், உச்சநீதிமன்றம் தன்பாலின உறவு குற்றமில்லை என்ற தீர்ப்பு ( நவ் தேஜ் சிங் ஜோகர் எதிர் இந்திய அரசு) வர வாதாடிய வழக்கறிஞர்கள் மேனகா குருசாமி, அருந்ததி கட்ஜூ ஆகிய இருவரும், தங்களை சேர்ந்து வாழும் தம்பதியினர் என்று பகிரங்கமாக அறிவித்துக் கொண்டனர் " என்றார் பத்திரிகையாளரான பிருந்தா சீனிவாசன்.

தேசியவாத கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான சுப்ரியா சுலே, ஒரே பாலினத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்துகொள்வதை சட்டமாக்க, தனிநபர் மசோதாவை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இது சட்டமானால், சேர்ந்து வாழும் இருவரில் ஒருவர் இறந்து போனால் அவரது உடலை பெறும் உரிமை, நட்ட ஈடு பெறும் உரிமை, சொத்தில் உரிமை, தத்தெடுக்கும் உரிமை போன்றவைகளை பெற இயலும்.

தில்லி உயர்நீதிமன்றத்தில், ஒரே பாலினத்தைச் சார்ந்தவர்கள் திருமணம் செய்துகொள்வதற்கு சட்டம் இயற்றக் கோரி தாக்கல் செய்யப்படுள்ள வழக்கு விசாரணையில் உள்ளது. இதற்கு எதிராக ஒன்றிய அரசு பதில் மனு தாக்கல் செய்துள்ளது. முடிவு எப்படி இருக்கும் என தெரியவில்லை.

இராணுவத்தில் இருந்து தன் தன் பாலின விழைவு காரணமாக மேஜர்.சுரேஷ் என்பவர் ஓய்வுபெற்றார். அதனை மையமாக வைத்து ஒனிர் என்பவர் இயக்கிய படத்தை வெளி யிட இராணுவம் அனுமதிக்கவில்லை. உச்சநீதிமன்றம் தன் பாலின உறவு குற்றமற்றதாக ஆக்கியும், இந்தப்படத்திற்கு அனுமதியளிக்கப்படவில்லை.

ஒரே பாலின விருப்பம் உள்ளவர்கள் எத்தனை பேர் என்பது போன்ற புள்ளி விபரங்கள் ஏதுமில்லாத சூழலில், நமது பொறுப்பு அதிகமாகிறது.

**அரசாங்கமானது தனி நபர் உரிமைகளைப் பாதுகாப்பதில் முக்கியப் பங்கு வகிக்க வேண்டும். குறிப்பாக சிறுபான்மையினர் சம்மந்தப்பட்ட விவகாரங்களில் கூடுதல் அக்கறை காட்ட வேண்டும்; அது மொழி சிறுபான்மையினராக இருக்கலாம்; இன சிறுபான்மையினராக இருக்கலாம்; மத சிறுபான்மையினராக இருக்கலாம்; பாலியல் சிறுபான்மையினராக இருக்கலாம். இவர்களின் உரிமைகளுக்காக முனைப்பு காட்ட வேண்டியது அவசியமாகும்.**

அனைவராலும் நீதிமன்றங்களுக்கு செல்ல முடியாது. எனவே ஒன்றிய அரசு இதற்காக சட்டம் இயற்ற வேண்டும்; தில்லி உயர்நீதிமன்றத்தில் ஒரு பாலின திருமணத்தை எதிர்த்து கருத்து தெரிவிக்கக் கூடாது. இதற்கேற்ற வகையில் திருமணச் சட்டங்களை திருத்தி குடும்பம் என்ற வரையறையில், உரிய மாற்றங்களை செய்ய வேண்டும்.

விநோதமாக, இதுபோன்ற சட்டங்களை எதிர்ப்பதில் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் தலைமைகள் ஒரே நிலை எடுக்கின்றன. நெதர்லாந்து இருபது ஆண்டுகளுக்கு முன்பாக, முதன்முதலில் ஒரே பாலினத்தைச் சார்ந்தவர்கள் திருமணம் செய்துகொள்ள சட்டம் இயற்றியது. தற்போது இது போன்ற சட்டங்களை 31 நாடுகள் இயற்றியுள்ளன. செக்கோஸ்லோவியா நாட்டிலிருந்து பிரிந்த நாடான ஸ்லோவேனியா, கடந்த வாரம் இப்படி ஒரு சட்டத்தை இயற்றி உள்ளது. எனவே இந்தியாவும் தன் பாலின திருமணத்தை ஒத்துக்கொள்ள சட்டம் இயற்ற வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டப்படி, தனி நபர் உரிமைகளை உறுதி செய்ய வேண்டிய கடமை பாராளுமன்றத்திற்கும் உள்ளது; நீதிமன்றத்திற்கும் உள்ளது; அரசிற்கும் உள்ளது. எனவே, பாலினச் சிறுபான்மையினர் உரிமையைப் பாதுகாக்கும் வகையில், ஒரே பாலினத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்துகொள்வதை அங்கீகரிக்க சட்டம் இயற்ற வேண்டும். இந்தியாவில் இயற்றப்படும் சட்டங்களின் தாக்கம், மற்ற நாடுகளிலும் இருக்கும்.

தொடர்புக்கு: 94449 71304


## பாலதண்டாயுதம் இரத்த தான இயக்கம் சார்பில் 34வது இரத்த தான முகாம்



சூலூர் கண்ணம்பாளையத்தில் நடைபெற்ற இரத்த தான முகாமில் 116 பேர் இரத்த தானம் செய்தனர்.

மறைந்த முன்னாள் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் பாலதண்டாயுதம் நினைவாக சூலூரில் பாலதண்டாயுதம் இரத்த தான இயக்கம் 1999ல் துவங்கப்பட்டது. இரத்த தான முகாம்கள் மூலமும், மருத்துவமனைக்கு நேரடியாக சென்றும் இதுவரை சுமார் 4060 யூனிட் இரத்தம் நோயாளிகளுக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது.

33வது இரத்த தான முகாம் கண்ணம்பாளையம் அருள்மிகு பங்கயற் செல்வி கோவில் திருமண மண்டபத்தில் ஜூலை 17 அன்று நடைபெற்றது. முகாமிற்கு இயக்க செயலாளர் வே.வசந்தகுமார் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் மா.சரோஜினி வரவேற்புப் பேசினார். கே.என்.ஜோதிமணி சுப்புலட்சுமி மற்றும் எஸ்.கமலக்கண்ணன் ஜெயலட்சுமி தம்பதியினர்கள் குத்துவிளக்கேற்றி முகாமினை துவக்கி வைத்தனர். இம்முகாமில் 5 பெண்கள் உட்பட 116 பேர் இரத்த தானம் செய்தனர். முகாமில் இரத்த தான இயக்க தலைவர் பெ.மௌனசாமி, நிர்வாகிகள் வீ.பேரின்பம், பி.சுப்பிரமணியம், ர.மாலதி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.


இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25-வது தமிழ் மாநில மாநாட்டு சிறப்பிதழ் ஜனசக்தியின் சார்பில் வெளிவர உள்ளது. 1925 டிசம்பர் 26ல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் துவக்கம் முதல் 24வது மாநில மாநாடு வரை வரலாற்று விவர குறிப்புகள் படங்களுடன் சிறப்பிதழில் இடம் பெறுகின்றன. பொக்கிஷம் போல் பாதுகாத்து அவ்வப்போது படித்து பயன் பெறலாம்.

### விளம்பரக் கட்டணம்

| | | | | |
|---|---|---|---|---|
| அட்டை | முதல்பக்கம் | கலர் | - | 50,000 |
| அட்டை | கடைசிபக்கம் | கலர் | - | 45,000 |
| அட்டை | 2-ம் பக்கம் | கலர் | - | 40,000 |
| அட்டை | 3-ம் பக்கம் | கலர் | - | 35,000 |
| உள்பக்கம் | முழுப்பக்கம் | கலர் | - | 30,000 |
| உள்பக்கம் | அரைப்பக்கம் | கலர் | - | 15,000 |
| உள்பக்கம் | கால்பக்கம் | கலர் | - | 7,500 |
| உள்பக்கம் | க/வெள்ளை | முழுப்பக்கம் | - | 20,000 |
| உள்பக்கம் | க/வெள்ளை | அரைப்பக்கம் | - | 10,000 |
| உள்பக்கம் | க/வெள்ளை | கால் பக்கம் | - | 5,000 |

குறிப்பு: விளம்பரங்கள் ஜூலை 30-ம் தேதிக்குள் ஜனசக்தி முகவரிக்கு கிடைக்க வேண்டும். வங்கியில் பணம் செலுத்தியவர்கள் அதற்கான பதிவு செலானை பிரதி எடுத்து தபாலில் அல்லது ஸ்கேன் செய்து இ-மெயிலில் அனுப்ப வேண்டும்

Janasakthi Trust
பணம் செலுத்தும் விபரம்
A/C. NO. 1083 0200 0009 999
IFC. NO. 0001083
Indian Overseas Bank
Mylapore Branch
Chennai - 600 004
ஜனசக்தி

ஜனசக்தி
விளம்பரம் அனுப்ப வேண்டிய முகவரி
பாவை பிரிண்டர்ஸ் மாடி,
16/142, ஜானி ஜான்கான் ரோடு,
ராயப்பேட்டை,
சென்னை - 600 014,
செல்: 8220468816, 9444331138
இ.மெயில். info.janasakthi@gmail.com


## இந்த வார தம்பிக்குறள்

### 80. வேருக்கு நீர்

**வேருக்குநீர் வார்த்தால் நயநல்கும் மக்கள்பல**
**பேருக்கு அறிவார்த்தல் ஆங்கு**

மக்கள் யாருக்கும் அறிவளிக்க உதவுவது உழைக்கும் செயலே. இது செடிகளின் வேருக்கு நீர் பாய்ச்சுவது போல ஆகும். சமூகம் செழிக்க அறிவளித்தல் வேண்டும். (எடுத்துக்காட்டு உவமை அணி)

**மக்கட்கு அறிவு மதித்தீதல் வேண்டும்நாம்**
**மக்களாங்கு ஈயார் நமக்கு**

மக்களை மதித்து, அவர்களுக்கு அறிவைப் புகட்டும் தொண்டைச் செய்தல் வேண்டும். அவர்களாக நமது அறிவை ஊட்ட மாட்டார்கள். (அறிஞர்கள் அவர்களி டமிருந்து அறிவை எடுத்துக் கொள்ள வேண்டும்.)

ஜனசக்தியில் வாரந்தோறும் தம்பிக்குறள் வெளிவருகிறது. கருத்துச் செறிவுமிக்க குறள்கள் ஜனசக்தியில் வெளிவரவேண்டும் என்ற நோக்கோடு, சேலம் இளம்பிள்ளை சந்திரசேகர் அவர்கள் இதற்கான ஜனசக்தி வளர்ச்சி நிதியாக இதுவரை ரூ.50,000 வழங்கியுள்ளார். ஜனசக்தியின் சார்பில் தோழர் இளம்பிள்ளை சந்திரசேகருக்கு நன்றியினைத் தெரி வித்துக் கொள்கிறோம்.



தோழர் என்.சங்கரய்யா 101வது பிறந்தநாள்

## தோழர் இரா.நல்லகண்ணு நேரில் வாழ்த்து

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் என்.சங்கரய்யா 101–வது பிறந்த நாள் விழா குரோம்பேட்டையில் உள்ள அவரது வீட்டில் 15.07.2022 அன்று எளிமையாகக் கொண்டாடப்பட்டது. பல்வேறு அரசியல் கட்சிப் பிரமுகர்கள் அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் இரா. நல்லகண்ணு நேரில் சென்று சால்வை அணிவித்து பூங்கொத்து, பழங்கள், இனிப்புகள் கொடுத்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலச் செயலாளர் எஸ்.கே.சிவா, மாநில தலைமைக்குழு உறுப்பினர் லி.உதயகுமார் ஆகியோர் உடன் இருந்தனர்.



மாநில மாநாட்டு நிதியாக

## ரூ.5000 வழங்கிய அனிதா செல்வராஜ்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டு நிதியாக ரூ.5 ஆயிரத்தை, திருப்பூர் தெற்கு மாவட்ட திமுக மகளிர் அணி துணை அமைப்பாளர் அனிதா செல்வராஜ் அவர்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உடுமலைப்பேட்டை தாலுகா கமிட்டி செயலாளர் வி.சௌந்திரராஜனிடம் வழங்கினார்.

## துப்புரவு பணியாளர்கள் சங்க ஏஐடியூசி கொடியேற்று விழா

ஆண்டிபட்டி பேரூராட்சி அலுவலகம் முன்பு துப்புரவு பணியாளர்கள் சங்க ஏஐடியூசி கொடியினை ஆண்டிபட்டி பேரூராட்சியின் 10 வது வார்டு கவுன்சிலர் மீனாட்சி முனீஸ்வரன் ஏற்றிவைத்தார்.

நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக்குழு உறுப்பினர் பரமேஸ்வரன், ஒன்றிய செயலாளர் பிச்சைமணி, நகர செயலாளர் முனீஸ்வரன், துப்புரவு பணியாளர்கள் சங்கத்தின் பொறுப்பாளர் பாண்டி உள்பட 100 க்கும் மேற்பட்ட துப்புரவு பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# உணவு தானியங்களின் மீதான ஜிஎஸ்டி வரியை நீக்குக!

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

பாஜக ஒன்றிய அரசு அரிசி, கோதுமை உள்ளிட்ட உணவு தானி யங்களை ஜிஎஸ்டி வரி எல்லைக்குள் சேர்த்து 5 சதவீதம் வரி விதித்துள்ளது. ஏற்கனவே பெட் ரோல், டீசல் விலைகள் தொடர்ந்து உயர்த்தப்படுவதால் அனைத்து அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலைகளும் வரலாறு காணாத வகையில் கடுமையாக உயர்த்தப்பட்டு வாழ்க்கை செலவுச் சுமையை ஏற்றியுள்ளது. இந்த நிலையில் அரிசி, கோதுமை உள்ளிட்ட உணவு தானியங்களுக்கு ஜிஎஸ்டி வரி விதிப்பது எவ்வகையிலும் ஏற்கத்தக்கதல்ல. இதன் மூலம் பாஜக ஒன்றிய அரசு உணவு உரிமையை பறித்து, உணவு பாதுகாப்புச் சட்டத்தை அர்த்தமிழக்க செய்கிறது. மேலும் உணவு தானிய வணிகத்திலும், சில்லரை வியாபாரத்திலும் ஈடுபட்டு வருவோர்களை அத்தொழிலில் இருந்து வெளியேற்றி, கார்ப்பரேட் வணிகத்தை ஊக்கப்படுத்தும் ஒன்றிய அரசின் வஞ்சகச் செயலை கண்டித்து அரிசி ஆலை உரிமையாளர்களும், வியாபாரிகளும் நடத்தி வரும் போராட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது. அரிசி, கோதுமை உள்ளிட்ட உணவுத் தானியங்கள் மீதான ஜிஎஸ்டி வரியை முற்றிலுமாக நீக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு ஒன்றிய அரசை கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார் பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

மின் கட்டணத்தை உயர்த்தினால்

# கோவையின் தொழில் நிலை கடும் பாதிப்புக்குள்ளாகும்

### டேக்ட் அறிக்கை

தமிழ்நாடு கைத்தொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர்கள் சங்க கோவை மாவட்ட தலைவர் ஜேம்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

மின் கட்டணம் உயர்த்தப்படும் என்ற தமிழக மின்சாரத்துறை அமைச்சரின் அறிவிப்பு தொழில் முனைவோர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சி தந்து உள்ளது. கடந்த 2 வருடங்களுக்கு மேல் கொரோனா பாதிப்பால் தொழில் முடக்கமும், எவ்விதமான முகாந்தரமும் இல்லாமல் தொழில் துறை சார்ந்த மூலப் பொருள்கள் பல மடங்காக உயர்ந்ததாலும் தொழில் துறை இன்று வரை முடங்கி கிடக்கிறது.

தொழில் நகரமான கோவையில் 25,000க்கும் மேற்பட்ட ஜாப் ஆடர்கள் செய்து கொடுக்கும் குறுந் தொழில்கள் சொந்த இடம் இல்லாமல் பெரும் பகுதி வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. இந்த சூழ்நிலையில் அரசுசொத்துவரி மாநகர பகுதியில் 150 % உயர்த்தியதால் இட உரிமையாளர்கள் குறுந்தொழில் முனைவோர்களிடம் வாடகை உயர்த்தி கேட்டும் அது போல் கோவை மாநகராட்சி நிர்வாகம் குறு, சிறு தொழில் நிறுவனங்கள் கட்டாயமாக தொழில் வரி கட்ட சொல்லியும் கடும் நெருக்கடிகள் கொடுத்து வரும் சூழ்நிலையில் தற்போது மின் கட்டணம் உயர்த்தப்படும் என்ற செய்தி பெரும் வேதனையாக தொழில் முனைவோர்களுக்கு உள்ளது.

கோவை போன்ற நகரங்களில் இடஉரிமையாளர்கள் ஒட்டு மொத்தமாக 100 எச்.பி. வரை மின் இணைப்பு பெற்று, அதை எங்களைப் போன்ற குறுந்தொழில் முனைவோர்களுக்கு சப்மீட்டர் மூலம் மின்சாரத்தை பகிர்ந்து அளித்து வருகின்றனர். தற்போது உள்ள மின் கட்டணமான யூனிட் ஒன்றுக்கு ரூ.6.50 வீதம், மின்சார வாரியம் வசூலித்து வரும் நிலையில், எச்.பி.க்கு 60 ரூபாய் சேர்த்தும், 5% ஜி.எஸ்.டி. உள்ளிட்டு மின்சார சேதாரம் சேர்த்தும் கணக்கிட்டு குறுந்தொழில் முனைவோர்கள் 8.00 ரூபாய் வரை ஒரு யூனிட்டுக்கு செலுத்தி வருகிறார்கள்.

இந்நிலையில் தற்போது மின்துறை கட்டணம் உயர்த்தியுள்ளதால், 10.00 ரூபாய் வரை குறுந்தொழில் முனைவோர்கள் செலுத்தும் நிலைக்கு தள்ளப்படுவார்கள். மேலும் தொழில் நகரமான கோவையில் பம்பு உற்பத்தி குஜராத் மாநிலத்துடன் போட்டிபோட முடியாமல் தவித்து வருகிறது.

நம்மைக் காட்டிலும் மார்க்கெட்டில் அவர்களின் பம்புகள் 20% குறைத்து கொடுக்கும் நிலையில், தற்போதைய மின் கட்டண உயர்வினால் நமது தொழில் நிலைமை இன்னும் கடும் பாதிப்புக்குள்ளாகும் என்பதால் அரசு உடனடியாக மின் கட்டண உயர்வை கை விட வேண்டும்.

மேலும் மாதந்தோறும் மின் கட்டணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறோம். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# இலவசமனைப் பட்டா வழங்கிடுக!

### ஆர்.எஸ்.மங்களம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம்




ஆர்.எஸ்.மங்களம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு இந் திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆர்ப்பாட்டம் கே.குருசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் வசம் ஏற்கனவே விண்ணப்பித்த வீடில்லாத ஏழை மக்களுக்கு இலவசமனைப் பட்டா வழங்க வேண்டும்.

முதியோர் பென்சன் பெற்று வரும் பயனாளிகளுக்கு எவ்வித அறிவிப்பும் இல்லாமல் பென்சன் நிறுத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர், நிர்வாகம் உடனடியாக இதை கவனத்தில் கொண்டு நிறுத்தப்பட்ட பென்சனை வழங்க உத்தரவிட வேண்டும்.

குடிநீர் விநியோகம் சீரான முறையில் மேற்கொள்ள வேண்டும் என்கிற கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இராமநாதபுரம் மாவட்ட செயலாளர் என்.எஸ்.பெருமாள், ஏஐடியூசி மாவட்ட செயலாளர் என்.கே.ராஜன், திருவாடானை தாலுகா செயலாளர் எஸ்.முருகேசன், மாவட்டக் குழு உறுப்பினர் வி.தங்கராஜ், சந்திரன் பாலம்மாள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

**1942 ஆகஸ்ட் 9 வெள்ளையனே வெளியேறு இந்திய விடுதலைப் போராட்டத்தில் தேசபக்த படை**

## பெரியார் பல்கலைக்கழக கேள்வித் தாளில்

# சாதி ரீதியான கேள்வி

### மாணவர் பெருமன்றம் கண்டனம்

சேலம் மாவட்டத்தில் இயங்கி வரும் பெரியார் பல்கலைக்கழகத்தில் முதுகலை வரலாறு மாணவர்களுக்கான பருவத் தேர்வில் சாதி ரீதியான கேள்வி இடம் பெற்றிருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது. அதிலும் பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வு இல்லை என்று கூறி, சாதி ஒழிப்பை தனது வாழ்நாள் லட்சியமாக எதிர்த்து போராடிய பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் பெயரில் இயங்கும் பல்கலைக்கழகத்தில் இதுபோன்ற கேள்வி கேட்கப்பட்டு இருப்பது பெரியாரையே அவமதிப்பதாகும்.

வலதுசாரி வகுப்புவாத சக்திகள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் கல்வி நிறுவனங்களின் புத்தகங்கள், கேள்வித்தாள்களில் சாதி, மத ரீதியான பிற்போக்குத்தனமான பாடங்கள், கேள்விகள் இடம்பெறுவது தொடர்ந்த வண்ணம் உள்ளது. அதன் தொடர்ச்சியாக, இந்த கேள்வி மாணவர்களிடையே பிரிவினையை விதைக்கும் முயற்சியாகும்.

தீண்டாமை ஒரு பாவச் செயல், தீண்டாமை ஒரு பெருங்குற்றம், தீண்டாமை ஒரு மனித தன்மையற்ற செயல் என்று பள்ளிகளில் இருந்தே மாணவர்களுக்கு தமிழ்நாட்டில் கற்பிக்கப்பட்டு வருகிறது. ஆனால், தற்போது முதுகலை மாணவர்களுக்கு சாதி எண்ணத்தை தூண்டும் விதமாக கேட்கப்பட்டு இருக்கும் கேள்வியின் மூலம், கேள்வித்தாளை தயார் செய்தவர்கள் சாதிய எண்ணத்தை மாணவர்களிடம் திணிக்க முயல்கிறார்களோ என்ற எண்ணம் எழுகிறது.

அதேசமயம், இந்த கேள்வித்தாளை தயார் செய்ததில் பெரியார் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு தொடர்பு இல்லை என்றும் வேறு கல்லூரி ஆசிரியர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கேள்வித்தாள் என்றும் நிர்வாகத் தரப்பிலிருந்து வரும் பதில் நிர்வாகத்தின் ஒட்டுமொத்த செயல்பாடுகள் மீது அதிருப்தியை ஏற்படுத்துகிறது.

இதுபோன்ற கேள்வியை வடிவமைத்தது யார் என்று விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு உயர்கல்வித்துறையையும், பல்கலைக்கழக நிர்வாகத்தையும் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் தமிழ்நாடு மாநிலக் குழு கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் தமிழ்நாடு மாநிலக் குழு சார்பில் மாநிலச் செயலாளர் சீ.தினேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## சீர்காழியில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,

# அரசு பெண்கள் கலைக் கல்லூரி அமைத்திடுக!

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சீர்காழி ஒன்றிய மாநாட்டு தீர்மானங்களை நிறைவேற்ற கோரி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் சீர்காழி புதிய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது.

சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டி பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும். கலைமாமணி சீர்காழி கோவிந்தராஜனுக்கு மண்டபம் அமைத்திட வேண்டும். சீர்காழி நகரில் புதை சாக்கடை திட்டத்தை உடனடியாக அமல்படுத்திட வேண்டும். சீர்காழி அரசு மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்திட வேண்டும். நூலகத் தந்தை எஸ். ஆர்.அரங்கநாதன் பெயரில் சீர்காழியில் நூலகம் அமைக்கும் பணியை துரிதப்படுத்திட வேண்டும். சீர்காழியில் அரசு பெண் கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசு பெண்கள் கலைக் கல்லூரி அமைத்திட வேண்டும். பூம்புகார் கலைக் கூடத்தை பராமரித்து சுற்றுலா தளத்தை மேம்படுத்திட வேண்டும். பழுதடைந்துள்ள சீர்காழி புதிய பேருந்து நிலையத்தின் ஓடுதளத்தை சரிசெய்து அனைத்து பேருந்துகளும் பஸ் நிலையத்துக்குள் சென்று வரவும் மற்றும் பேருந்து நிலையத்திற்குள் நிலவும் சுகாதார சீர்கேட்டை சரி செய்திட வேண்டும். அனைத்து ரயில்களும் சீர்காழியில் நின்று செல்ல வேண்டும் என்ன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றிய செயலாளர் வே நீதியை சோழன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் சீனிவாசன் கோரிக்கைகளை விளக்கி உரை யாற்றினார்.

வி.ச.மாவட்ட செயலாளர் பி.வீர ராஜ், ஏஐடியூசி மாவட்ட செயலாளர் கே.ராமன், ஒன்றிய துணை செயலாளர் எம்.பிரபாகரன், எஸ்.சுந்தரய்யா, கே.வரதராஜன், பி.தேவகி, பி.ஜெயக்குமார், வித்யா தேவி, சுரேஷ், வி.தங்கராசு, கே.மருதைபன், டி.கம்பதாசன், ஜி.ரமேஷ் ராஜா, எல்.ரமேஷ், ஜி.துரைசாமி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



# ஒன்றிய அரசைக் கண்டித்து நாகர்கோவிலில் ஆர்ப்பாட்டம்

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் குமரி மாவட்டக்குழு சார்பில் ஜூலை 17 அன்று ஒன்றிய அரசின் அக்னி பாத் திட்டத்தை கைவிட வலியுறுத்தியும், வீட்டு தேவைக்கான குடிநீர் தேவைக்கு ஆழ்கிணறு மற்றும் குடிநீர் தேவைகளுக்கு ஒன்றிய ஜல்சக்தி அமைச்சகத்திடம் ரூ.10000கட்டி பதிவு செய்யும் திட்டத்தை கைவிட கோரியும், வீட்டு உபயோக கேஸ் விலை உயர்வை திரும்ப பெறக்கோரியும் நாகர்கோவில் மீனாட்சிபுரம் அரசு விரைவு பேருந்து பணிமனை அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.அனில்குமார் தலைமை தாங்கினார்.மாவட்டக்குழு உறுப்பினர் ஆர்.கே. சிரிகுமார், மாவட்ட துணைச்செயலாளர் ஜி.சுரேஷ், மேசிய தாஸ், வி.அருள்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டக்குழு உறுப்பினர் எஸ்.இசக்கிமுத்து ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார். மாவட்ட பொருளாளர் பி.தாமரைசிங், அகில இந்திய முற்போக்கு பேரவையின் துணைத் தலைவர் பேராசிரியர் சுந்தரம், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாவட்ட அமைப்பாளர் செல்வராணி, ஏஐடியூசி மாவட்ட செயலாளர் எஸ்.ராஜீ, அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் சஜேஸ் ஆகியோர் கருத்துரை வழங்கினர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் குமரி மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திரபோஸ் நிறைவு செய்து பேசினார். மாவட்ட துணைச்செயலாளர் எஸ்.நாராயணசாமி நன்றி கூறினார்.

## ஏஐடியூசி ஆட்டோ தொழிலாளர் சங்க

# கொடியேற்று விழா



அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் நகரத்தில் பேருந்து நிலைய வளாகத்தில் ஏஐடியூசி ஆட்டோ ஓட்டும் தொழிலாளர்கள் சங்க கொடி ஏற்று விழாவும், ஆட்டோ ஸ்டாண்ட் சங்க போர்டு திறப்பு விழாவும் ஜூலை 15 அன்று நடைபெற்றது. ஏஐடியூசி மாநில பொதுக்குழு உறுப்பினரும், மாவட்டப் பொதுச் செயலாளருமான டி.தண்டபாணி சங்க ஏஐடியூசி கொடியை ஏற்றி வைத்தார். உடையார்பாளையம் பேரூராட்சி தலைவர் ரஞ்சித்குமார், ஏஐடியூசி சங்க போர்டை திறந்து வைத்தார். அனைவருக்கும் உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப்பட்டது. ஆட்டோ ஸ்டாண்ட் கிளை தலைவர் டி.கோமல்ராஜ் அனைவருக்கும் இனிப்பு வழங்கினார். துணைத்தலைவர் டி. ராஜாராஜன், செயலாளர் கே. முருகேசன், ஆர். மோகன், ஆர். ரஞ்சித்குமார், எஸ். தங்கையன், எம்.முகிலன், எஸ்.பிச்சைபிள்ளை, சு. பீட்டர், ஆர். கதிரவன், ஆர். செல்வகுமார், டி. ராஜேந்திரன், மற்றும் மாணிக்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

# இடைக்கமிட்டி மாநாடுகள்



**செல்லம்பட்டி:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின், மதுரை புறநகர் மாவட்டம் செல்லம்பட்டி ஒன்றிய 25 வது மாநாடு காசிமாயன் தலைமையில் நடைபெற்றது. மேலும் மூத்த தோழர் சின்னாதேவன் கொடியேற்றி வைத்தார். புறநகர் மாவட்டச் செயலாளர் பா.காளிதாஸ் துவக்கவுரையாற்றினார். ஒன்றிய செயலாளராக கல்பாணி, துணைச் செயலாளராக ஜெய்பாண்டி, பொருளாளராக ஜெயக்குமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். தீர்மானங்களை ஜெயக்குமார் வாசித்தார். இதில், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் மூர்த்தி, ஜெயக்கொடி, சந்தனம், மருத்துவ ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் வெங்கடாசலம் மற்றும் உறுப்பினர்கள் பலர் இதில் கலந்து கொண்டனர்.

தும்மக்குண்டு புதுப்பட்டியில் இயங்கி வந்த தவிடு எண்ணை ஆலையை அரசு கையகப்படுத்தி புதிய வேலை வாய்ப்பை உருவாக்கிட வேண்டும். விக்ரமங்கலம் பகுதியில் பூ செண்டு தொழிற்சாலையை உருவாக்கிட வேண்டும். திருமங்கலம் வைகை பிரதான கால்வாய் எண் 29 நாட்டாமங்கலம் முதல் முண்டுவேலம்பட்டி, நத்தப்பட்டி வரை பழுதடைந்துள்ள கால்வாயை சரி செய்திட வேண்டும்.

கருமாத்தூர் ஊராட்சி வடக்கம்பட்டி, இந்திராநகர், மாயகுரும்பன்பட்டி சாலையை சரி செய்திட வேண்டும். என்.அய்யம்பட்டி ரேஷன் கடை முறையாக இயங்கி வருவதில்லை அதை முறையாக நடத்திடுக, சக்கரைப்பட்டி பசும்பொன் நகருக்கு பகுதி நேர ரேஷன் கடை புதிதாக உருவாக்கிட வேண்டும்.

வேம்பனூத்து ஊராட்சி கட்டத்தேவன் பட்டி முதல் பேயம்பட்டி காரிக்குட்டிபட்டி வரை புதிய சாலை அமைத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



**பேரையூர் தாலுகா மாநாடு:** மதுரை புறநகர் மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பேரையூர் தாலுகா 25 வது மாநாடு எழுமலையில் நடைபெற்றது. இம்மாநாட்டின் கொடியினை மூத்த தோழர் கிருஷ்ணன் ஏற்றினார். புறநகர் மாவட்டச் செயலாளர் பா.காளிதாஸ் மாநாட்டினை துவக்கி வைத்தார். செயலாளராக மகாராஜன் தேர்வு செய்யப்பட்டார். புதிய நிர்வாகிகளாக 19 பேர் கொண்ட தாலுகா குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் மாவட்ட குழு உறுப்பினர் ஜீவா தீர்மானங்களை வாசித்தார். இதனைத் தொடர்ந்து விவசாய சங்க மாவட்டச் செயலாளர் ஜி.சந்தனம் வாழ்த்துரை வழங்கினார்.

# தோழர் வீ.ராஜமோகன் மருமகன் க.சீனிவாசன் மறைவு



ஐ.சி.எப். யுனைடெட் ஒர்க்கர்ஸ் யூனியன் ஏஐடியூசி–யின் முன்னாள் துணைத் தலைவரும், ஜனசக்தி முன்னாள் பொறுப்பாசிரியருமான வீ.ராஜமோகன் அவர்களின் மருமகன் க.சீனிவாசன் (வயது 49) அவர்கள் கடந்த ஜூலை 16 அன்று மறைவுற்றார்.

அவரின் மறைவால் பிரிந்து வாடும் குடும்பத்திற்கு ஐ.சி.எப். யுனைடெட் ஒர்க்கர்ஸ் யூனியன் ஏஐடியூசி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.


**2022 ஆகஸ்டு 9 இந்தியாவைக் காக்கும் போராட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செம்படை!**

# சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்

## ஆதாரங்களும் விளக்கமும்

வரலாறு என்பது முன்பு நேர்ந்த சம்பவங்களின் பதிவுகள் மட்டுமல்ல. மாறாக, ஆய்வுகளின் விளைவாகப் பெறப்பட்டிருக்கும் தகவல்களை உள்ளடக்கியதே வரலாறாகும் என்ற வரலாற்று அறிஞர் யஹரடோரஸ் கூற்றுக்கிணங்க. இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூலவரான மா.சிங்காரவேலர் பற்றி இந்நூலில் ஆழ்ந்து விளக்கி இருக்கிறார் நூலாசிரியர்.

சிங்காரவேலர் 1860 ஆம் ஆண்டு பிப்ரவரி 18ம் தேதி சென்னை மெரினா கடற்கரையில் உள்ள நடுக்குப்பம் என்ற பகுதியில் மீனவர் குடும்பத்தில் பிறந்தார். சிங்காரவேலரின் குடும்பத்திற்கு பெரிய படகுகள் மூலம் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா,பர்மா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்யும் வணிக தொழில் தான் பிரதான தொழில்.




மகாபோதி சங்கத்தை தொடங்கி ஏழைக் குழந்தைகளுக்கு உணவளிப்பது, குழந்தைகளுக்கு பாடப்புத்தகங்கள் கொடுப்பது, மூடநம்பிக்கைகளை போக்கி மக்களிடையே ஜாதி மத பேதங்கள் போக்குவது, சமத்துவத்தை உருவாக்குவது போன்ற சமூகப் பணிகளை மேற்கொண்டுள்ளார் சிங்காரவேலர். இந்தக் கூட்டங்களில் டார்வினின் பரிணாமக் கொள்கைகளை சிங்காரவேலர் விளக்கியுள்ளார்.

1925 ஆம் ஆண்டு முதன்முதலில் கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்ட கான்பூர் மாநாட்டுத் தலைமை உரையில் சிங்காரவேலர் குறிப்பிடுகிறார் " வரலாறு பிறந்ததிலிருந்து கம்யூனிசமும் இருந்து வருகிறது. அதை குறிப்பிட்ட வடிவில் புத்தர் போதித்தார். அவரது சீடர்கள் அதை கடைப்பிடித்தனர். இயேசுநாதர் அந்த காலத்தில் கம்யூனிஸ்ட் தான். பிளாட்டோ, மூர், மாரிஸ் போன்ற அனைவருமே மானுட சமூகத்தின் விடுதலைக்காக உழைத்த கம்யூனிஸ்டுகள். அதில் காரல் மார்க்ஸ் விஞ்ஞான ரீதியில் கம்யூனிசத்தை வடிவமைத்துக் கொடுத்தார்" என குறிப்பிடுகிறார். 1902ஆம் ஆண்டில் சிங்காரவேலர் லண்டன் சென்றிருக்கிறார்.

அந்த சமயத்தில் லெனின் லண்டனில் தலைமறைவாக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே இந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட்டாக நாம் சிங்காரவேலரை கொண்டாட வேண்டும் என இந் நூலில் பேராசிரியர் முனைவர் செ.பெரியாண்டி அவர்கள் வாதிடுகிறார். ஆய்வுக்குரிய இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்.

**– சமரன்**

ஆசிரியர் : முனைவர் செ. பெரியாண்டி
வெளியீடு : பிரெஞ்சு பதிப்பகம், 7/தனலட்சுமி கார்டன், முதல் தெரு சோலை நகர், முத்தியால்பேட்டை, புதுச்சேரி–605003
பக்கங்கள் : 112 விலை: ரூ.120

# நூல் நயம்

## காற்றின் கைத்தட்டல்கள்

அழகியல், கருத்தியல், வாழ்வியல், உறவியல், உணர்வியல், உளவியல், மொழியியல் ஆகியவற்றினை உரக்கச் சொல்லும் ஓசை சத்தத்துடன் கூடிய ஒத்திசைவு பண்பு சொற்களால் சேர்க்கப்பட்ட எழுத்துக் கலவைகளால் ஆனதே நல்ல கவிதைகளாக காலந்தோறும் சுகமாகப் பிரசவிக்கின்றன. அப்படிப்பட்ட கவிதைகளை காற்றின் கைத்தட்டல்கள் மூலம் ஞா.சந்திரன் படைத்திருக்கிறார்.

"ஆழம் குறைவோ அதிகமோ, அடிக்க வேண்டியது நீச்சல் மட்டுமே. சோதனைகள் ஒன்றோ, பலவோ செய்ய வேண்டியது முயற்சி மட்டுமே" தண்ணீர் எவ்வளவு ஆழமாக இருந்தாலும் நீச்சல் தெரிந்தவனுக்கு கால் முட்டி அளவு தான். நாம் எவ்வளவு முயற்சி செய்கிறோமோ அந்த அளவுக்கு நிச்சயமாக பலன் கிடைக்கும். முயற்சி செய்வதில் தளர்ச்சி அடையக் கூடாது என குறிப்பிடுகிறார்.

"காயங்களோடு சிரிப்பது அவ்வளவு எளிதல்ல, அப்படி சிரிக்க பழகிக் கொண்டால் எந்த காயமும் அவ்வளவு பெரிதல்ல" மனிதர்கள் உலகத்தில் காயத்தோடு தான் வாழ வேண்டி இருக்கிறது. அது உடல் காயமாகவும் இருக்கலாம் அல்லது மனக்காயங்களாகவும் இருக்கலாம். இப்படி காயத்தோடு இருப்பவர்கள் எவ்வாறு சிரிக்க முடியும்? இப்படி சிரிக்க பழகிக் கொண்டால், காயங்கள் தான் நம்மை பார்த்து காயப்பட வேண்டியிருக்கும் என தன்நம்பிக்கை ஊட்டுகிறார்.




"நீ இழந்ததை நினைத்து வருந்தினால், இருப்பதை இழந்து விடுவாய் !நீ இருப்பதை நினைத்து மகிழ்ந்தால், இழந்ததை அடைந்து விடுவாய்" என மகிழ்ச்சிக்கு வழி சொல்லுகிறார். முடியாது என்பதை பிறகு சிந்தியுங்கள், எப்படி முடிப்பது என்பதை முதலில் சிந்தியுங்கள் வெற்றி நிச்சயம் என வெற்றிக்கு வழி காட்டுகிறார். இழந்ததை அடைவதற்கு எப்படி முடிப்பது என்பது தான் முடிவாக இருக்குமே தவிர, இழந்ததை எண்ணி வருந்துவதால் பயன் இல்லை என்பதை நமக்கு உணர்த்துகிறார்.

"உண்மையான அன்பு தோற்பதில்லை, உண்மையானவர்களை தேர்ந்தெடுப்பதில் தான் தோற்று விடுகிறோம்" உண்மையானவர்களை, நம்மை நேசிப்பவர்களை, நமது நலம் விரும்பிகளை நாம் தேர்ந்தெடுக்காமல், துரோகம் செய்பவர்களை, காட்டிக் கொடுப்பவர்களை தேர்ந்தெடுத்து விட்டு அவர்கள் உண்மையாக இல்லை என்று நாம் அலட்டிக் கொள்கிறோம். அன்பே பொய்யாக போய் விடுவதாகவும் நாம் மனக்குறை கொள்கிறோம். நாம் உண்மையான நண்பர்களை தேர்ந்தெடுக்கிற போது அன்பு ஒருபோதும் பொய்யாகிப் போய் விடுவது இல்லை. **– இன்சுவை பாரதி**

நூலாசிரியர் : ஞா.சந்திரன்
வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ், 16, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 14
பக்கங்கள் : 136 விலை: ரூ.120

வாரம் தோறும் வெளிவரும்
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேடடை,
சென்னை - 600014

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

சுழலும் உலகம்

# நெதர்லாந்து






# நெதர்லாந்து விவசாயிகள் போராட்டத்தில் போலீஸ் துப்பாக்கிச் சூடு

நெதர்லாந்து நாட்டு விவசாயிகள் சாலை மறியல், அரசாங்க கட்டிடங்கள் முற்றுகை என்று தீவிர போராட்டத்தில் இறங்கியுள்ளனர். நெதர்லாந்து – ஜெர்மனி இடையிலான நெடுஞ்சாலையையும் விவசாயிகள் மறித்துள்ளனர்.

2030ஆம் ஆண்டுக்குள் அமோனியா மற்றும் நைட்ரஜன் ஆக்சைடு வாயுக்களின் வெறியேற்றத்தை 50 சதவிகிதமாக குறைத்திட வேண்டும் என்று அந்நாட்டு அரசாங்கம் இலக்கு நிர்ணயித்து உள்ளது. விலங்குகள் பராமரிப்பு, உரங்கள் பயன்பாடு ஆகியவை மீது தடை உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகள் விவசாயிகள் மீது விதிக்கப்பட்டுள்ளன.

விமான போக்குவரத்து, கட்டுமானத் தொழில் நடவடிக்கைகள் மற்றும் தொழில்துறைதான் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய வாயுக்களை அதிக அளவில் வெளியேற்றுகின்றன என்று கூறும் விவசாயிகள், இவை எதுவும் நிறுத்தப்படவில்லை என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

"உழவர்கள் இல்லை என்றால் உணவு இல்லை" என்று இந்தியாவில் விவசாயிகள் போராட்டத்தின் போது எழுப்பப்பட்ட முழக்கத்தைப் போல "நமது விவசாயிகள், நமது வருங்காலம்" என்ற புதிய முழக்கத்தை நெதர்லாந்து விவசாயிகள் முன்வைத்து போராடுகிறார்கள்.

இந்தியாவில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டம், உலகம் முழுவதிலும் உள்ள விவசாயிகள் மீது மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. டிராக்டர் வண்டிகளின் அணிவகுப்பைக் கொண்டு அமைதியான போராட்டத்தின் மூலமாக சாதகமான முடிவுகளை வருங்காலங்களில் வென்றெடுக்க முடியும் என்ற நம்பிக்கையை விதைத்துள்ளது.

நெதர்லாந்து நாட்டின் வடக்குப் பகுதியில் டிராக்டர் வண்டிகளில் அணிவகுத்து வந்த விவசாயிகள் மீது போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். விவசாயிகள் உண்டாக்கிய அச்சுறுத்தல் காரணமாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக போலீசார் வழக்கமான கதையை புனைந்துள்ளனர். மேலும் டிராக்டர் வண்டிகளை நோக்கி மட்டும்தான் துப்பாக்கிச் சூடு நடத்தினோம்; விவசாயிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று போலீஸ் தரப்பு கூறியுள்ளது.

ஐரோப்பிய நாடுகளை முடக்கிப் போட்டுள்ள

# எரிசக்தி நெருக்கடி மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம்

ஐரோப்பிய நாடுகளில் அதிகரித்து வரும் நெருக்கடிகள் அந்நாட்டு முதலாளித்துவ ஆட்சியாளர்களைக் கலக்கமுறச் செய்துள்ளன. அந்நாடுகளின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்து வருவதை முதலாளித்துவ ஆட்சியாளர்கள் ஒப்புக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தற்போதைய சூழலில், பெட்ரோல் விலையைக் குறைப்பதற்கான வாய்ப்பு இல்லை என்று அமெரிக்க அதிபர் ஜோ ஃ பிடன் வெளிப்படையாகக் கருத்து தெரிவித் திருப்பது அமெரிக்காவில் நிலவி வரும் நெருக்கடிகளைத் தெள்ளத் தெளிவாக அம்பலப்படுத்துகிறது.

ரஷ்யாவிலிருந்து எரிபொருள் இறக்குமதி செய்வதை ஐரோப்பிய நாடுகள் நிறுத்தியுள்ளன. அதனால், எரிபொருள் தேவையில் ஏற்பட்டுள்ள இடைவெளியை நிரம்பும் வண்ணம் அமெரிக்க எரிவாயு ஏற்றுமதியாளர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொண்டுள்ளனர். எரிசக்தி தட்டுப்பாடு நெருக்கடியில், ஐரோப்பிய நாடுகள் சிக்கிக் கொண்டிருக்கும் இந்த நிலையில் சூழலை லாபகரமாகப் பயன்படுத்தி ஏற்றுமதிக்கான தேவையை மேலும் அதிகப்படுத்துவதற்கு ஏற்றவாறு, அமெரிக்க இயற்கை எரிவாயு உற்பத்தியாளர்கள் பல்வேறு திட்டங்கள் மற்றும் சலுகைகளை அறிவித்து வருகிறார்கள். எடுத்துக்காட்டாகச் சொல்வதென்றால் அமெரிக்காவில் மிகப்பெரிய எரியாவு ஏற்றுமதி நிறுவனமான செனியர் (CHENIERE) வரும் 2025ஆம் ஆண்டின் இறுதிக்குள் அதன் கொள்ளளவை 20 சதம் அதிகரித்துக் கொள்வதற்கான திட்டத்தை முன்னெடுக்க உள்ளதாக முடிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

வரலாற்றில் முதல் முறையாக ஐரோப்பாவுக்கான எரிவாயு வழங்கலில் அமெரிக்கா ரஷ்யாவைக் கடந்து முன்னேறியுள்ளது. அமெரிக்கா விற்பனை செய்து வரும் திரவநிலை இயற்கை எரிவாயுவின் விலை ரஷ்யாவிலிருந்து குழாய் மூலம் பெறும் எரிவாயுவின் விலையைக் காட்டிலும் அதிகமாகும். ஆனாலும், வேறு வழியின்றி அமெரிக்க நிறுவனங்கள் விற்கும் எரிவாயுவை ஐரோப்பிய நாடுகள் அதிக விலைக்கு வாங்கி வருகின்றன.

ஜூலை 11 முதல் 21 வரையிலான நாட்களில்



வருடாந்திர பராமரிப்பு பணிகள் காரணமாக (NORD STREAM) நார்டு ஸ்டிரிம் வழியாக நடைபெற்று வரும் ரஷ்ய எரிவாயு வழங்கலும் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், எரிவாயு தட்டுப்பாடு மேலும் தீவிரமடைந்துள்ளது. இந்தப் பிரச்சினை காரணமாக ஜெர்மனியின் தொழிற்துறை முற்றிலுமாக நிலைகுலைந்துள்ளது. ரசாயனம், கண்ணாடி மற்றும் அலுமினியம் உற்பத்தி உள்ளிட்ட பல முக்கியத் தொழில்கள் தேக்கமடைந்து இருப்பதால், வாகன உற்பத்தித்துறை பெரும் பாதிப்பிற்கு உள்ளாகி இருப்பதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன.


உக்ரைன் ராணுவ நெருக்கடியைப் பயன்படுத்தி ஐரோப்பிய நாடுகளை அமெரிக்கா பலியிட்டு வருகிறது. ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையிலான பேச்சுவார்த்தையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக அமெரிக்காவின் உள்துறை செயலாளர் ஆண்டனி பிளிங்கென் ஐரோப்பிய நாடுகளுக்குப் பலமுறை பயணம் மேற்கொண்டது நினைவுகூரத்தக்கது.

அதன் பயனாகத் தற்போது எரிவாயு வர்த்தகத்தின் மூலமாக அமெரிக்க எரிசக்தி நிறுவனங்கள் கொள்ளை லாபம் ஈட்டி வருகின்றன. அமெரிக்க சூழ்ச்சிகள் ஐரோப்பிய மக்களின் சிந்தனையை நீண்ட காலம் சிறைபடுத்திட முடியாது. மக்கள் எழுச்சி சூழ்ச்சிகளைத் தகர்த்தெறியும் என்பது வரலாறு நமக்கு உணர்த்தும் பாடம்.

# இந்திய வரலாறும் - அமித்ஷா பொய்களும்...



- மு.வீரபாண்டியன்



**உலகின் தலை சிறந்த கவிஞர்களில் ஒருவர் ஷெல்லி. அந்த மக்கள் கவிஞன், "அராஜகத்தின் முகமூடி" எனும் மாபெரும் கவிதையைப் படைத்தான். அதில் அவன் பின்வருமாறு கூறியிருப்பான்.**

ஆடைகளை நெய்யுங்கள்
அதனை சோம்பேறிகள்
அணிய விடாதீர்கள்...
உண்மைகளை விதையுங்கள்...
அதனை பொய்யர்கள் அறுக்காமல் பாருங்கள்...

தோழர் பிடல் காஸ்ட்ரோவுக்கு பிடித்தமான வரிகள் இது. அராஜகத்தின் முகமூடி. இதன் பொருள் நமது உள்துறை அமைச்சருக்கு பொருந்தும் அல்லவா!?

எழுதப்பட்ட இந்திய வரலாற்று உண்மைகளை அவர் மறுக்கிறார்.

நாடு அதனை எதிர்க்காவிடில், உண்மைகளைஅறுத்து விடுவார்கள் போல் தெரிகிறது.

ஆர்.எஸ்.எஸ்.சும், அமித்ஷா போன்றவர்களும் கூறுவதென்ன?

இந்திய வரலாறு முகலாயர்களால் நிரப்பப்பட்டுள்ளது.

இதுகாறும் எழுதப்பட்ட இந்திய வரலாறு இந்துக்களை புறக்கணித்து விட்டது.

ஆங்கிலேயர்களால் எழுதப்பட்ட வரலாறு இந்திய வரலாறு ஆகாது.

இந்திய வரலாற்று ஆசிரியர்கள் யாவரும் இடது சிந்தனை கொண்டவர்கள்; இந்துமத மறுப்பாளர்கள்.

ஆக இந்து சிந்தனை கொண்ட இந்தியர்களால் புதிய இந்திய வரலாறு எழுதப்பட வேண்டும் என்கிறது ஆர்.எஸ்.எஸ்.

முதலில் எந்த ஒரு தேசத்தின் வரலாறும் வெறும் கற்பனைகளாலோ, வெறும் கருத்து நிலையிலிருந்தோ எழுதிவிட முடியாது. எழுதினால் அது வரலாறு ஆகாது.

மார்க்ஸ் கூற்றுப்படி வரலாற்றுப் பொருள் முதல்வாத கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டும்; எழுத வேண்டும்.

**"இயக்கவியல் விதிகளை" வரலாற்றில் பொருத்திப் பார்க்கும் பொருள்முதல்வாத கண்ணோட்டமே சமூக அறிவியலையும், உண்மைகளையும் தன்னகத்தே கொண்டிருக்கும். அந்த வகையில் உண்மையில் வரலாறு என்பதுதான் என்ன? நடந்த வரலாறுகள் யாவும் உரிமைப்போர்களின் தொகுப்பே!**

"ஏடறிந்த வரலாறு யாவும் வர்க்கப் போரின் வரலாறுதான்" அப்படி எனில் மொழிக்கு என்ன இடம்? கலைக்கும், கலாச்சாரத்திற்கும், மதங்கள், மன்னர்கள், படையெடுப்புகள் என அதில் இடம் இல்லையா?

இவை அனைத்திற்கும் ஒரே பதில், இவை அனைத்தையும் தன் பக்கங்களில் நிரப்பிப் கொள்வதுதான் வரலாறு. இவை இல்லையெனில் வரலாறு சோர்வை தரும் என்பார் வரலாற்றாசிரியர் ரொமிலா தாப்பர்.

இந்திய வரலாறு என்பது திகைப்பூட்டும் மகத்தான பக்கங்களைக் கொண்டது. சில பக்கங்களுக்குள் அதனை அடக்க இயலாது. கிரேக்க, சீன, பாரசீக வரலாற்றுக்கு சற்றும் குறையாத மாபெரும் சித்திரம் அது.

1. பண்டைய இந்தியா, 2. இடைக் கால இந்தியா, 3. நவீன இந்தியா

**பண்டைய இந்தியா :** சிந்து சமவெளி, கங்கை சமவெளி எனும் சமவெளி பரப்பாகும். இனக்குழுக்கள், பிராய் கூய், ஆஸ்ட்டோ, முண்டா மொழி பேசிய இனங்கள், தொன்மைமிகு நாகர்கள், இனக்கலப்பு எனும் பக்கங்கள் இதுதான் நமது வரலாற்று ஆசிரியர்கள் அடங்கிய ஆய்வாளர்களும், டி.டி.கோசாம்பி உள்ளிட்ட வரலாற்று ஆசிரியர்களும் குறிப்பிடுகிறார்கள்.

இந்து மதம் கி.பி. முதலாம் நூற்றாண்டு முற்பகுதியில் இல்லை. இச்சொல்லின் புழக்கம் எட்டாம் நூற்றாண்டில் அரேபியர்கள் துவக்கி வைத்தது.

புத்த சங்கம், சமணம், வேத பார்ப்பனியம், வைதீகம், வைணவம், சைவப் பிரிவு, இஸ்லாம், கிறிஸ்தவம், சாக்த தாந்திரிய மத பிரிவு என யாவற்றையும் குறித்த நேர்மையான, உண்மையான பதிவுகள் இந்திய வரலாற்றுப் பக்கங்களில் உள்ளது.

இந்தியா முகலாயர்களையும் நிரப்பிக் கொண்டது; அலெஸ்சான்டர் தொடங்கி பிரிட்டிஷ்காரர்கள் வரை நிரப்பிக் கொண்டது. நிறைவில் இந்தியா மட்டுமே நிரப்பி நிற்கிறது. இந்த பன்முக வரலாறுதான் இந்தியா. இதில் பொய் ஏதுமில்லை.

**இடைக்கால இந்தியா:** வணிக எழுச்சி, நகர தோற்றம், பிரதேச அரசுகள் என தோற்றம் கொண்ட இந்திய மொழிகளும், கைத்திறன் பொருட்கள் கடல் தாண்டின. உலக பண்பாடுகளும், கலாச்சாரங்களும், உற்பத்தி பொருட்களும் நமது கடற் தளங்கள் வந்து சேர்ந்தன. இந்தப் பகுதிகளில் எந்த ஒரு மத எதிர்ப்புக்கும் இடமில்லை. இதில் இந்து மத எதிர்ப்புக்கு எங்கே இடம்? ஆர்.எஸ். எஸ். பொய்களுக்கு அளவேதுமில்லையா?

**நவீன இந்தியா :** பதினெட்டாம் நூற்றாண்டில் மையப் பகுதியிலேயே உருப்பெற்று விட்டது.

மொழி, கலை, இலக்கியம், சித்திரம், வீடுகள், சாலைகள் சிறப்புற்றிருந்தன. எனினும் ஆங்கிலேயர்களின் வருகையால் ஆங்கில மொழி, ரயில் பாதைகள், உற்பத்தி பொருட்கள் என இந்திய நவீன காலத்தை உந்தித் தள்ளின.

நவீன இந்தியாவில் விடுதலைப் போர் கால பக்கங்கள்தான் இந்தியாவின் உண்மையான, உணர்வுபூர்வமான தேசியத்தைக் கட்டமைத்தது. பன்முக உணர்வுகளையும், விடுதலை உணர்வு களையும் தோற்றுவித்தது.

நவீன இந்திய வரலாற்றில், குறிப்பாக விடுதலைப் போர் வரலாற்றில் நிரப்ப வேண்டிய பக்கங்கள் உண்டு. குறிப்பாக இந்திய விடுதலைப் போரில்.

அகிம்சை போர் முறைக்கு தரப்பட்ட முக்கியத்துவம், ஆயுதப் போர் முறைக்கு அளிக்கப்படவில்லை. ஆயுதப் போராட்டங்கள், இயக்கங்களும் இன்னமும் வன்முறை இயக்கங்களாகவே பார்க்கப்படுகிறது. இதற்கு வரலாற்று வழி மறுபதிவு தேவைப் படுகிறது.

கதார் இயக்கம், நவ ஜவான் இயக்கம், இந்துஸ்தான் ராணுவ சோசலிஸ்ட் குடியரசு, சுபாஷ் சந்திரபோஸ் ராணுவம், கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை இந்திய விடுதலைப்போரில் ஆயுதம் தரித்தவை; மாபெரும் தியாகங்கள் புரிந்தவை. பெரும் காவியங்கள் இவை. இது குறித்த மிக நேர்மையான பதிவுகள் வரலாற்றின் தேவை என்போர்தான் நமது வரலாற்று ஆசிரியர்கள்.

அந்தமான் சிறை துவங்கி, இந்திய சிறைகள் அனைத்திலும் பெரும் துயர் தாங்கியவர்கள் புரட்சியாளர்கள். இவர்களுக்கு இந்திய வரலாற்றில் மிக மங்கலான பக்கங்களே ஒதுக் கப்பட்டுள்ளன.

இது பற்றி ஏதாவது கருத்துக் கூற முடியுமா? உள்துறை அமைச்சர் அமித் ஷா வால்!

இந்து மதம் மட்டுமே இந்தியா எனும் ஒரு வரலாற்றை எழுத முடியாது அல்லவா!

பௌத்தம்தான் இந்தியாவின் கலாச்சாரத்தை, உலகிற்கு கொண்டு சேர்த்தது என்பது வரலாற்று உண்மை.

சீனா, ஜப்பான், பர்மா, திபெத், கம்பூச்சியா, மியான்மர், நேபாளம், லாவோஸ், இலங்கை என கண்முன்னால் இதற்கு உதாரணம் உண்டு.

இல்லை இல்லை இந்து மதம் தான் என்றால், சான்று கூறுங்கள் ஆர்.எஸ்.எஸ். நண்பர்களே! வரலாறு பொய் அல்ல! – உண்மை!!

இந்து மத உணர்வு கொண்ட ஒருவரால் இந்திய வரலாறு எழுதப்பட்டாலும், அவர் உண்மைதானே எழுதவேண்டும். உண்மையின் அருகில் நிற்க அவர்களால் முடியுமா? இயலுமா?

---

டி.பி.ஜெயின் அரசு உதவி பெறும் கல்லூரியை

## தனியார் கல்லூரியாக மாற்றாதே





சென்னை துரைப்பாக்கத்தில் இயங்கி வரும் டி.பி.ஜெயின் கல்லூரியை தனியார் கல்லூரியாக மாற்ற முயற்சிக்கும் கல்லூரி நிர்வாகத்தை கண்டித்தும், கல்லூரியை அரசே ஏற்று மாணவர் சேர்க்கையை உடனடியாக தொடங்க வலியுறுத்தியும் அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் தலைமையில் ஜூலை 14 அன்று சென்னை கந்தன்சாவடி பகுதியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பேராசிரியர் சிவக்குமார், ஏ.யூ.டி பொதுச் செயலாளர் பாலமுருகன், பொது பள்ளிக்கான மாநில மேடை பொதுச்செயலாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு, டி.யு.சி.எஸ்.ஏ தலைவர் கதிரவன், ஏ.யூ.டி முன்னாள் தலைவர் சாந்தி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாநில செயலாளர் க.பாரதி, திராவிடர் மாணவர் அணி மாநில தலைவர் பிரின்ஸ் என்னாரசு பெரியார், மதிமுக மாணவரணி மாநில செயலாளர் பால சசிகுமார், அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாநில தலைவர் த.கு.வெங்கடேஷ், எஸ்.எம்.ஐ. மாநில துணைச் செயலாளர் அப்துல் அஜீஸ், எஸ்.எப்.ஐ மாவட்ட தலைவர் ஆனந்த், ஏ. ஐ. டி.எஸ்.ஓ மாநில செயலாளர் சுகுபாலா, ஆர்.எஸ். ஒய்.எப். மாநில செயலாளர் அன்பு, ஏ.டி.எஸ்.ஏ மாவட்டத் தலைவர் விக்கி கண்ணன், அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாவட்டத் தலைவர் அன்பு உள்ளிட்டோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர். இறுதியாக அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாவட்டத் துணைச் செயலாளர் மணிகண்டன் நன்றி கூறினார்.



JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 23.07.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57



# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

# தமிழ்நாடு 25 ஆவது மாநில மாநாடு

2022 • ஆகஸ்ட்

**6 | 7 | 8 | 9**

**தோழர் தா.பாண்டியன் நகர்**
வித்யா கார்த்திக் திருமண மண்டபம்,
தாராபுரம் சாலை, திருப்பூர்

தோழர் டாக்டர். **வே.துரைமாணிக்கம்**
தோழர் **பி.சேதுராமன்**
**நினைவு அரங்கம்**

தோழர் **ஆர்.ஏ.கோவிந்தராஜன்**
தோழர் **ஆர்.சுசிலா**
தோழர் **எஸ்.அழகுமுத்துபாண்டியன்**
தோழர் **வீ.ராஜ்மோகன்**
**நினைவு நுழைவு வாயில்**

## 06-08-2022 சனிக்கிழமை

**காலை 8.00 மணி**
பிரதிநிதிகள் பதிவு

**காலை 9.00 மணி**
24ஆவது மாநாடு நடைபெற்ற, மன்னார்குடியிலிருந்து எடுத்து வரப்படும் செங்கொடி - வரவேற்பு - பெறுதல்

**காலை 9.10 மணி**
தியாகச் சுடர்கள் பெறுதல்

**காலை 9.30 மணி**
மாநாட்டு கொடி ஏற்றுதல்
தோழர் **இரா.நல்லகண்ணு** மூத்த தலைவர்

**காலை 9.45 மணி**
தியாகச் சுடர் ஏற்றுதல்
தோழர் **ஜி.காளியப்பன்**
மாநில கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர்

**காலை 10.00 மணி**
பிரதிநிதிகள் மாநாடு
தலைமைக்குழு தேர்வு
அஞ்சலி தீர்மானம்
வரவேற்புரை

**காலை 10.30 மணி**
தொடக்கவுரை
தோழர் **டி.ராஜா** முன் எம்.பி,
பொதுச்செயலாளர்

**காலை 11.00 மணி**
அரசியல் அமைப்பு நிலை,
வேலை அறிக்கைகள் அறிமுகம்

**மதியம் 12.00 மணி**
அரசியல் விளக்கவுரை
தோழர் **அமர்ஜீத் கவுர்**
தோழர் டாக்டர் **கே.நாராயணா**
தோழர் **பினாய் விஸ்வம்** எம்.பி
தோழர் **ஆனி ராஜா**

**மதியம் 1.30 மணி**
உணவு இடைவேளை

**மாலை 4.00 மணி**
சமூக நல்லிணக்கப் பாதுகாப்பு
மாநில உரிமைகள் மீட்பு
எழுச்சி மாநாடு

## 07-08-2022 ஞாயிற்றுக்கிழமை

**காலை 9.30 மணி**
அறிக்கைகள் மீது - விவாதம்

**மதியம் 1.30 மணி**
உணவு இடைவேளை

**மதியம் 3.30 மணி**
அறிக்கைகள் மீது விவாதம் தொடர்ச்சி

**மாலை 5.00 மணி**
கருத்தரங்கம்

## 08-08-2022 திங்கள்கிழமை

**காலை 9.30 மணி**
அறிக்கைகள் மீதான தொகுப்புரை

**காலை 11.00 மணி**
கணக்கு தணிக்கைக் குழு அறிக்கை

**மதியம் 12.00 மணி**
கட்டுப்பாட்டுக் குழு அறிக்கை

**மதியம் 12.30 மணி**
மாநிலக்குழு தேர்வு
கட்டுப்பாட்டுக்குழு தேர்வு

**மதியம் 1.30 மணி**
உணவு இடைவேளை

**மதியம் 3.30 மணி**
- புதிய மாநிலக்குழு கூட்டம்
- 24ஆவது அகில இந்திய மாநாட்டிற்கான பிரதிநிதிகள் தேர்வு
- தகுதி ஆய்வுக்குழு அறிக்கை
- மாநாடு நிறைவுப் பேருரை
- தீர்மானங்கள் நிறைவேற்றுதல்

**நன்றியுரை**
சர்வதேச கீதம் - மாநாடு நிறைவு



## சமூக நல்லிணக்கப் பாதுகாப்பு மாநில உரிமைகள் மீட்பு

# எழுச்சி மாநாடு

06-08-2022 • சனிக்கிழமை • மாலை 4 மணி
வித்யா கார்த்திக் திருமண மண்டப வளாகம், தாராபுரம் சாலை, திருப்பூர்

**தலைமை**
தோழர். **இரா.நல்லகண்ணு**

**வரவேற்புரை**
தோழர். **கே.சுப்பராயன்** எம்.பி

**தொடக்கவுரை**
தோழர். **டி.ராஜா** முன் எம்.பி
பொதுச்செயலாளர், சி.பி.ஐ

**நிறைவுப் பேருரை**
மாண்புமிகு **மு.க.ஸ்டாலின்**
தலைவர், திராவிட முன்னேற்றக் கழகம்
முதலமைச்சர், தமிழ்நாடு அரசு

**சிறப்புரையாற்றுவோர்**

திரு. **கே.எஸ்.அழகிரி**
தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

திரு. **வைகோ** எம்.பி
பொதுச்செயலாளர், மறுமலர்ச்சி தி.மு.க

தோழர். **தொல்.திருமாவளவன்** எம்.பி
தலைவர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

திரு. **ஈ.ஆர்.ஈஸ்வரன்** எம்.எல்.ஏ
பொதுச்செயலாளர், கொ.ம.தே கட்சி

திரு. **தி.வேல்முருகன்** எம்.எல்.ஏ
தலைவர், தமிழக வாழ்வுரிமை கட்சி

தோழர். **இரா.முத்தரசன்**
மாநிலச் செயலாளர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

ஆசிரியர் **கி.வீரமணி**
தலைவர், திராவிடர் கழகம்

தோழர். **கே.பாலகிருஷ்ணன்**
மாநிலச்செயலாளர், சி.பி.ஐ (எம்)

பேராசிரியர் **கே.எம்.காதர் மொகிதீன்**
தேசியத் தலைவர், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்

பேராசிரியர் **எம்.எச்.ஜவாஹிருல்லா** எம்.எல்.ஏ
தலைவர், மனிதநேய மக்கள் கட்சி

தோழர். **என்.கே.நடராஜன்**
மாநிலச் செயலாளர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மா-லெ விடுதலை)

தோழர். **அ.மு.சலீம்**
மாநிலச் செயலாளர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, புதுச்சேரி

தோழர். **சி.மகேந்திரன்** தோழர். **மு.வீரபாண்டியன்** தோழர். **எம்.ஆறுமுகம்**

**நன்றியுரை**
தோழர். **எம்.ரவி**
செயலாளர், வரவேற்புக்குழு

ஆகஸ்ட் 09 - **வெள்ளையனே வெளியேறு!** என்று நாடு முழங்கிய வரலாற்றுப் புகழ் நாளில்

## மக்கள் விரோத மோடி அரசே வெளியேறு!

# பேரணி - பொதுக்கூட்டம்

09-08-2022 செவ்வாய் கிழமை மாலை 4.00 மணி பத்மினி கார்டன் மைதானம், காங்கேயம் சாலை, திருப்பூர்

**சிறப்புரை தோழர்கள்**

**டி.ராஜா** முன் எம்.பி.
பொதுச் செயலாளர்

**இரா.நல்லகண்ணு**

**தலைமை : கே. சுப்பராயன்** எம்.பி.

அமர்ஜித் கவுர் தோழர் கே.நாராயணா பினாய்விஸ்வனம் எம்.பி.
ஆனி ராஜா | இரா.முத்தரசன்
சி.மகேந்திரன் | மு.வீரபாண்டியன்
எம்.ஆறுமுகம் | எம். ரவி
ஆர்.பாலசுப்பிரமணியம் எஸ்.ரவிச்சந்திரன் கே.எம்.இசாக்

பிற்பகல் 3.00 மணிக்கு ஸ்ரீ சக்தி திரையரங்கம் அருகில் இருந்து **செம்படை பேரணி** புறப்படும்

அனைவரும் வாரீர் - மாநாட்டு வரவேற்புக் குழு

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.